லாவிநோத சமஸ்தானங்கள்



பரிதி அறிவுக்கதிர் 1.

லீலாவிநோத

சமஸ்தானங்கள்

தெலுங்கில்

நாரள வேங்கடேசுவர ராவ்

எழுதிய

"சுதேச சமஸ்தானங்கள்"

என்னும் நூலைத் தழுவியும் கூட்டியும்

லி. ரா.

எழுதியது.

வெளியிடுவோர்:

சௌத் இந்தியன் பப்ளிஷர்ஸ் லிமிடெட்

ஜி. டி. சென்னை.

1939

–து. இப்
மஹாராஜாக்
கை வரலாறு

புறவுரை

''லீலாவிநோத சமஸ்தானங்கள்'' என்னும் பெயரிய இச்சிறு நூல், தெலுங்கில் வெளியான 'சுதேச சமஸ்தானங்கள்' என்னும் நூலைப் பெரும்பாலும் தழுவி எழுதப்பட்டதாகும். இதைத் தமிழ்ப் படுத்திக்கொள்ளுமாறு அன்புடன் உரிமை அளித்த அதன் ஆசிரியர் தோழர். நாரள வேங்கடேசுவர ராவ்காருக்கு முதலில் எனது நன்றியை உரிமை செய்கிறேன். சுதேச சமஸ்தானுதிபதிகளைப்பற்றி ஜான்கந்தர் வெளியிட்ட உண்மைகள் இறுதியில் அநுபந்தமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. தோற்றுவாயில் சுதேச சமஸ்தானக் கிளர்ச்சி வரலாறுகள் சுருக்கமாக விளக்கப்பட்டிருக்கின்றன. இவ்விரு பகுதிகளும் முதனூலில் இல்லை. புதியவை. சுதேச சமஸ்தானப் பிரஜா மண்டலியின் மாஜி தலைவரும், சிறந்த அறிஞருமான டாக்டர் பி. பட்டாபி சீதாராமையா அளித்துள்ள சிறப்புரை பெரிதும் போற்றத்தக்கதாகும். இப்பொழுது சுதேச சமஸ்தானங்களில் பொறுப்பாட்சிப் போர் மூண்டுவிட்டது. இப்போருக்கு மூலகாரணங்களாகவுள்ள மஹாராஜாக்களின் அதிசய ஆடம்பர வாழ்க்கை வரலாறு

களையும், கண்ணற்ற ஆட்சி முறைகளையும் எடுத்துக்காட்டுவதே இந்நூலின் முக்கிய நோக்கம். துன்ப விடுதலைக்குப் போராடும் சமஸ்தானக் குடிமக்களின்பால், தமிழ் மக்கள் அன்பும் ஆதரவும் காட்ட, இந்நூல் ஓரளவேனும் உதவியாக விளங்கும் என்பது எனது நம்பிக்கை. தமிழகம் இந்நூலை ஆதரித்து எனக்கு இத்தகைய முயற்சிகளில் மேன்மேலும் ஊக்கம் உண்டாக்கும் என்று எதிர்பார்க்கிறேன். தக்க சமயத்தில் வெளிவர வேண்டும் என்று மிக விரைவாக எழுதி முடிக்கப் பெற்ற இந்நூலில், குற்றம் பொறுத்துக் குண மேற் கொள்ளல் கற்றறிந்த மேலோர் கடன்.

சென்னை,
25-3-39.

வ. ரா

சமஸ்தானங்களும் சமஷ்டியும்

டாக்டர் பி. பட்டாபி சீதாராமையா

[அகில இந்திய சமஸ்தான பிரஜா மண்டலி மாஜி தலைவர்]

1

இது அற்புதமான யுகம். நூற்றாண்டுகளில் நடைபெறத்தக்க முன்னேற்றம் பத்தாண்டுகளில் நடக்கிறது. பத்தாண்டுகளில் நடக்கத்தக்கது இரண்டு மூன்றாண்டுகளில் நடந்துவிடுகிறது. மாகாணங்களையும் சமஸ்தானங்களையும் ஒரே அரசாங்கத்திற்குள் கொண்டு வருவதற்காக உள்ள ஏற்பாடு சமஷ்டி முறை. இது என்றைக்கோ தீராப் பொறியாய் ஏற்படவேண்டிய விவகாரம். இதில் சமஸ்தானக்குடிகளுக்கு இருக்க வேண்டிய உரிமைகள் சம்பந்தமாக அடைந்துள்ள வளர்ச்சி ஆச்சரியமானது. இரண்டு ஆண்டுகளுக்கு முன் அகில இந்திய சமஸ்தானப் பிரஜைகள் மகாநாடு கராச்சியில் கூடியது. "சமஸ்தான மக்களுக்கு ஓட்டுரிமை இருக்கவேண்டும்; சமஷ்டி சட்டசபைகளில் அவர்கட்குச் சரியான பிரதிநிதித்துவம் இருக்கவேண்டும்; பேச்சுரிமை, எழுத்துரிமை, கூட்டம் நடத்தும் உரிமை முதலியன இருக்க வேண்டும்; இந்த உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு, அவசியமானால், இந்திய சமஷ்டி கோர்ட்டுக்குப்

போக வழி இருக்கவேண்டும்'' என்று தீர்மானித்தது. இவைகளை நிறைவேற்ற ஒரு திட்டமும் வகுத்தது. அக்காலத்தில் ஷை மகாநாட்டு நிர்வாகிகளேனும், மற்றவர்களேனும் இரண்டாண்டுகளில், இந்தக் கோரிக்கைகள், பிரிட்டிஷ் அரசாங்கத்தாரின் கவனத்தை ஈர்க்கும் என்று நினைக்கவே இல்லை. அவ்வளவு விபரீதமாகக்காணப்பட்டன. 1936ஆம் ஏப்ரல்மீ லக்ஷ்மணபுரியில் நடந்த இந்திய தேசிய காங்கிரஸ் மஹா சபையில், மேற்கண்ட தீர்மானங்களைக் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டும் என்று முயற்சித்த போது—புதுமையாயிருந்ததால்—அவைகட்கு மிகுந்த எதிர்ப்பு இருந்தது. கராச்சி மஹாநாட்டுக்குப் பிறகு நாங்கள் தென் மஹாராஷ்டிரத்தைச் சேர்ந்த இருபத்திரண்டு சமஸ்தானங்களிலும், கத்தியவாரைச் சேர்ந்த பதினைந்து சமஸ்தானங்களிலும், திருவாங்கூர், கொச்சி, மைசூர் சமஸ்தானங்களிலும் சுற்றுப்பிரயாணம் செய்தோம். இவ்வாறு சுற்றுப்பிரயாணம் செய்த பிறகு நவஸாரியில் சமஸ்தானப் பிரஜா சங்கங்களின் கன்வென்ஷனை நடத்தினோம். அந்தக் கூட்டத்தின் மூலம் வெளியான உணர்ச்சியைக்கண்டு இரண்டாண்டுகளில் இவ்வளவு முன்னேற்றம் எப்படி ஏற்பட்டது என்று வியந்தோம். ஒரிஸ்ஸா மாகாணத்திலுள்ள சமஸ்தானங்கள் ஒரு மஹாநாட்டை நடத்தின. பொதுவாக ஒரிஸ்ஸா மாகாணமே அவ்வளவு முன்னேற்றம் அடைந்தது அன்று. அங்கியில் சமஸ்தானப் பிரஜைகள் மகாநாடு நடத்தும் உணர்ச்சி பெற்றிருந்தது வியப்பாயிருந்தது. பஞ்சாப் சமஸ்தானங்கள்கூட இப்படியே ஒரு மஹாநாட்டை நடத்தின. தென் மஹாராஷ்டிர சமஸ்தானங்கள் இரண்டு மஹாநாடுகளை நடத்தின. முதல் மஹாநாட்டில் கே. எப். நரிமன்

தலைமை வகித்தார். இரண்டாவது மஹாநாடு 1938ஆம் மேயீ 22உ ஸர்தார் வல்லபாய் படேல் தலைமையில் நடந்தது. காங்கிரஸ், சமஸ்தானங்கள் என்ற பிரிவினையை ஒன்றாக்கும் முயற்சி நவஸாரியில் தொடங்கியது. ஹரிபுர காங்கிரஸில் அது உருப்பெற்று ஓரளவு வெற்றி பெறுவதற்கு ஸர்தார் வல்லபாய் படேல் தென்மஹாராஷ்டிர சமஸ்தானங்கள் மஹாநாட்டில் தலைமை வகித்தது பேருதவியாயிருந்தது. இப்பொழுது காங்கிரஸுக்கும் சமஸ்தானங்களுக்குமிடையே மாறுபட்ட உணர்ச்சி இல்லை; அவை பரஸ்பரம் குணத்தோஷம் சொல்லிக் கொள்ளுவதில்லை. இந்தக் காரியங்களுக்குப் பிறகு நடைபெற்ற மைசூர் பயங்கர நிகழ்ச்சிகளால் இரண்டு விஷயங்கள் உறுதியாகின்றன. இவற்றுள் முதலாவது: சமஸ்தானப் பிரஜைகளின் எதிர்கால வாழ்வு பெரும்பாலும் அவர்களுடைய சுயமுயற்சிகளையே பொறுத்தது என்பது, இரண்டாவது: தங்கள் சமஸ்தானம் பற்றிய விவகாரங்களைத் தீர்த்துக்கொள்ள வழி கண்டுபிடித்து, சமஸ்தானப் பிரஜைகள், காங்கிரஸின் செல்வாக்கைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது.

2

முக்கியமான இரண்டு விஷயங்களை நாங்கள் சாதிக்கலானோம். இவற்றுள் முதலாவது இது: சமஸ்தான விவகாரங்களில் இப்பொழுதிருப்பது போலன்றி, இனிமேல் அதிகமாகவும், விரைவாகவும் சிரத்தை காட்ட வேண்டும் என்னும் உண்மையைக் காங்கிரஸ் ஒப்புக்கொள்ளுமாறு செய்தோம். இரண்டாவது: காங்கிரஸ் மாபெருந்தலைவரும், காங்கிரஸுக்கு வழிகாட்டும் உத்தமருமான மஹாத்மாகாந்தி சமஸ்தான இயக்கத்தின் முக்

கியத்தை உணர்ந்து கொண்டார். இனி, நடக்கவேண்டிய காரியம் வெகு எளிதாணதே! இந்தியாவின் நிலைமைகளை நேரில் அறிந்துகொள்ளச் சிறந்த அரசியல் அறிஞரான லோதியன் பிரபு இந்தியாவுக்கு வந்தார். இங்கே வந்த பிறகு அவர் கண்டறிந்த உண்மை என்ன? சமஷ்டி சட்டசபையில், சமஸ்தானப் பிரஜைகளுக்குச் சரியான பிரதிநிதித்துவம் இல்லாவிட்டால் சமஷ்டி அரசியல் சரிவர நிறைவேருது என்னும் உண்மையை விரைவில் உணர்ந்தார். இந்திய அரசியல் வாதிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றிவைக்கப் பிரிட்டிஷ் பார்லிமெண்ட், இந்திய அரசியல் சட்டத்தை மாற்ற அநுகூல மனப்பான்மை காட்டாது என்று அவர் கூறினர். அப்படிக் கூறியவர் சமஸ்தான பிரஜைகளின் கோரிக்கைகளைப் பற்றி என்ன சொன்னர்? சமஸ்தானப் பிரஜைகளின் கோரிக்கைகளை நிறைவேற்றி அவர்களைத் திருப்திப்படுத்த ஏதேனும் முயற்சி செய்யாமல் தீராது என்ருர். இதை அவரால் ஒப்புக்கொள்ளாமல் இருக்க முடியவில்லை. லோதியன் பிரபுவுக்குப் பிறகு ஸாமுயல் பிரபு வந்தார். இவரும் லோதியன் காட்டிய சிரத்தையைப் போலவே—லோதியனை விட அதிகப் பொறுமையுடன்—இந்தியப் பிரச்சினைகளை ஆராய்ந்தார். மத்திய சட்டசபையில் சமஸ்தானப் பிரஜைகளுக்குச் (சமஸ்தானதிபதிகளின் மூலம் அன்றி) சரியான பிரதிநிதித்துவம் இருக்கவேண்டும் என்ற முடிவுக்கே வந்தார். 1938ஹு மேயீ 28உ இந்தியா மந்திரி ஜெட்லண்ட் பிரபு பிரசங்கம் செய்தார். அந்தப் பிரசங்கத்தில், அதிருப்திகரமான விஷயங்கள் எவ்வளவிருந்த போதிலும், சமஸ்தானப் பிரஜைகளின் கோரிக்கைகளை—இந்திய அரசியல் சட்ட வரம்பு கடவாமலே—நிறைவேற்றி

வைக்கச் சந்தர்ப்பம் இல்லாமல் போகவில்லை என்னும் ஆசையை அவர் வெளிப்படுத்தினர். அதன் அர்த்தம் என்ன ? சமஸ்தானங்கள் சமஷ்டியில் சேருமுன் கவனிக்க வேண்டிய ஷரத்துக்களில் (**Instrument of Association**) லேயே சமஸ்தானதிபதிகள் சமஷ்டி சட்டசபைகளுக்குப் பிரதிநிதிகளை அனுப்புவதில் தங்களுக்குள்ள அதிகாரங்களைப் பிரஜைகளுக்கும் பங்கிட்டுக் கொடுக்கவேண்டும் என்ற விதி இருக்கிறது. இதையே இன்னொரு விதமாகவும் சொல்லலாம். அநேகமாய் பெடரல் அஸெம்பிளி (**Lower House**) பிரதிநிதிகளைச் சமஸ்தானப் பிரஜைகள் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும், பெடரல் கௌன்சில் (**Upper House**) பிரதிநிதிகளைச் சமஸ்தானதிபதிகள் நியமனஞ் செய்யலாம் என்றும் ஏற்பாடு செய்வது. இரண்டாண்டுகள் சமஸ்தானங்களில் அதிதீவிரமாகப் பிரசாரம் செய்ததாலும், அகில இந்திய காங்கிரஸில் சமஸ்தானப் பிரச்சினைகளை இடையருமல் வலியுறுத்திக் கொண்டு வந்தாலும்—இவ்வேலை விரோத உணர்ச்சியுடன் செய்யப்படவில்லை; நட்பு முறையிலேயே செய்யப்பட்டது—இந்திய அரசியல் விவகாரங்களில் சமஸ்தானப் பிரஜைகளின் இயக்கத்திற்கு முதன்மை கிடைக்குமாறு செய்யப்பட்டது. மேலும் இவர்களுடைய கோரிக்கைகளுக்கு ஆதரவு சம்பாதிப்பதும் சாத்தியமாயிற்று.

3

பொறுப்பாட்சியின் பொருட்டு மைசூரில் நிகழ்ந்த கிளர்ச்சியைப்பற்றி இதற்குமுன் எடுத்துக்காட்டப்பட்டது. இந்தக் கிளர்ச்சியின்போது அங்கே நடைபெற்ற கோரச் செயல்களைப்பற்றி அச்சமஸ்தானப் பிரஜைகள் வெட்கப்

படவேண்டியது ஒன்றும் இல்லை. அச்சமஸ்தானத்தார் கர்வப்படவேண்டியதும் ஒன்றும் இல்லை. எது எப்படி நடந்தாலும் கடைசியில் உடன்படிக்கை ஏற்பட்டது. வரப்போகும் ஓரிரண்டாண்டில் மைசூரில் ஏற்படும் முன்னேற்றம், மற்றச் சமஸ்தானாதிபதிகளுக்கு அவர்கள் மேற்கொள்ளவேண்டிய வழியைத் தெரிவிப்பதோடு எச்சரிக்கையாகவும் உதவலாம்.

திருவாங்கூர் சமஸ்தானம் மைசூருடன் சேர்ந்து கொள்ளத் தயாராக இருக்கிறது. உண்மையில், மைசூர் அரசியல் முறையைவிடத் திருவாங்கூர் அரசியல் முறையே சிறந்ததாக இருக்கிறது. அதனால் மைசூரை விடத் திருவாங்கூரே முன்னடிவைக்கும் என்று ஆசைப் பட்டோம். ஆனால் அது பின்னடைந்தது. அவ்விடத்திய தேசியம் இன்னும் பக்குவம் அடையவேண்டும் போலும்!

கொச்சி சமஸ்தானப் பிரஜைகளுக்குக்கூடக் காங்கிரஸ் பக்தி அதிகம். அந்தச் சமஸ்தானத்துத் திவான் (ஸர் சண்முகம் செட்டியார்) முதலிலேயே விழித்துக்கொண்டார். ஓரளவு பொறுப்பாட்சி முறையை அமலுக்குக் கொண்டுவந்துவிட்டார். கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றிவைக்கு முறையில் பிரஜைகள் தேர்ந்தெடுத்த மந்திரியையும் நியமித்துவிட்டார்.

அரசியல் பிரச்சினைகளைக் குறித்து விசாரிக்கப் பாட்டியாலா சமஸ்தானம் ஒரு கமிஷனை நியமித்தது. கபுர்தாலாவிலும் இதே ஏற்பாடு நடந்தது. ஒரு காலத்தில், பரோடா முன்னேற்றத்திற்கு வழிகாட்டியாயிருந்தது. ஆனால் இப்பொழுது அது பின்னடைந்து நிற்கிறது. நல்ல

பெயரெடுத்துக் கொண்டிருந்த போப்பால் இப்பொழுது கெட்ட பெயரெடுத்துக் கொண்டிருக்கிறது. பிரஜா இயக்கங்களையும், ஜனநாயகக் கொள்கைகளையும் ஆதரித்து ஊக்கமளித்தமைக்காக அச்சமஸ்தானம் பத்திரிகைகளின் மீது தடையுத்தரவுகளைப் பிறப்பித்துக்கொண்டிருக்கிறது. அடக்குமுறைச் சட்டங்களை அமல் நடத்துகிறது. அவ்விடத்திய பேர்பெற்ற பத்திரிகைகள் அடக்குமுறைகளுக்குப் பலியாகிவிட்டன. அடிக்கடி கேட்கப்படும் அதிகப்படியான ஜாமீன் தொகைகளைக் கட்ட முடியாமல் போனதால் சென்ற மூன்றாண்டுகளில் பல அச்சுக்கூடங்கள் மூடிக்கட்டவேண்டியதாயிற்று. முன்னேற்றத்திற்கு ஆக்கம் அளிக்கும் விஷயங்களை அங்கேயே அச்சிட்டுக் கொள்ளவோ, வெளியிலிருந்து வரவழைத்துக்கொள்ளவோ பிரஜைகளுக்கு வழியில்லை. சமஸ்தானத்தில் உள்ள ஒவ்வொரு தபாற்சேவகனும் சி. ஐ. டி.களின் ஜோடு தூக்குகிறவனாகவே இருக்கிறான். கொஞ்சம் சந்தேகம் தோன்றினால் போதும்—கடிதமோ, புக்போஸ்டோ, பார்சலோ ஜப்தியாகிவிடும். பிரஜைகளைப் பீதிகொள்ளச் செய்யவும், அவர்களுடைய பிரஜா உரிமைகளைப் பறிமுதல்செய்யவும் போப்பால் சமஸ்தானம் முயசித்துக்கொண்டிருக்கிறது. தேவாலயம் பற்றியதாயினும், மசூதி பற்றியதாயினும்—அவை நான்கு மைல்களுக்கு அப்பால் இருந்தாலும் சரி—நகர மாஜிஸ்ட்ரேட்டிடமிருந்து எழுத்து மூலமான உத்தரவு பெற்றாலொழியக் கூட்டம் நடத்த வழியில்லை. இங்கிலையில் அரசியல் சம்பந்தமான கூட்டமாயிருந்தால் கேட்கவேண்டுமா? உத்தரவு கிடைப்பது துர்லபம். பிரஜைகளின் இயக்கத்திற்கு ஆக்கம் அளிக்கும் வெளியார் யாரேனும் சமஸ்தானத்திற்குள் வர விரும்

பினால் அவருடைய வருகையைத் தடை செய்துவிடுகிறார்கள். இப்பொழுது டஜன்கணக்கான பத்திரிகைகள் பகிஷ்காரப் பட்டியில் இருக்கின்றன. இவற்றுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது 'மதீனா' என்னும் வாரமிருமுறை வெளியீடு. இதற்கு மிகுந்த செல்வாக்கு உண்டு.

4

இனி, ஹைதராபாத் சங்கதியைச் சொல்லவேண்டியதில்லை. இங்கே ஒரு கஷ்தீ அமலில் இருக்கிறது. இதன்படி சமஸ்தானத்தில் எங்கே கூட்டம் நடத்த விரும்பினாலும், பதினைந்து நாளைக்கு முன்பே நோட்டீஸ் கொடுக்க வேண்டும். இந்த நோட்டீஸில் கூட்டம் நடக்கும் இடத்தையும் காலத்தையும் குறிப்பிடுதல் மட்டும் போதாது. அங்கே நடக்கும் பிரசங்கங்களையும், நிறைவேற்றும் தீர்மானங்களையும் முதலிலேயே தெரிவித்துவிடவேண்டும்.

இங்கே ஹிந்து—முஸ்லிம் வேற்றுமைகளும் பகைமைகளும் விபரீதமாக வளர்ந்துகொண்டிருக்கின்றன. ஜனத்தொகையில் நூற்றுக்குப் பத்துப்பேர் விகிதம் உள்ள முஸ்லிம்களுக்கு நூற்றுக்கு ஐம்பது விகிதம் பிரதிநிதித்துவம் அளிக்க ஹிந்துக்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அப்படியிருந்தாலும், ஜனத்தொகையில் நூற்றுக்குத் தொண்ணூறு விகிதம் உள்ள ஹிந்துக்களுக்கு, நூற்றுக்கு ஐம்பது விகிதம் சமஸ்தான உத்தியோகங்களைக் கொடுக்க முஸ்லிம்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள் இல்லை. இவ்விதம் எல்லாவகையிலும் ஒரு சமூகத்திற்கே பயன் உண்டாக வேண்டும் என்பது தகாது. சொந்த மதம் என்றால் அதிகப் பற்றுள்ளங்கொண்டவர் நைஜாம். அவர் அப்படியிருப்பதில் தொல்லை இல்லை. தொல்லையெல்லாம் இஸ்லாம்

மதத்திற்கு மக்களை மாற்றுவதிலிருந்தே உண்டாகின்றன. ஹைதராபாத்தில் வைரம் முற்றி வருகிறது. மைசூரில் எழுந்ததுபோல் இங்கும் பெரிய புயல் கிளம்பினால் நாம் ஆச்சரியப்படவேண்டியதில்லை. (இப்பொழுது புயல் அடித்துக்கொண்டிருக்கிறது.) ஹைதராபாத்தில் சமய, சமூக இயக்கங்களால் அரசியல் நிலைமை மேன்மேலும் கேடடைந்துவருவது பரிதபிக்கத்தக்க விஷயம். மக்கள் இந்தச் சமய, சமூக வேற்றுமைகளைக் கூடியவரை விலக்க வேண்டும் என்றே நான் மனப்பூர்வமாய் ஆசைப்படுகின்றேன்.

5

நரேந்திர மண்டலியின் தலைமைப் பதவியை அலங்கரித்த பாட்டியாலா மஹாராஜா காலஞ்சென்றார். புதிய மஹாராஜா சிம்மாசனம் ஏறினார். இவருடைய ஆட்சியில் மக்களின் பிரஜா உரிமைகள் அங்கீகாரம் பெறும் என்று நம்புகின்றேன். தம்முடைய சமஸ்தானப் பிரஜைகளில்—எவ்வளவு கீழ் நிலையில் இருப்பவனானாலும் சரி—அவன் தன்னுடைய இன்ப துன்பங்களை விண்ணப்பித்துக் கொள்ள எத்தகைய தடையுமின்றித் தம்மிடம் வரலாம் என்று புதிய மஹாராஜா சொன்னாராம். இது மகிழ்ச்சிக்குரிய விஷயம்.

சமீபத்தில் காஷ்மீரத்தில் பெரும் புயல் கிளம்பியது. ஹைதராபாத் நிலைமைக்கும் காஷ்மீர நிலைமைக்கும் தலைகீழான வேற்றுமை உண்டு. இங்கே நாம் ஒரு விஷயத்தை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். குடியரசு முறையை நிலைநிறுத்தப் பிரிட்டிஷ் இந்தியாவாவது, முன்னடி வைக்கும் சமஸ்தானங்களாவது அநுபவிக்கும் கஷ்டங்களை

ஒவ்வொரு சமஸ்தானமும் அநுபவிக்கவேண்டிய அவசியம் இல்லை. பிரிட்டிஷ் இந்தியாவில் ஐம்பதாண்டுகள் கிளர்ச்சி செய்த பிறகு, ஒத்துழையாமையில் தொடங்கி, சத்தியாக்கிரகம், வரி கொடாமை ஆகியவற்றுடன் ஒரு பூர்த்தியான முறையை நாம் கண்டுபிடித்தோம். பொதுஜனக் கிளர்ச்சியில் பிரிட்டிஷ் இந்திய மக்கள் எங்கே வந்து நின்றுவிட்டனரோ சரியாக அங்கிருந்தே மைசூர் சமஸ்தானப் பிரஜைகள் முன்னே சென்றார்கள். இது நடந்த கதையே மறுபடியும் நடந்ததன்று; ஒவ்வொரு கட்டம் வீதம் கதை மேலே நடந்ததாகும்! மைசூர், திருவாங்கூர், கொச்சி, பரோடா ஆகியவை முன்னணியிலேயே இருக்கின்றன. பாட்டியாலா இவைகளைப் பின்பற்றுகின்றது. ஹைதராபாத், நாபா, கபுர்தாலா, குவாலியர், இந்தூர் முதலிய பெரிய சமஸ்தானங்கள் குடிகளுக்குப் பிரஜா உரிமைகளைக் கொடுத்துப் பொறுப்பாட்சி முறைக்கு ஏற்பாடு செய்கின்றன. மக்கள் விருப்பத்திற்குட்படும் உண்மையான சமஷ்டி ஏற்பாடு வேண்டுமென்றால் இது நடைபெற வேண்டியது அவசியம்.

6

மஹாராஜாவின் ஆதீனத்திற்குட்பட்டு, பொறுப்பான ஜனநாயக ஆட்சி முறை ஏற்படுமாறு செய்யவேண்டும் என்ற உத்தேசத்துடன் புறப்பட்ட மேவார் பிரஜா மண்டலியை உதயப்பூர் சமஸ்தானத்தில் தடைசெய்ததாகச் சமீபத்தில் வட இந்தியப் பத்திரிகைகளின் மூலம் தெரிந்தது. பிரஜா மண்டலி காரியதரிசியைச் சமஸ்தானத்தை விட்டு வெளியேறச் சொன்னார்கள்.

இந்த எதேச்சாதிகாரம் மக்களிடையே மிகுந்த அமைதிக் குறைவை உண்டாக்கி விட்டது என்பதைத்

தனியே குறிப்பிட வேண்டியதில்லை. உதயப்பூர் தர்பார் உத்தரவை இந்தியாவில் உள்ள ஒவ்வொரு நாகரிக மனிதனும் அருவருக்க வேண்டியிருக்கிறது. மற்றச் சமஸ்தானங்களில்—சரியான பொறுப்பாட்சி முறை அன்றேனும்—குறைந்தபக்ஷம் பிரஜைகளுக்குப் பிரதிநிதித்துவம் பொருந்திய சட்ட சபைகளின் அமைப்புக்குரிய ஏற்பாடுகளேனும் நடைபெற்றுக் கொண்டிருக்கையில், உதயப்பூர் போன்ற சமஸ்தானம் இந்தக் குறுகிய வழியில் சென்றது வருந்தத்தக்கது.

7

ஹைதராபாத் சமஸ்தானத்தில் உள்ள குறைகளை அறியாதவர்கள் இருக்கமாட்டார்கள். நைஜாமின் தற்கால ஆட்சி முறையில் சில நல்ல அம்சங்கள் இல்லாமல் போகவில்லை. ஆனால் இந்த முறை பிரஜா உரிமைகளையும், மற்ற ஜீவாதாரமான முக்கிய உரிமைகளையும் அழித்துக்கொண்டிருக்கிறது. ஹைதராபாத் சுதந்தரம் தேடிக்கொண்டால், மறுகணத்திலேயே எஞ்சியுள்ள இந்தியா தேசம் சுதந்தரம் அடைந்தது போலவே ஆகும். அதனால் இந்திய சமஸ்தானங்கள் எல்லாவற்றுள்ளும் பெரிதான இந்தச் சமஸ்தானத்தில் பெரும்பாலோராகவுள்ள நம்முடைய ஆந்திரர்களுக்கு அரசியல் அறிவை உண்டாக்குவது நம் கடமை. அதனால் இந்நூல் வெளிவருவது மிகவும் பொருத்தமாகவும் சமயோசிதமாகவும் இருக்கிறது. வெவ்வேறு மாகாணங்களையும், சமஸ்தானங்களையும், சமஸ்தானப் பிரஜைகளையும் ஒன்றுபடுத்தக் கூடியதான சமஷ்டியின் திறத்தில் இப்புத்தகம் மக்கள் கவனங்களைத் திருப்பக்கூடும் என்றே நான் ஆசைப்படுகின்றேன். இது எல்லாருடைய அன்பையும் ஆதரவையும் பெறும் என்றும் நம்புகின்றேன்.

தோற்றுவாய்

அகில இந்திய நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கு சுதேச சமஸ்தானங்கள்! அகில இந்திய ஜனத்தொகையில் ஐந்தில் ஒரு பங்கினர் சமஸ்தானப் பிரஜைகள்! இப்படியிருக்கும்போது சுதேச சமஸ்தானப் பிரச்சினைகள் முக்கியமில்லை என்று யாரேனும் கூறத் துணிவரோ?

ஹைதராபாத் சமஸ்தானம் நிலப்பரப்பில் இத்தாலி நாட்டுக்குச் சமமானது. மைசூர், அயர்லாந்துக்கு ஏக தேசம் ஒப்பானது. பிக்கானிர் கிரீஸுக்கு நிகரானது. ஜெயப்பூர் சுவிட்ஜர்லந்துக்குப் பின்னடையாது. ரீவா பெல்ஜியத்தைவிடப் பெரியது. இந்த உண்மைகளை யார் கவனிக்கிறார்கள்? இந்திய மக்கள் கோரிக்கைகளின் பிரதிபிம்பமாக விளங்கும் காங்கிரஸ் மஹாசபையே சமீப காலம் வரை சுதேச சமஸ்தான விவகாரங்களைப் பற்றித் தகுந்த சிரத்தை காட்டவில்லை. ஆனால் இப்பொழுதுள்ள நிலைமை வேறு. காந்தியடிகளே ராஜகோட் கிளர்ச்சியின் மூலம் போர்க்கோலம் பூண்டுவிட்டார். எனவே சமஸ்தானப் பிரஜைகளின் கஷ்ட நஷ்டங்களைத் தீர்க்கக் காங்கிரஸே நேரடியாகத் தலையிடும் காலம் வந்து விட்டது. இந்திய சுதந்தரப் போராட்டத்தில் சுதேச சமஸ்தானப் பிரச்சினைகள் வெகு முக்கியமானவை என்னும் உண்மையை இப்பொழுது எல்லாரும் உணர்ந்துகொண்டு வருகிறார்கள்.

இன்று சமஸ்தானப் பிரஜைகளே வரிந்து கட்டிக்கொண்டு கிளம்பிவிட்டார்கள். எவ்வளவு தடைகளும் அடக்குமுறைகளும் இருந்தபோதிலும் அநேக சமஸ்தானங்களில் பிரஜா மண்டலிகள் ஏற்பட்டுக்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

சமஸ்தானப் பிரஜைகளின் கிளர்ச்சிகளில் நம்மால் நேரடியாகப் பங்கெடுத்துக் கொள்ள முடியாமல் இருக்கலாம். ஆனல் அவர்களுடைய கோரிக்கைகளுக்குச் சமஸ்தானங்களைச் சேராத இந்திய மக்களாகிய நாம் அன்பும் அநுதாபமும் காட்டக்கடமைப்பட்டிருக்கின்றோம். இந்த உணர்ச்சிகூடக் காட்டாம லிருந்தால் நாம் சுயராஜ்யத்திற்கே தகுதியற்றவர்கள் என்ற பழிக்கு உட்படவேண்டியவர்களாவோம்.

விசித்திர விநோதங்கட்குச் சமஸ்தானங்கள் பிறப்பிடங்கள் எனலாம். மக்கள் தீராத வறுமைக் கொடுமைகளை அநுபவித்துக்கொண்டிருக்கையில், அவர்களை ஆள்வோர் நாய்களின்மீது மோகம் வைப்பது ஒரு விசித்திரம். உலக மக்கள் எல்லாரும் 'சுயேச்சை, சுதந்தரம்' என்று முழங்கிக்கொண்டிருக்கும்போது 'பேகாரி—அடிமை' வழக்கம் நிலவி வருவது மற்றொரு விசித்திரம். கட்டாய இலவசக் கல்வி முறையே வேண்டும் என்று மக்கள் போராடி வெற்றி பெற்றுக்கொண்டிருக்கும் காலத்தில் பத்துப் பதினைந்து கிராமங்களுக்கு ஒரு பள்ளிக்கூடமேனும் இல்லாமல் இருப்பது இன்னொரு விசித்திரம். சுயேச்சை வர்த்தகக் கொள்கையே சிறந்தது என்று உலகம் போற்றி வரும் இந்நாளில் ஜீவாதாரமான தினசரி வாழ்க்கைக்குரிய வஸ்துக்களைக்கூட ஏலத்தில் விட்டு லைசென்சு வாங்கச்

செய்யும் ஏற்பாடு வேறொரு விசித்திரம். நம் சமஸ்தான விசித்திரங்களுக்கு முன் எகிப்து பிரமிட்கள், பைஸா லீனிங் டவர், நியூயார்க் ஸ்கை ஸ்கிரீப்பர்கள், ஆக்ரா தாஜ்மஹால் முதலிய உலகப்பிரசித்தி பெற்ற விசித்திரங்கள் எவையும் முன்னிற்கமாட்டா. இத்தகைய விசித்திர சமஸ்தானாதி பதிகளின் ஆடம்பர அட்டூழிய லீலாவிநோதங்களை ஒவ்வொருவரும் கட்டாயம் அறிந்து தீரவேண்டும். அவைகள் எல்லாம் அசைக்க முடியாத தக்க ஆதாரங்களுடன் பகுதி பகுதியாக எடுத்துக் காட்டப்படும்.

இச்சமஸ்தானாதிபதிகளுடைய ஆட்சியின் கீழ் உள்ள மக்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? அவர்களுக்கு எப்பொழுது விழிப்பு ஏற்பட்டது? அவர்களுடைய கிளர்ச்சியின் விளைவுகள் எவை? முடிவு என்னாகும்? என்பன போன்ற விஷயங்களை முதலில் அறிந்து கொள்ளல் நலம். சமஸ்தான மக்கள் எவ்வளவு காலம் இருளில் மூழ்கிக் கிடப்பார்கள்? கொஞ்சங் கொஞ்சமாய் விழித்துக்கொண்டனர். சமஸ்தானப் பிரஜைகளின் இயக்கம், இப்பொழுது இந்திய அரசியலில் முதன்மை பெற்றுவிட்டது என்று கூறலாம்.

1927-ம் ஆண்டு டிசம்பரில் சமஸ்தானப் பிரஜைகள் ஸ்தாபனம் ஏற்பட்ட போதிலும், 1930—31-ம் ஆண்டு சத்தியாக்கிரக இயக்கம் வரை பேச்சு மூச்சின்றி இருந்தது என்றே சொல்லவேண்டும். சத்தியாக்கிரக இயக்க வேகம் சமஸ்தானப் பொதுஜனங்களிடையே அவ்வளவாக விழிப்பு ஏற்படுத்த வில்லை. நடுத்தர வகுப்பைச் சேர்ந்த சிலரை மட்டும் இவ்வியக்கம் கவர்ச்சி செய்தது. அவர்களும் சமஸ்தானப் பிரஜைகளிடையே உணர்ச்சியைக்

கிளப்பவேண்டும் என்று முயற்சி செய்யவில்லை. வெளியே நடைபெற்ற சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டனர். ஆனால் இரண்டொரு சமஸ்தானங்களில் அவ்வியக்கம் பிரஜைகளுக்கு எழுச்சியை உண்டாக்காமல் போகவில்லை. 1931-ல் ஒத்துழையாமை இயக்க வேகம் தணிந்தவுடனே 1932-ல் காஷ்மீரத்திலும், 1933-ல் ஆள்வாரிலும் மக்கள் புரட்சி செய்யத் தொடங்கினர். காஷ்மீர சமஸ்தானாதிபதி ஹிந்து. அவ்விடத்தில் பெரும்பாலான குடிமக்கள் முஸ்லிம்கள். எனவே, அப்போராட்டத்திற்குச் சமய வேற்றுமைச் சண்டை என்று பெயர் வைத்து அடக்கிவிட்டார்கள். இதைச் சமயச்சண்டை என்று சொல்லுவதற்கு ஒரு காரணமும் உண்டு. அப்பொழுதிருந்த குடியானவர் தலைவர்கள் ஒரு தவறு செய்தனர். அதாவது தங்களுக்கு உதவி புரியவேண்டும் என்று பஞ்சாப் முஸ்லிம் லீக் தலைவர்களிடம் சென்றார்கள். 1933-ல் ஆள்வாரில் நிகழ்ந்த புரட்சியைப் பிரிட்டிஷ் சர்க்காரே கிளப்பிவிட்டு அடக்கியது.

சமஸ்தானப் பிரஜைகள் ஸ்தாபனம் : சமஸ்தானப் பிரஜைகள் ஸ்தாபனம் 1927-ல் ஏற்பட்டது என்று மேலே சொல்லப்பட்டது. 1936-ம் ஆண்டு வரை ஆண்டு விழாக் கொண்டாட்டம், சர்க்காருக்கு விண்ணப்பங்களைப் போடுதல், தூது கோஷ்டிகளை அனுப்பல் முதலான வேலைகளைச் செய்வதிலேயே அது திருப்தி அடைந்து கொண்டிருந்தது. மக்களிடையே பிரசாரம் செய்யவேண்டும் என்பது அந்த ஸ்தாபனத்தின் வேலைத் திட்டமாகவே கருதப்படவில்லை. 1929ஆம் மேயீ சமஸ்தானப்பிரஜைகள் சங்கத்தின் இரண்டாவது மகாநாடு நடந்தது. 1931ஆம் ஜூன்மீ மூன்றாவது மகாநாடு, 1933ஆம்

ஜூலை௴ நான்காவது மகாநாடு, 1934௵ பிப்ரவரி௴ டில்லியில் ஒரு தனி மகாநாடு, 1936௵ கராச்சியில் ஐந்தாவது மகாநாடு, 1939௵ பிப்ரவரி௴ லூதியானாவில் பண்டித ஜவஹர்லால் நேரு தலைமையில் ஆறாவது மகாநாடு- இப்படியாக மகாநாடுகள் நடைபெற்றுக்கொண்டு வந்தன. கராச்சி மகாநாட்டுக்குப் பிறகு சமஸ்தானப் பிரஜைகள் இயக்கம் சிறிது சிறிதாக எப்படிப் பரவத் தொடங்கியது என்று ஆராய்வதற்கு முன் அதுவரை ஷை சங்கம் செய்த வேலைகளைச் சுருக்கமாகத் தெரிந்துகொள்ளுவது அவசியம். 1927-ல் சென்னைக் காங்கிரஸுக்கு ஒரு தூது கோஷ்டியை அனுப்பியது. இதன் பயனாக அந்தக் காங்கிரஸில், சமஸ்தானாதிபதிகள், தங்கள் தங்கள் சமஸ்தானங்களில் பொறுப்பாட்சி முறையை ஏற்படுத்தவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. வட்டமேஜை மகாநாட்டின்போது, திவான்பகதூர் எம். ராமச்சந்திர ராவ், புரொபஸர் ஜி. ஆர். அத்தியங்கர், பி. எல். ரூட்கர் ஆகிய அறிஞர்களைப் பட்லர் கமிட்டி முன் தூது போக்கி மகஜர் சமர்ப்பித்தது. பிறகு ஜினிவாவில் உள்ள சர்வதேசத் தொழிலாளர் மகாநாட்டுக்குச் சமஸ்தானங்களின் சார்பில் சென்ற பிரதிநிதிகளிடம் "வெட்டிவேலைச் சட்டங்"களைப் பற்றி ஒரு மிமோரண்டம் அளித்தது.

1936-ல் கராச்சியில் நடந்த ஐந்தாவது மகாநாட்டுக்கு டாக்டர் பி. பட்டாபி சீதாராமையா தலைவர். பட்டாபி அவர்கள் தலைவரான பிறகு மஹாராஷ்டிரம், கர்நாடகம், கத்தியவார் முதலிய சமஸ்தானங்களில் சுற்றுப் பிரயாணம் செய்தார். சில சமஸ்தானாதிபதிகளை நேரில் சந்தித்துக் காலப்போக்கை ஒட்டி நடந்து கொள்ளவேண்டும் என்றும் யோசனை கூறிக்கொண்டு வந்தார். 1937-ம்

ஆண்டிலிந்து சமஸ்தானப் பிரஜைகளிடையே விழிப்பும் எழுச்சியும் வளர்ச்சி பெறலாயின.

1937ஆ மேமீ பஞ்சாப் சமஸ்தானப் பிரஜைகள் மகாநாடு அமிர்தஸரஸில் நடந்தது. ஜூன் மாதத்தில் மஹாராஷ்டிர சமஸ்தானப்பிரஜைகள் மகாநாடு கராச்சியில் நடந்தது. இது நடந்த சில நாளிலேயே ஒரிஸ்ஸா சமஸ்தானப்பிரஜைகள் மகாநாடு கட்டாக்கில் நடைபெற்றது. நவம்பர் மாதத்தில் கத்தியவார் சமஸ்தானப் பிரஜைகள் மகாநாடு நடந்தது. 1938ஆ பிப்ரவரியில் திருவாங்கூர் அரசியல் மகாநாடு நடந்தது. இப்படியாகப் பல்வேறு சமஸ்தானங்களிலும் மகாநாடுகள் நடைபெற்றுக்கொண்டு வந்தன.

1937ஆ இந்தியாவுக்கு புதிய அரசியல் வழங்கப்பட்டது. இதை எதிர்ப்பதற்கு என்று காங்கிரஸ் சட்டசபைத் தேர்தல்களில் தலையிட்டது. இதற்காகத் தீவிரமான பிரசாரம் செய்தது; வெற்றிபெற்றது. 1937ஆ ஏப்ரல்மீ 1உ நாடெங்கும் ஹர்த்தால் நடந்தது. இந்த நிகழ்ச்சிகளெல்லாம் சமஸ்தானப் பிரஜைகளிடையே மிகுந்த ஊக்கத்தையும் உற்சாகத்தையும் ஆவேசத்தையும் கிளப்பிவிட்டன.

மைசூர் :— 1937-ல் மைசூர் அஸெம்பிளித் தேர்தலில், சமஸ்தானக் காங்கிரஸ் கலந்துகொள்ள வேண்டும் என்று உறுதி செய்ததிலிருந்து உரிமை இயக்கம் உருப்பெறலாயிற்று. 1937ஆ அக்டோபர்மீ 24உ பெங்களூர் மாணவர் கூட்டத்தில் நரிமன் பிரசங்கம் செய்யக்கூடாது என்று சமஸ்தானம் தடைசெய்தது. அவர் அதை மீறினர். போலீஸார் மாணவர்கள் மீது தடியடி

தர்பார் நடத்திக் கூட்டத்தைக் கலைத்தனர். மறுநாள் மாணவர் வேலை நிறுத்தம் செய்தனர். நகரம் முழுதும் ஹர்த்தால் அநுஷ்டித்தது. பத்தாயிரம்பேர் அடங்கிய ஊர்வலம் நடத்தப்பட்டது. அதன்மீது போலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். 50 காங்கிரஸ்காரர் கைதுசெய்யப்பட்டனர். பொது ஜனங்கள் எதிர்த்துப் போலீஸ் ஸ்டேஷனைச் சூழ்ந்து கொண்டனர். ராணுவம் வந்து அவர்களைக் கலைக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அன்றுமுதல், சமஸ்தானத்தில் அடக்குமுறை அதிகமாயிற்று. 1938ஆம் ஜனவரி௴ 28உ சுதந்தரநாள் கொண்டாட்டத்தை நடத்தவிடவில்லை.

காந்தியடிகளின் தலையிட்டால், காங்கிரஸ் சமஸ்தான விவகாரங்களில் தலையிடக்கூடாது என்று ஹரிபுர காங்கிரஸ் நிறைவேற்றிய தீர்மானம் மைசூர்சமஸ்தானத்திற்குத் தைரியம் உண்டாக்கியது. எனவே, அரசியல் கைதிகளை விடுதலை செய்தது. அரசியல் சீர்திருத்தத்தின் பெயரால் ஒரு கண் துடைக்கும் கமிட்டியை நியமித்தது. ஆனால் சமஸ்தானக் காங்கிரஸ் அதைப் பகிஷ்கரிக்கவேண்டும் என்று தீர்மானித்துவிட்டது. சீர்திருத்தக்கமிட்டியில் நியமனம்பெற்ற இரண்டு காங்கிரஸ்காரர் ராஜீனாமாச் செய்தனர். சமஸ்தானம் அடக்குமுறையை அதிகமாக்கியது.

மைசூர் ஏதேச்சாதிகார தர்பாரில் சௌரி சௌராக் கொடுமைகளை மறக்கச் செய்வது விதுராஸ்வதம் துப்பாக்கிப் பிரயோகம். 1938ஆம் ஏப்ரல்௴ 26-ந் தேதி விதுராஸ்வதம் என்னும் ஊரில் ஒருபெரிய பொதுக்கூட்டம் நடைபெற்றது. பத்தாயிரம் பேருக்குமேல் வந்திருந்தனர். ஜில்லா மாஜிஸ்ட்ரேட் அங்கே வந்து, இது சட்ட விரோதமான கூட்டம்

என்று அறிவித்தார். ஐந்து நிமிஷங்களில் எல்லாரும் கலை ந்துபோகவேண்டும் என்று உத்தரவிட்டார். ஐந்து நிமிஷம் ஆனவுடனே போலீஸார் சுட்டனர். முப்பத்தாறு பேர் உயிர்விட்டனர். நாற்பத்தெட்டுப் பேர் படுகாய மடைந்தனர். மேயீ 8-ந் தேதி இந்தக் கோர அட்டூழியங்களைக் கண்டிக்க "மைசூர் நாள்" நாடெங்கும் நடத்தப்பட்டது. பிறகு துப்பாக்கிப் பிரயோகத்தைப் பற்றி விசாரிக்க ஸர் வேபர ராமேசம் பந்துலுவைத் தலைமையாகக் கொண்ட ஒருசமிட்டி நியமிக்கப்பட்டது. போலீஸார் தற்காப்பின் பொருட்டே சுட்டனர் என்று தீர்ப்பளித்தது இக்கமிட்டி. இதற்கு நாற்பதாயிரம் ரூபாய் செலவு.

சமஸ்தான ஊழியர் கன்வேன்ஷன்:—ஹரிபுர காங்கிரஸுக்கு முன், சமஸ்தானப் பிரஜைகள் இயக்கத்தில் ஒரு முக்கியமான நிகழ்ச்சி: 1938ஆ ஏப்ரல் 14, 15 தேதிகளில் நவஸாரி (குஜராத்)யில் நடைபெற்ற சமஸ்தான ஊழியர் கன்வென்ஷன். இதற்கு மைசூர், திருவாங்கூர், காஷ்மீர், ஹைதராபாத் முதலிய சமஸ்தானங்களிலிருந்து 100 பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். இதில் இரண்டு முக்கிய விஷயங்கள் விவாதத்திற்கு வந்தன. ஒன்று: சமஷ்டி. இரண்டு: காங்கிரஸுக்கும் சமஸ்தானங்களுக்கும் உள்ள சம்பந்தம். சமஷ்டியை முற்றிலும் விலக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. சமஸ்தான விஷயத்தில் காங்கிரஸ் காட்டும் மனப்பான்மை யாருக்கும் பிடிக்கவில்லை. சமஸ்தானப் போராட்டத்தை வேறு படுத்துவதே காங்கிரஸ் நோக்கம் என்று பிரதிநிதிகள் எல்லாரும் அபிப்ராயம் தெரிவித்தார்கள்.

திருவாங்கூர்:—1937-ல் திருவாங்கூர் சமஸ்தானக் காங்கிரஸ் காணப்பட்டது. தொடக்கத்தில் காங்கிரஸ்காரர் களுக்குள்ளேயே கருத்து வேற்றுமைகள் இருந்தன. ஆனால் திவான் ஸர். ஸி. பி. ராமஸ்வாமி ஐயரின் எதேச்சாதிகாரம் அவர்களை ஒன்றுபடுத்திவிட்டது. 1938ளு பிப்ரவரி மீ' இறு தியிலிருந்து திருவாங்கூர் பயங்கரம் ஆரம்பம். இதற்குக் காரணம் பொறுப்பாட்சிப் பிரசாரம் தீவிரமாக நடைபெற் றதேஆகும். திருவனந்தபுரம், கொல்லம், கோட்டயம் முத லிய இடங்களில் 2 மாதம்வரை கூட்டங்களை நடத்தக் கூடாதெனத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மக்களின் கோரிக்கைகளை அச்சமின்றி வெளியிட்டுக் கொண்டிருந்த தினசரியான "கௌமுதி" யோடு மற்றும் ஆறு பத்திரி கைகளின் பிரசுர உரிமை ரத்து செய்யப்பட்டது. சென்னை யிலிருந்து வெளிவரும் ஆங்கில தினசரியான "இந்தியன் எக்ஸ்பிர"ஸும் தடை செய்யப்பட்டது. மேலும், அச் சமஸ்தானம் பல காலிகட்கும், கூலிகட்கும் ஆக்கமும் ஊக் கமும் அளித்து வந்தது. காங்கிரஸ்காரரைத் துன்புறுத்தல், காங்கிரஸ் கூட்டங்களில் கல்லெறிதல் முதலியன அவர்கள் மணியம். மக்கட்குப் பீதி உண்டாக்கும் முறையில் தெருக் களில் ராணுவ பவனிகள், திவான் புகழ்பாடும் ஊர்வலங் கள் முதலிய ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டன. இவ் வளவு அழகாக ஆட்சிபுரிவதற்காகத்தான் திவான் ஸர். ஸி. பி. ராமஸ்வாமி ஐயரின் உத்தியோக காலம் மீண்டும் நீண்டது!

தொழிலாளரும் காங்கிரஸ்காரரும் மாத்திரமில்லை— திருவாங்கூர் கிளர்ச்சியில் மாணவர்களும் கலந்தனர். அதற்காகக் கலாசாலைகளுக்குள் நுழைந்து அவர்கள்மீது தடியடிப்பிரயோகம் செய்தல் முதலிய கொடுமைகளும்

நடந்தன. மலபாரிலிருந்து 32 தொண்டர்கள் திருவாங்கூரில் சத்தியாக்கிரகம் செய்யும் பொருட்டு செப்டம்பர்மீ 19உ வந்தனர். கிரிமினல் சட்டம் அமலுக்குக் கொண்டு வரப்பட்டது. போலீஸார் அநுமதியின்றிக் கடைத்தெருக் களில் சரக்குகளைக்கூட வாங்க வழியில்லாமல் செய்யப் பட்டது. சிறைகளில் அரசியல் கைதிகளைத் துன்புறுத்தத் தொடங்கினர். அடிகளால் ஒரு தொண்டர் சிறையில் மாண்டார். மாரடைப்பால் திடீரென்று இறந்தான் என்று சமஸ்தானம் கூறியது. ஒரு சிறிய அறையில் 25 பேரைத் தள்ளி அடைத்தார்கள். மூச்சுத் திணறி மூன்று பேர் இறந்தனர்.

இத்தகைய அடக்குமுறைகளை எதிர்க்கக் குடியான வர்கள் வரிகொடா இயக்கத்திற்குத் தயாரானார்கள். ஆனால் காங்கிரஸ் தலைவர்கள் அனுப்பிய மகஜரில் திவான் மீதுள்ள குற்றத்தை வாபஸ் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று காந்தியடிகள் வற்புறுத்தினர். இதனால் இயக்கத் தின் வேகம் சற்றே தணியலாயிற்று. எனினும், இங்கே புயலுக்கான அறிகுறிகள் தோன்றிக் கொண்டிருக்கின்றன.

காஷ்மீரம் :—ரயத்துக்களில் பெரும்பாலோர் முஸ்லிம் கள். 1932-ல் ஏற்பட்ட சண்டை சச்சரவுகள் அடங்கிய பிறகு முஸ்லிம் கான்பரன்ஸ் ஏற்பட்டது. இதன் தலைவர் மஹமது அப்துல்லா. 1938-ல் நடைபெற்ற காஷ்மீர அஸெம்பிளித் தேர்தல்கள் பிரஜைகளின் உற்சாகத்தைக் கொஞ்சம் அதிகப்படுத்தின. 21 ஸ்தானங்களில் 19 ஸ்தா னங்கள் முஸ்லிம் கான்பரன்ஸ்காரர்களுக்குக் கிடைத்தன. அது முதல் சமஸ்தானம் அடக்குமுறைகளை அதிகப்படுத்த ஆரம்பித்தது. 1938ஆு ஆகஸ்டுமீ 29உ 13 முஸ்லிம்

தலைவர்கள் கைதுசெய்யப்பட்டனர். இதைக் கண்டிக்கும் பொருட்டு ஸ்ரீநகர் பட்டுத் தொழிலாளர், கல்லூரி, கலா சாலை மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். ஸ்ரீநகரில் அஜாத் பார்க்கில் பெரிய பொதுக்கூட்டம் நடந்தது. போலீஸார் தடியடிப்பிரயோகம் செய்தனர். கீழ்வரும் முஸ்லிம் கான்பரன்ஸின் கோரிக்கைகளைச் சமஸ்தானம் ஒப்புக்கொள்ளாவிட்டால் சத்தியாக்கிரகம் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது: 1. பொறுப்பாட்சி முறை ஏற்படுத்தவேண்டும். 2. தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிக் குட்பட்டு ரெவினியூ இருக்கவேண்டும். 3. அஸெம்பிளிக்கு நியமன முறை இருக்கக்கூடாது. 4. வயது வந்தவர்களுக்கெல்லாம் வாக்குரிமை இருக்கவேண்டும். 5. பேச்சுரிமை, எழுத்துரிமை, கூட்டம் நடத்தும் உரிமை, பத்திரிகை உரிமைகள் இருக்கவேண்டும்.

ஒரிஸ்ஸா சமஸ்தானங்கள்:—ஒரிஸ்ஸாவில் மொத்தம் 26 சமஸ்தானங்கள். இவற்றுள், நவரா, நீலகிரி, தெங்கனல், தெல்சார், ரான்பூர் சமஸ்தானங்கள் மாத்திரமே முன்னணிக்கு வந்தன. நவரா சிறிய சமஸ்தானம். இங்கே வெற்றிலைக்கொடிக்கால்கள் அதிகம். சமஸ்தானமே இந்த வியாபாரத்தை நடத்தி வருகிறது. 1938-ல் சமஸ்தானம், வெற்றிலை விலையை நான்கு மடங்கு உயர்த்திவிட்டது. இதனால் சத்தியாக்கிரகப் போர் தொடங்கியது. ஆனால், சமஸ்தானத்தின் அடக்குமுறையால் இயக்க வேகம் தணிந்துவிட்டது.

நீலகிரியில் 1938ஆம் ஜூன்மீ முதல் சத்தியாக்கிரகம் ஆரம்பம். சமஸ்தானம் மே மாதத்திலிருந்தே அடக்குமுறையை அதிகமாக்கியது. வாலிபர் சங்கங்கள் மக்க

ளிடையே தீவிரமாய் வேலைசெய்தன. பிரஜா மண்டலிகள் தடை செய்யப்பட்டன. தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். சத்தியாக்கிரகிகள் அடிக்கப்பட்டனர். அவர்களுடைய ஆடைகளை அவிழ்த்துக்கொண்டு அடவிகளில் அலையவிட்டனர். ஜனங்கள் எதற்கும் அஞ்சவில்லை. ஒரு நாள் ஜனப்படை ஒன்று திரண்டது. போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றது. எங்களைச் சிறையில் பிடித்துப்போடுங்கள் என்று கேட்டது. இவ்விதம் இரண்டு மாதம் போராட்டம் நடந்த பிறகு அதிகாரிகள் வழிக்கு வந்தனர். பிரஜா மண்டலியின் கோரிக்கைகள் 31-ல் 17 அங்கீகரிக்கப்பட்டன. சத்தியாக்கிரகம் நிறுத்தப்பட்டது.

1938௵ செப்டம்பர்௴ 1௳ நடந்த கிஸான் நாள் கொண்டாட்டம் தெங்கனால் ரயத்துக்களைக் கிளப்பிவிட்டது. ஜெனப்பூரில் நடந்த கூட்டத்திற்கு வெவ்வேறு கிராமங்களிலிருந்து பதினையாயிரம் குடியானவர்கள் போயிருந்தனர். திரும்பிவந்த மறுநாளே பிரஜாமண்டலிகளை ஏற்படுத்தினார்கள். அவர்கள் தயாரித்த குறைந்தபக்ஷக் கோரிக்கைகள் வருமாறு: 1. கூலியில்லாத வெட்டிவேலை வாங்கும் முறையை ரத்து செய்யவேண்டும். 2. பாரஸ்டுச் சட்டங்கள் முற்றிலும் மாறவேண்டும். 3. வெற்றிலை முதலியவற்றின்மீது சமஸ்தான ஆக்கிரமிப்பு ஒழியவேண்டும். 4. பிரஜா மண்டலியை அங்கீகரிக்கவேண்டும். 5. பொறுப்பாட்சி முறை வழங்கவேண்டும்.

இவைகளை மஹாராஜா ஒப்புக்கொள்ளவில்லை. செப்டம்பர் 11௳ பிரஜா மண்டலியின் தலைவர், காரியதரிசிகளான ஹரமோஹன் பட்நாயக், சுபாகு சிங் உள்ளிட்ட 13 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களைச் சிறைவாயில் வரை

வழியனுப்ப ஆயிரக்கணக்கில் கூடிய ஜனத்திரளின்மீது அதிகாரிகள் யானைகளை விட்டு மிதிக்கச் செய்தனர். தடிகளால் அடித்தனர். ஜனங்கள் கலையவில்லை. துப்பாக்கிகளால் சுட்டனர். நான்குபேர் இறந்தனர்.

தெல்சார் சமஸ்தானத்தில் அடக்கு முறைத் துன்பங்களைப் பொறுக்க முடியாமல் முப்பதினாயிரம் பிரஜைகள் வெளியேறிவிட்டார்கள்.

ரான்பூரில் இருபது விதமான வெட்டி வேலைகள் இருக்கின்றன. 1939௵ ஜனவரி௴ 4-ந்தேதி எங்கேயோ களவு நடந்தது என்று காரணம் காட்டி, பிரஜா மண்டலி அங்கத்தினரைக் கைது செய்தனர். அந்த ஸ்தாபனம் சட்ட விரோதமானது என்று அறிவித்தனர். 5-ந் தேதி தலைவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று ஜனங்கள் கோட்டைப் பக்கம் சென்றனர். அவர்களை அரசியல் ஏஜண்டு பஸல்கெட்டி கைத்துப்பாக்கியால் சுட்டார். 19 பேர் இறந்தனர். மக்களுக்கு ஆத்திரம் பொங்கியது. எதிர்த்தனர். பஸல்கெட்டி இறந்தார். பிரிட்டிஷ் சிப்பாய்கள் வரவழைக்கப்பட்டனர்.

கத்தியவார் சமஸ்தானங்கள்:— கத்தியவாரில் 144 சமஸ்தானங்கள் இருக்கின்றன. அவற்றுள் மான்ஸா, லாவத், நவநகர், ராஜ்கோட் சமஸ்தானங்களில் பிரஜைகளின் இயக்கம் தீவிரமாக இருக்கிறது.

மான்ஸாவில் வரிப்பளுவால் சத்தியாக்கிரகம் தொடங்கப்பட்டது. கொடிய ராக்ஷஸ தர்பார் நடத்தியும், சமஸ்தானத்திற்கு வரவேண்டிய வரித்தொகை பத்துலக்ஷத்து ஐம்பதினாயிரம் ரூபாய்களுக்கு முப்பத்தெண்ணாயிரமே வசூலிக்க முடிந்தது. லாவத் சமஸ்

தான வாசிகளும் சத்தியாக்கிரகத்திற்குச் சன்னத்தமாகி விட்டனர். வரிக்கொடுமையே காரணம்.

ராஜ்கோட், கத்தியவார் சமஸ்தானங்களுக்குள் பெரியது. செப்டம்பர்மீ பிரஜா பரிஷத் கூடியது. கீழ் வரும் கோரிக்கைகளை வெளியிட்டது: 1. நெருப்புப்பெட்டி, சர்க்கரை, நூல் மில் ஆகியவற்றின் மீதுள்ள சமஸ்தான ஆக்கிரமிப்பு ஒழிய வேண்டும். 2. வரிகளின் பொருட்டு விளை பொருள்களைச் செலுத்தும் முறை ஒழியவேண்டும். 3. மில் தொழிலாளர் சங்கத்தை அங்கீகரிக்க வேண்டும். 4. பொறுப்பாட்சி முறை வரவேண்டும். 5. திவானை விலக்கவேண்டும்.

நவம்பர்மீ 2-ந் தேதி தாகூர்ஸாஹிப் நான்குபேர் கொண்ட ஒரு கமிட்டியை நியமித்தார். பிரஜா மண்டலி அதைப் பகிஷ்கரித்தது. சமஸ்தானம் மீண்டும் அடக்கு முறையை அதிகப்படுத்தியது. 1938ஆம் டிஸம்பர் மாதம் இரண்டாயிரம் பேர்வரை கைது செய்யப்பட்டிருந்தனர். தடியடிகளால் 300 பேருக்குமேல் காயமடைந்தனர். பிறகு வல்லபாய் படேலுக்கும் ராஜ்கோட் சமஸ்தானத்திற்குமிடையே சமரஸப் பேச்சுக்கள் நடந்தன. அரசியல் சீர்திருத்தம்பற்றி விசாரிக்க ஒரு கமிட்டி நியமிப்பதாக ஒப்புக்கொள்ளப்பட்டது. அக்கமிட்டியில் படேல் குறிப்பிடும் அறிஞர் ஏழு பேரும், சமஸ்தானம் நியமிக்கும் அறிஞர் மூன்று பேரும் இருக்கவேண்டும் என்பது ஏற்பாடு. ஆனால் அரசியல் ஏஜண்டு இந்த ராஜி ஏற்பாட்டை விரும்பவில்லை. தாகூர் ஸாஹிபை நெருக்கினர். ராஜி முறிந்தது. மீண்டும் போர் கிளம்பியது. கஸ்தூரிபாய் காந்தி, மணிபென் படேல் முதலியவர்கள்

சென்றார்கள். கைதியானார்கள். பிறகு மார்ச்சுமீ 1உ மஹாத்மா காந்தியே ராஜி செய்ய ராஜ்கோட்டுக்கு நேரில் சென்றார். அரசியல் கைதிகளையும், நூறு குடியானவர் களையும் கண்டு பேசினார். 24 மணி நேரத்தில் தம்முடைய நிபந்தனைகளை ஒப்புக்கொள்ளவேண்டும் என்றும், இன் றேல் உண்ணுவிரதம் இருக்கப்போவதாகவும் இறுதிக் கடி தம் விடுத்தார். சமாதானம் கிடைக்காமையால் உண்ணு விரதம் இருந்தார். ஐந்து நாளைக்குப் பிறகு வைஸிராய் தலை யிட்டு உண்ணு விரதத்தை நிறுத்திய செய்தி உலகப் பிரசித்தம்.

மன்னர் திருமால் அவதாரம் என்பது இந்நாட்டுக் கொள்கை. "திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே என்னும்" என்ற திருவாக்கும் இதை உறுதி யாக்கும். அதாவது அரசர் வையங் காவலராயிருப்பதால், காக்கும் கடவுளாகிய திருமாலின் அம்சமாகப் போற்றப் படுகிறார். இக்காலத்தில் உள்ள சமஸ்தானாதிபதிகள் வை யங்காவலரா? இல்லை. சுயநலங் காவலர் என்றே சொல்ல வேண்டும். புராணேதிகாசங்களில் ராக்ஷஸக் கொடுமை களைப்பற்றிக் கேள்விப்படுகின்றோம். ஆனால் கண்டோ மில்லை. அக்கொடுமைகளை இன்று சுதேச சமஸ் தானங்களில் கண்கூடாகக் காண்கின்றோம். நாக ரிகம் வாய்ந்ததென்று, பெருமையாகச் சொல் லிக் கொள்ளும் பிரிட்டிஷ் அரசாங்கம், மஹாராஜாக்களின் கண்மூடி தர்பாரைக் கண்டும் காணாதது போல் பாவனை செய்துகொண்டு வருவது வருந்தத்தக்கது. பிரிட்டிஷ் சர்க் காரின் படை பலமே சமஸ்தானாதிபதிகளின் ஏதேச்சாதி காரங்கட்குக் காரணம். சர்வாதிகாரபீடத்திற்கும் சமஸ் தானங்களுக்கும் ஏற்பட்டிருக்கும் உடன்படிக்கைச் சாச

ணங்கள் பிரஜைகளின் க்ஷேமலாபங்களை அலக்ஷியம் செய்ய இடங்கொடுக்கவில்லை. அங்ஙனமிருந்தும், பிரிட்டிஷ் சர்க்கார் சமஸ்தான விவகாரங்களில் வாய்மூடி மௌனியாய் இருப்பது நீதியாகுமா? மஹாராஜாக்களைத் தட்டிக்கொடுத்து எப்படியேனும் சமஷ்டியை நுழைத்துவிடலாம் என்ற கவலை பிரிட்டிஷ் சர்க்காருக்கு உண்டு. இனிமேல் இந்த எண்ணம் பலிக்காது என்பது திண்ணம். ராஜ்கோட் விவகாரத்தில் வைஸிராய் தலையிட்டுக் காந்தியடிகளின் உண்ணாவிரதத்தை நிறுத்தியதும், உடனே டில்லியில் கூடிய நரேந்திரமண்டலிக் கூட்டத்தில் அவர் மன்னர்களுக்கு உபதேசம் செய்த தோரணையும் இதுவரை பிரிட்டிஷ் சர்க்காரிடம் காணாத புதுமைகள் என்றே சொல்லவேண்டும். வைஸிராய் மஹாராஜாக்களை நோக்கி "நீங்கள் பிரஜைகளின் தினசரி வாழ்க்கையில் நெருங்கிய சிரத்தை காட்டவேண்டும். வரிப்பளுவால் ஜனங்கள் வருந்துமாறு பார்த்துக்கொண்டிருக்கக் கூடாது. வருமானத்தில் பெரும் பகுதியை நீங்கள் சொந்தச் செலவுகட்கு எடுத்துக் கொள்ளுவது கூடாது" என்று உபதேசம் செய்தார். வைஸிராயின் உபதேசம் பிரிட்டிஷ் சர்வாதிகார பீடத்தின் உபதேசம் என்றே கருதவேண்டும். இதிலிருந்து காற்று எப்படி மாறி வீசுகிறது என்று ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம். இவ்வளவு கிளர்ச்சிகட்கும் குழப்பங்கட்கும் நிலைக்களங்களாக விளங்கும் சமஸ்தானங்களைப்பற்றியும், அவைகளை ஆளும் மஹாராஜாக்களைப்பற்றியும் எல்லாரும் அறிந்துகொள்ளவேண்டும். எனவே, அவர்களுடைய வாழ்க்கை முறைகளையும், ஆட்சி முறைகளையும் இனி வரும் அத்தியாயங்களில் விரிவாகக் காணலாம்.

மஹாராஜாக்கள்

ஆவலரின் வாழ்க்கை முறையை ஒட்டியே, அவருடைய ஆட்சி முறையும் இருக்கும். எனவே, சுதேச சமஸ்தானாதிபதிகளின் ஆட்சிமுறைகளை ஆராயுமுன் அவர்களுடைய வாழ்க்கை முறைகளை ஆராய்தல் மற்றொன்று விரித்தல் ஆகாது.

சாதாரணமாகச் சமஸ்தானாதிபதியின் இளம்பிராயம் முழுதும் அந்தப்புரத்திலேயே கழிவது வழக்கம். அவருக்கு அங்கே மாற்றாந்தாய்மார் பலர் இருப்பார்கள். அவர்களுடைய பொறாமைக் கனலுக்கு அவர் எங்கே இரையாகிவிடுவாரோ என்ற அச்சம் பெற்றெடுத்த நற்றாய் முதலியோருக்கு இருக்கும். அதனால் அவரைக் கண்ணிமைபோல் காத்துவருவர். பட்டமகிஷியின் வயிற்றில் பிறந்த காரணத்தால் அரசிளங்குமரர் பலர் மாற்றாந்தாய் மாரால் கொல்லப்பட்டனர்—கொல்லப்பட்டும் வருகின்றனர். சரியான ருஜு இன்மையால் இத்தகைய செய்திகள் சாதாரணமாய் வெளியாவதில்லை.

நடைப்பருவம் வந்த பிறகுகூட அரசகுமாரனை, வாசற்படி தாண்டவிடமாட்டார்கள். எப்பொழுதும் அன்னையே அவனைக் கட்கத்தில் வைத்துக்கொண்டு திரிவாள்; அல்லது மிகவும் நம்பிக்கையும், பக்தி விசுவாசமும் உள்ள தாதியிடம் கொடுப்பாள். அந்தத் தாதி அவனை வெகு

செல்லமாக "அப்பன்" என்றும், "பிரபு" என்றும், "ஸ்வாமி" என்றும் போற்றிப்புகழ்ந்து விபரீதமான பய பக்தியையும், தாழ்மையையும் வெளிப்படுத்திக்கொண்டிருப்பாள். இந்த மொழிகளின் பொருள் தெரியும்போது அவனுடைய மனப்பான்மை எப்படி இருக்கும்? தான் மனிதப் பிறவியே இல்லை—தெய்வப் பிறவி என்றே எண்ணிக்கொள்ளுவான். அவனுடன் ஆடி விளையாடுவதற்கு வேறு யாரையும் சேர்க்கமாட்டார்கள். வேலைக்காரரின் பிள்ளை குட்டிகளையே பெரும்பாலும் சேர்த்துவிடுவார்கள். அவன் வைதாலும், அடித்தாலும், உதைத்தாலும் அவர்கள் மறந்தேனும் வாய்திறக்கமாட்டார்கள். வாய்திறந்தால் அவர்கள் பிழைப்பார்களா? இங்கிலையில், இளமையிலேயே ஏதேச்சாதிகாரமும், மனித ஏற்றத்தாழ்வு உணர்ச்சியும் அவனிடம் குடிகொள்ளுவதில் ஆச்சரியம் என்ன?

ஏழாவது வயதில் ராஜகுமாரனைப் பள்ளியில் வைப்பார்கள். சாதாரணப் பள்ளிக்கூடம் என்று எண்ணிக்கொள்ளாதீர்கள்! சூரியன் மறையாத ஏகாதிபத்தியத்தைக் கட்டியாளும் சக்கரவர்த்தியின் குமாரனே பிரிட்டிஷ் பிரஜைகளின் மக்களுடன் சமமாக ஆக்ஸ்போர்டிலோ, கேம்பிரிட்ஜிலோ உட்கார்ந்து படிப்பான். ஆனால், நம்முடைய மஹாராஜாகுமாரர்களுக்கு அது சரிப்படாது. வேல்ஸ் இளவரசர் முறையைப் பின்பற்றினால் இவர்களுக்குத் தனிச் சிறப்பு என்ன?

ராஜகுமாரர்களுக்கான தனிப் பாடசாலைகள்—இல்லை இல்லை—கலாசாலைகள் நான்கு இருக்கின்றன. இவைகளில் எல்லா விஷயங்களையும் போதிப்பார்கள். எக்காலத்திலும்

பரீக்ஷைகள் இல்லை. ஆனால் பட்டங்கள் மட்டும் தப்பாமல் கிடைக்கும்! விளையாட்டுக்களில் போட்டிகள் நடக்கும். கடைசியில் வென்றவர்கட்கும், தோற்றவர்கட்கும் சமமாகத் தங்கப்பதக்கங்கள் பரிசு கிடைக்கும்.

ராஜகுமாரர்கள், கலாசாலைக் கட்டடம் தாண்டி வெளியே போகக்கூடாது. மற்றவர்களும் அநுமதியின்றி அவர்களைப் பார்க்கக்கூடாது. அவர்கள், காலமெல்லாம் சகபாடிகள், வேலைக்காரர்கள், ஆசிரியர்கள் ஆகியோருடன் மாத்திரமே பழகவேண்டியவர்களாயிருக்கிறார்கள். சகபாடிகளுடன் பழகுவதால் அவர்களுடைய உலகியல் அறிவு வளர்ச்சிபெறுவதற்கு வழியில்லை என்பது கவனிக்கத்தக்கது. வேலைக்காரருடன் பழகுவதால் என்ன பயன் விளையும்? எஞ்சியிருப்பவர்கள் ஆசிரியர்கள். இவர்களேனும் தங்கள் கடமைகளைச் சரியாக நிறைவேற்றுகிறார்களா? அதுவும் இல்லை. இந்த ராஜகுமாரர்கள் இனிமேல் சமஸ்தானாதிபதிகளாக வரக்கூடியவர்கள் என்பது அந்த ஆசிரியர்களுக்குத் தெரியும். எனவே எதிர்காலத்தில் தங்களுக்கு ஏதோ தூக்கி வாரிக் கொடுக்கப்போகிறார்கள் என்னும் பேராசை வைத்துப் பெரும்பாலான ஆசிரியர்கள் அவர்களை இந்திரன் என்றும் சந்திரன் என்றும் புகழ்ந்துகொண்டிருப்பார்கள். இளமையில் அரண்மனை வேலைக்காரர்கள் வெளியிட்டு வந்த புகழ்மொழிகளையே இந்த ஆசிரியர்கள் கொஞ்சம் சாதுரியமாகவும் நாஸூக்காகவும் வெளியிடுவார்கள்.

தனியாக விளங்கும் இந்தக் கலாசாலைகளில் ராஜகுமாரர்களுக்குப் பயன் எதுவும் இல்லை. இது மாத்திரமா? பெரும் நஷ்டமும் உண்டாகிறது. பெரும்பாலான ராஜ

குமாரர்கள் முதன்முதலில் இந்த ஸ்தாபனங்களிலேதான் குடிக்கக் கற்றுக் கொள்ளுவார்கள். சுதேச சமஸ்தான விவகாரங்களையெல்லாம் வெகு நுட்பமாக அறிந்துள்ள ரூட்கர் இக்கலாசாலைகளைப் பற்றி இவ்வாறு எழுதினார் :

"இந்த ராஜகுமாரர்களின் கலாசாலைகள் சாதாரணமாய்க் கெட்ட பழக்க வழக்கங்கட்கு மூலாதாரங்களாயிருக்கின்றன."

இந்தப் பயனற்ற கேடுதரும் கலாசாலைகள் ஏராளமான செலவுகட்குக் காரணமாக இருக்கின்றன. ஒவ்வொரு கலாசாலைக்கும் ஆண்டு ஒன்றுக்கு நான்கு லக்ஷம் ரூபாய்கள் செலவாகின்றன. ஒவ்வொரு கலாசாலையிலும் மாணவர் தொகை எவ்வளவு? ஐம்பது பேருக்கு மேல் இல்லை.

கொஞ்சநாளாக ராஜகுமாரர்களைக் கல்விப்பயிற்சியின் பொருட்டு மேனாடுகளுக்கு-அதிலும் சிறப்பாக இங்கிலாந்துக்கு—அனுப்புவது சம்பிரதாயமாகிவிட்டது. இதனால் மேலும் பெருத்த நஷ்டம் உண்டாகிறது. சமீபத்தில் ஒரு ராஜகுமாரர் கல்விகற்க இங்கிலாந்துக்குச் சென்றார். அங்கே தொடர்ச்சியாய் மூன்றாண்டுகளிலும் பரீக்ஷையில் தவறினார்: ஆனால் குடிக்கக் கற்றுக் கொண்டார். அவ்வளவு தூரம் கஷ்டப்பட்டுச் சென்றதற்குக் குடியையேனும் கற்றுக்கொள்ளாமல்விடுவது குற்றம் என்று அவர் கருதினார்போலும்! பிறகு அந்த ராஜகுமாரரை இந்தியாவுக்கு அழைத்துக் கொண்டு வர இங்கிருந்து தனியே ஒரு ஆளை அனுப்ப வேண்டியிருந்தது. மற்றொரு ராஜகுமாரரும் இப்படியே கல்வி கற்க அந்நிய நாட்டுக்குச் சென்றார். அவருக்கும் கல்வி ஏறவில்லை. ஆனால் சுக வியாதிகள் ஏறின.

அவைகளால் அவஸ்தைப்பட்டுக் கடைசியில் அவர் ஒரு ஓட்டலில் காலஞ்சென்றார். "ஐயோ பாவம்" என்று சொல்லக் கூட அங்கே திக்கில்லாமல் போய்விட்டது.

இவ்வாறு வித்தை (அவித்தை) முடிந்த பிறகு ராஜகுமாரனுக்கு இளவரசுப் பட்டங்கட்டுவார்கள். பிறகு கலியாண வைபவம்................கலியாண வைபவத்தைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்ல முடியாது. அதற்கொரு தனி அத்தியாயம் வேண்டும்!

அந்தப்புரத்தில் அவலக்கண்ணீர்

சக்கரவர்த்திகள்—மஹாராஜாக்களிடம் ஏக பத்தினி விரதம் என்பதை நாம் எக்காலத்திலும் கண்டதில்லை. புராதன காலத்துப் புராணேதிகாசங்களில் வரும் ஒவ்வொரு சக்கரவர்த்திக்கும் நூற்றுக்கணக்காகவும், ஆயிரக்கணக்காகவும் பட்டமகிஷிகள் இருந்ததாகக் கேள்விப்படுகின்றோம். புராணேதிகாசப் பேச்சை விட்டுத் தள்ளுங்கள். பிற்காலத்தில் சரித்திரத்திற்குட்பட்ட ஒவ்வொரு அரசனும் பலதாரியாக வாழ்ந்த கதைகளையும் நாம் படித்திருக்கின்றோம். இப்போது அந்தக் கதைகள் எல்லாம் பொய்யா மெய்யா என்ற ஆராய்ச்சியில் இறங்க வேண்டியது அநாவசியம். இக்காலத்தில் உள்ள மஹாராஜாக்களான சமஸ்தானாதிபதிகளின் கலியாண முறைகளைச் சற்றே கவனிப்போம். பெரும்பாலும் ஒவ்வொரு சமஸ்தானாதிபதியும் சாஸ்திர முறைப்படி பகிரங்கமாய்ச் செய்து கொள்ளும் கலியாணங்கள் ஐந்தாறுக்குக் குறைவில்லை. மற்ற லீலாவிநோதங்களைப் பற்றிக் கேட்கவேண்டியதில்லை. அந்த விவரங்கள் பின்னர் விரிவாக எடுத்துக் காட்டப்படும்.

அரண்மனைக் கலியாணம் என்றால் ஆறு மாதங்களுக்கு முன்பே அமர்க்களப்படும். குடியானவர்கள், கூலிகள், வியாபாரிகள், இவ்வளவேன்?—சமஸ்தான மக்கள்

எல்லாருமே கலியாணக் காரியங்களில் ஈடுபட்டாகவேண்டும். இல்லையேல்? வசவு, தண்டனை, சிறைவாசம்............!

சொந்த வேலைகள் எவ்வளவிருந்தாலும் அப்படியே போட்டுவிட்டு, அரண்மனைக் கலியாண வேலைகளைக் கவனிப்பதற்குக் கைம்மாறு என்ன? வேலை செய்யும் வரை வயிற்றுக்குச் சோறு கிடைக்கும். அவ்வளவுதான்! குடிமக்களிடம் உடல் உழைப்பை மாத்திரம் வாங்கிக் கொள்ளும் அளவில் சமஸ்தானம் திருப்தி அடைவதில்லை. அவர்களுடைய வண்டிமாடுகளைக் கூட ஒப்படைத்து விடவேண்டும். சில சமயங்களில் சேந்து கயிறுகளையும் பாத்திரங்களையுங்கூடக் கொடுத்துவிட வேண்டும். மேலும் திருப்பதி வெங்கடாசலபதி காணிக்கைபோல் கலியாணக் காணிக்கையும் கட்டிவிடவேண்டும்.

இந்த ஏற்பாடுகள் தொடங்கிய நாள் முதல் நீதி மன்றங்கள், கலாசாலைகள், சர்க்கார் காரியாலயங்கள் முதலியன எல்லாம் மூடிவிடப்படும். திவான் முதல் வில்லைச் சேவகன் வரை—சமஸ்தான உத்தியோகஸ்தர்கள் எல்லாரும்-கலியாணக் காரியங்களிலேயே மூழ்கிக் கிடப்பார்கள். பிரமாதமாக நடக்கும் இவ்வேற்பாடுகள் எல்லாம் முற்றுப் பெற்ற பிறகு கலியாணம் நிகழும். கலியாணத்தில் இரண்டு விதம் உண்டு. ஒன்று: ராஜகுமாரன் தானே நேரில் சென்று கலியாணம் செய்தல். இரண்டு: தனக்குப்பதில் கத்தியை அனுப்புதல்— "இனிமேல் இந்தக் கத்தியைக் கொண்டே உன் கழுத்தை அறுப்பேன்" என்பதற்கு இது அறிகுறிபோலும்!

கலியாணத்தை ஒட்டி நடக்கும் வைபவங்களை வருணிக்க யாராலும் முடியாது. விதம் விதமான வாத்திய

முழக்கங்கள்; பாட்டுக் கச்சேரிகள்; நாட்டியக் கச்சேரிகள்; வாணவேடிக்கைகள்; விருந்துகள்; விநோதங்கள்........

குடிகளைக் கசக்கிப் பிழிந்து எடுத்த பணம் இருக்கிறதல்லவா வாரி இறைக்க? இனி வேடிக்கை விநோத தடபுடல்களுக்கு என்ன குறை?

கலியாணமான பத்தாவது நாளிலேயே ராஜகுமாரனுக்கு அந்த மனைவி புளித்துப் பழையதாகி விடுவாள். உடனே மறுபடியும் ஏகதடபுடல்படும் கலியாண ஏற்பாடுகள்!—வைபவங்கள்—கோலாகலங்கள்—ஏராளமான வீண் செலவுகள்...........

இரண்டாவது மனைவி வந்தவுடனே முதல் மனைவியின் வாழ்க்கை பாழடைந்துவிடும். அவளுடைய கதியை நினைத்துக் கவலைப்படுவோர் யாருமே இருக்க மாட்டார்கள். நடைப்பிணம்போல் அந்தப்புரத்தில் ஒரு மூலையில் கிடந்து சாவாள். அவளுடைய கஷ்டகாலம் எப்பொழுது தீரும்? யமன் வந்தால்தான் தீரும். பிறகு இரண்டாவது மனைவியின் கதியும் இப்படித்தான்! அதே கதிதான் பின்னால் வரும் மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது....................ராணிமாருக்கும்!

இத்தகைய மானங்கெட்ட நீச வாழ்க்கையை வெறுத்த ஒரு மஹாராணி ஒரு சமயம் "பப்பாய் கிராணிகிள்" பத்திரிகைக்குக் கடிதம் எழுதினாள். கல்நெஞ்சத்தையும் கரைக்கக்கூடியது அக்கடிதம்! அதன் ஒவ்வொரு எழுத்தும் துன்பப் பளுவைத் தாங்க முடியாமல் கதறுவதுபோல் தோன்றும். எவ்வளவு அறிவும் திறமையும் செலுத்தினாலும் மொழி பெயர்ப்பு மொழி பெயர்ப்புத் தானே! அசல் கடிதத்தின் உணர்ச்சியை எப்படி வெளிப்

படுத்த முடியும்? எனினும் அக்கடிதத்தின் மொழிபெயர்ப்பான சில பகுதிகளைப் பாருங்கள் :

"என் தந்தை தனவந்தர் அல்லர். ஆனால் சாதாரணமானவரும் அல்லர். என்னுடையசகோதரர்களுடன் எனக்கும் தகுந்த கல்வியறிவு அளித்தார். எங்கள் நாகரிகப்போக்குகளைக்கண்டு அவர் இறுமாப்பு அடைவதுண்டு. கலியாணத்தின்போது சீர்-சிறப்பு-வரதக்ஷிணைவகையறாக்களை விதரணையாகவே செய்தார். அநேகமாய் எனக்குரிய செலவுகளின் பொருட்டே அவர் அவ்வளவு தாராளமாக வரிசை செய்தார் என்று நினைக்கிறேன். ஆனால் அந்தப் பணத்தில் ஒரு தம்பிடிகூட எனக்கு எட்டவே இல்லை. அக் காலத்தில் எனக்குக் கலியாணம் என்றால் என்ன என்று சரியாக அர்த்தமாகவில்லை. இன்பத்திற்கு இருப்பிடமான தாய் வீட்டை விட்டு, அறிமுகமில்லாத அந்நியர்களிடையே வாழப்போவதே கலியாணம் என்று எண்ணிக்கொண்டிருந்தேன். எனினும், என்னை மணக்கும் ராஜகுமாரனுடைய உருவும், திருவும், குலமும், குணமும் எத்தகையவை என்று அறிந்துகொள்ளும் பருவம் எனக்கு அப்போது இல்லை என்று சொல்ல முடியாது. ஒப்புயர்வற்ற இன்ப வாழ்க்கை நடத்தலாம் என்று நான் கனவுகள்கூடக் கண்டுகொண்டிருந்தேன்.........புகுந்த வீட்டில் என்னிடம் அன்பும் ஆதரவும் காட்டியே நடத்தினார்கள். ஆடையாபரணங்களுக்கும் குறைவில்லை. இப்படியிருக்கையில் ஒருநாள் என் காதுகளுக்கு மிகவும் அருவருப்பான கொடும் செய்தி ஒன்று எட்டியது. அதாவது என்னுடைய கணவருக்கு மற்றும் இரண்டு மனைவிமார் இருக்கின்றனர் என்றும், இவர்களைத் தவிர காமக்கிழத்திகள் பலர் இருக்கின்றனர் என்றும் கேள்விப்பட்டேன்! வெட்கத்தால் குறுகிக் குன்றி

விட்டேன். தாதிமாரைக்கூடத் தலைநிமிர்ந்து பார்க்க முடியாதவளானேன். கணவரான ராஜகுமாரர் என்னிடம் வந்தபோது வெகு ஜாக்கிரதையாக இதுபற்றி அவரைக் கேட்டேன். என் வார்த்தைகளை அவர் காதில் போட்டுக்கொள்ளவில்லை. அதன் பிறகு நம்பிக்கைக்கு இடமில்லாத சமாதானங்கள் என்ன என்னவோ சொன்னார். மனிதன் இப்படி மிருகமாவான் என்று நான் என்றும் எண்ணியதே இல்லை.

"ஏதோ ஒரு சாக்கு வைத்துக்கொண்டு பிறந்த வீட்டுக்குப் போனேன். அழுதேன். அலறினேன். தலையிலடித்துக்கொண்டேன். தகப்பனாருடன் பிறந்த எங்கள் அத்தை, மேலும் பல ரகசியங்களைத் தெரிந்துகொண்டிருந்தாள். நான் கேள்விப்பட்டவைகளைவிட மிகவும் கோரமான கதைகளை அப்பொழுது என்னிடம்சொன்னாள். என்ன செய்வேன்? மறுபடியும் எப்படியோ மனதை ஒருவாறு சரிப்படுத்திக்கொண்டு கணவர் மாளிகைஅடைந்தேன். உயர் குடியில் பிறந்தேன் என்ற கர்வமும், உத்தம மனைவியாக இன்பவாழ்க்கை நடத்துவேன் என்ற ஆசையும் என்னிடம் மழுங்கி மாய்ந்துவிட்டன. ஒழுக்கமும், தூய்மையும் இந்த ராஜகுமாரர்களுக்கு விலக்கு; நற்குணங்களுக்கும் இவர்களுக்கும் வெகு தூரம். இன்றைக்கு நான் பணக்காரியாகலாம். நாளைக்குப் பிச்சைக்காரியாகலாம். இது வேறு விஷயம். கணவருடைய அன்பு ஒன்றே என் வாழ்க்கையின் முழுச் செல்வம் என்று எண்ணிக்கொண்டிருக்கிறேன். கஜானா என் சமீபத்திலேதான் இருக்கிறது. ஆனால் அதில் ஒரு தம்பிடி எடுக்கக்கூட எனக்கு உரிமை இல்லை. விலையுயர்ந்த ஆடைகள், ஆபரணங்கள், மோட்டார்கள், குதிரைகள், வேலைக்காரர்கள்—எதற்கும்

பஞ்சமில்லை. என்ன பயன்? வேண்டுமென்றே என்னை எத்தனையோ விதங்களில் அவமானப்படுத்தி வருகிறார். அத்தனை அவமானங்களையும் முணுமுணுத்துக்கொண்டோ, அழுதுகொண்டோ சகித்து வருகிறேன். என்னை ஒரு கைதி போலவே நடத்துகிறார். .... என் குறைகளையும் முறைகளையும் சொல்லி அழக்கூட எனக்குத் திக்கில்லை.

"நம் ராஜகுமாரர்களுக்கு ஏன் இந்தக் கெடுபுத்தி? இவர்கள் எல்லாரும் ஏன் கண்டவர்கள் பின் ஓடி அலைகின்றனர்? தங்களுடைய பேரும், புகழும், அந்தஸ்தும் பாழாவதை இவர்கள் ஏன் லக்ஷியம் செய்வதில்லை? தேசம் முழுதும் உயரிய லக்ஷியங்களால் தூண்டப்பட்டு, முன்னேற்றம் அடைய முனைந்திருக்கும் இக்காலத்தில், ஏன் இவர்கள் அதோகதிக்கு ஆளாகிக்கொண்டிருக்கிறார்கள்? இவர்கள் ஏன் விபரீதமான காமக்கிறுக்கர்களாய்த் திரிகிறார்கள்? எல்லாம் ஆண்டவனுக்கே வெளிச்சம்! சமஸ்தானாதிபதிகளில் பலர் தங்கு தடையின்றி மனம் போனபோக்கில் விபசாரம் செய்து, காமச்சேஷ்டைகளை நடத்தும் பொருட்டே ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லுகிறார்கள் என்பது பொய்யன்று; மெய்யே! இவர்கள் அரசாங்க விவகாரங்களை அலக்ஷியமாக நினைக்கிறார்கள். இதனால் பிரஜைகளுக்கு இவர்கள்மீது வெறுப்பும் சினமும் மிகுந்து வருகின்றன. ஆனால்இந்த மஹாராஜாக்கள் மக்களைப்பொருட்படுத்துகிறார்களா? இல்லை. பிரிட்டிஷ் அரசாங்கமோ இவர்களுடைய காரியங்களில் தலையிடுவதே இல்லை. இவர்கள் தாங்களாகவே அழிந்து ஒழியட்டும் என்றேஇம்மாதிரியான சுதந்தரம் கொடுத்து வருகிறது பிரிட்டிஷ் அரசாங்கம்!

"சமஸ்தானக் குடிமக்களிடையே ஒரு விழிப்பு ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் தங்கள் கஷ்ட நஷ்டங்களைப்

பற்றி முறையிட்டுக்கொண்டு வருகிறார்கள். வைஸிராய் அவர்களுடைய குறைகளையும் முறைகளையும் கவனிப்பாரோ, என்னவோ? ஆனால் எங்கள் கதியோ?.................... நாங்கள் அடிமைகளாகவே இருக்கவேண்டியதுதானா? மஹாராணிக்கும், வைப்பாட்டிக்கும் வித்தியாசமே இல்லையா? எங்களுக்கு எத்தகைய உரிமைகளும் இல்லையா? பிச்சக்காரர்களைவிட எங்கள் நிலைமை மோசம். கணவன்மார்களை எவ்வகையிலும் திருப்தி செய்வதே எங்கள் தர்மம்-கடமை என்கிறார்கள். ஆனால் எங்கள் சுயமரியாதைகளையெல்லாம் நாசம் செய்கிறார்களே! என்ன செய்வோம்? நாங்களும் மக்கள்தான் என்று வாதிக்கத் தொடங்கினால் எங்களைத் தண்டிக்கிறார்கள்.

"எங்கள் வாழ்க்கைகள் வெறும் பாழ்! நாங்கள் எந்த விஷயத்திலும் சிரத்தை காட்டும் நிலைமையில் இல்லை. நாங்கள் மஹாராஜாக்களின் விளையாட்டுப் பொம்மைகள். அவர்கள் எங்களை அலங்காரம் செய்து அகம் மகிழலாம். இன்றேல் சீரழித்துச் சின்னப்படுத்தலாம். எங்கள் நிலைமை நேற்றுவரை ரஷ்யாவில் இருந்த அடிமைகளைவிட அதிக மோசமாகவே இருக்கிறது.

"..........நான் அணுவை மேருவாக்குகிறேன் என்று நீங்கள் நினைக்கலாம். ரஷ்யா—காங்கோ முதலிய நாடுகளிலிருந்த அடிமைகளைப்பற்றி முன்பு சிலர் இப்படியே சொல்லவில்லையா? நீங்கள் தென்னாப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களுக்காக அநுதாபம் காட்டி வருந்துகிறீர்கள். ஆனால் இங்கே உள்ள உங்கள் துர்ப்பாக்கியவதிகளான சகோதரிகளின் பரிதாப நிலைமைகளைக் கவனிக்கிறீர்களா?"

மஹாராணிகளின் நிலைமை எப்படி இருக்கிறது என்று பார்த்தீர்களா? இப்படி எவ்வளவோ நெருக்கடிகளையும்

துன்பங்களையும் அநேகர் அநுபவித்துக் கொண்டிருந்தாலும், அவர்களில் யாரோ ஒருவர் துணிந்து பத்திரிகைகளில் எழுதினாலொழிய நமக்கு உண்மை நிலைமை தெரியாது. இப்படியே மத்திய இந்தியா சமஸ்தான ராணி ஒருவர், கணவர் தம்மைச் செய்யும் சித்திரவதைகளைப்பற்றி ஒரு கடிதம் எழுதியிருந்தார். கணவர் அந்த ராணிக்கு மாதம் ஒன்றுக்கு ஐந்துரூபாய் மாத்திரமே கொடுத்து வருகிறாராம். தம்மைவிட்டு நீங்கிக் கிஸோர் சிங் என்னும் ரஜபுத்திரன் ஒருவனுடைய மனைவியுடன் காலக்ஷேபம் செய்து வருகிறாராம்.

இத்தகைய கொடுமைகளையெல்லாம் சகிக்கமாட்டாதவர்களான மஹாராணிகளில் சிலர், தற்கொலைகளைக்கூடச் செய்துகொள்ளத் துணிந்திருக்கின்றனர். இதில் என்ன ஆச்சரியம்? கொஞ்ச நாளைக்குமுன் ஆள்வார் மஹாராஜாவின் அந்தப்புரத்தில், ஒரு ராணி, துன்பங்களும், அளவு கடந்த அவமானங்களும் படமுடியாமல் தாமே தமது ஆருயிருக்கு அழிவு தேடிக்கொண்டார்!

மஹாராஜாக்களின் திருமண வாழ்க்கைகளைப்பற்றிச் சாட்கர் என்பவரின் அபிப்பிராயம் இது: "கலியாணம் பெரும்பாலும் சாதாரண மனிதர்களை நல்வழிப்படுத்தி அவர்களிடம் நற்குணங்களைப் பெருக்குகிறது. ஆனால் மஹாராஜாக்கள் விஷயத்தில் கலியாணம் கந்தரகோளத்திற்குக் காரணமாகிவிடுகிறது. அவர்களுடைய வாழ்க்கை வெள்ளத்தை வக்கிர கதியில் செலுத்திவிடுகிறது."

காமக் களியாடல்

சுதேச சமஸ்தானாதிபதிகள் பலதாரிகள் மாத்திரமில்லை--விபரீதமான விபசாரிகளாகவும் விளங்குகிறார்கள். இப்படிச் சொல்லுவதால் சமஸ்தானாதிபதிகள் எல்லோருமே விபசாரிகள் என்று அர்த்தம் ஆகாது. அவர்களில் நல்லொழுக்கம் வாய்ந்தவர்கள் இல்லாமல் போகவில்லை. அந்த ஒழுக்க சீலர்களுக்கு நமது வணக்கம் உரிமை. மற்றவர்களின் சங்கதி என்ன ?

ஒரு சமயத்தில் "சாந்த்" (ஹிந்தி மாத சஞ்சிகை) சில சமஸ்தானாதிபதிகளின் காமக் களியாடல்களைப் பற்றிப் பல உண்மைக் கதைகளை வெளியிட்டது. அவற்றில் ஒரு சில இங்கே எடுத்துக் காட்டப்படுகின்றன:

"ஒரு மஹாராஜா. ஆண்மை இழந்த நபுஞ்சகர். ஆனால் தம் நபுஞ்சகத்தை மறைத்து உலகத்தை ஏமாற்ற ஆண்டுக்கு ஒரு கலியாணம் செய்துகொண்டு வருகிறார். இவரை மணக்கும் பெண்கள் வாழ்க்கை நரகவேதனையே! நரகவேதனை மாத்திரமா ? மானபங்கமுங்கூட!! அந்த மஹாராஜா சர்வ சதாகாலமும் குடிவெறியில் மூழ்கியிருப்பார். தம்முடைய நண்பர்களுக்கும் வெறியேற்றி விடுவார். எல்லாரும் போதையால் கண் கால் தெரியாமல் இருக்கும்போது மஹாராஜா ராணிமார்களில் இரண்டொருவரை வரவழைத்து நண்பர்களின் காமவேட்கையைத்

நீர்க்குமாறு ஏவுவார். திக்கற்ற பேதை ராணிகள் அதற்கு இணங்கியே தீரவேண்டும். அவர்களுடைய மிருகத்தனமான காமச் சேஷ்டைகளையும், சேர்க்கை விசித்திரங்களையும் கண்டுகளிப்பதில் அந்த மஹாராஜாவுக்கு ஒரு கிறுக்கு. சமீபத்தில் ஒரு மஹாராணி இந்த மானங்கெட்ட நீச வாழ்க்கையைச் சகிக்காதவளாய் லீலாவிலாஸ மண்டபத்தில் நுழைந்தாள். தம்மைக் கட்டியணைக்க வந்த சமஸ்தான உத்தியோகஸ்தரைக் கைத்துப்பாக்கியால் சுட்டாள்! பிறகு அந்தத் துப்பாக்கியை மஹாராஜாவுக்கு நேரே காட்டிக் குறிபார்த்து அம்மானவதி இப்படிக் கூறினாள்: "இப்போது உம்முடைய உயிர் என் கைகளில் இருக்கிறது. நான் நினைத்தால் உம்மைத் தொலைத்துவிட்டுப் பூபாரம் குறைப்பேன். ஆனால் உம்மைப் பிடித்த நல்ல காலத்தால் நான் ஹிந்துப் பெண்ணாகப் பிறந்து விட்டேன். என்னிடம் குடிகொண்டுள்ள சன்மார்க்க உணர்ச்சி அக்காரியத்தைச் செய்ய விடவில்லை. எனவே நானே இந்த இழிந்த துர்ப்பாக்கிய வாழ்க்கையை முடித்துக்கொள்ளுவதாக உறுதி செய்துவிட்டேன்"—இந்த வார்த்தைகளைச் சொல்லி வாய் மூடுமுன் அந்த ராணி தமது நெஞ்சில் சுட்டுக்கொண்டு அப்படியே சாய்ந்து உயிர்விட்டார். கண்ணற்ற காம வேட்கையோடு அங்கே கூடியிருந்த மனித விலங்குகள் மந்திரத்தால் கட்டுண்ட பாம்புகளைப் போல் ஸ்தம்பித்துப் போனார்கள். அவர்களில் வாய்திறக்க எவனுக்குத் துணிச்சல்? மறுநாள், மாரடைப்பால் மஹாராணி இறந்து போனார் என்று அறிக்கை வெளியிடப்பட்டது."

மற்றொரு மஹாராஜாவின் கதையைக் கேளுங்கள்! அவர் மஹா விநோதப் பிரியர். அவருக்கு மிகவும் விருப்பமான விநோதங்களில் இது ஒன்று:

அவர் பக்காக் குடியர். நண்பர்களையும் குடிக்கச் செய்வார். பிறகு ஏதோ ஒரு காரணம் சொல்லி, நண்பர் வீடுகளில் உள்ள குலப்பெண்களைக் கேளிக்கை மண்டபத்திற்கு வரவழைப்பார். மதிமயக்கங்கொண்ட ஆண் பெண்களின் கண்களைக் கறுப்புத் துணிகளால் இறுக்கிக் கட்டச் செய்வார். உடனே சேருமாறு கட்டளையிடுவார். லீலா விநோதங்கள் முடிந்த பிறகு கண்களை மறைத்திருக்கும் கட்டுகளை அவிழ்க்கச் செய்வார். அந்தோ கர்மகாண்டம்! சகோதரி சகோதரனிடமும், தாய் தனயனிடமும், தந்தை தனயளிடமும், மாமனார் மருமகளிடமும் படுத்திருப்பதைக் காணலாம்!

மேற்கண்ட இரண்டு சமஸ்தானதிபதிகளையும் தூக்கி வாரி அடிக்கும் மஹாராஜா ஒருவர் ராஜபுதனத்தில் இருந்தார். அவர் இந்த நிலையற்ற உலக வாழ்வினின்று மறைந்து விட்டாலும்—அவர் இறந்து கூட இன்னும் அதிகநாள் ஆகவில்லை— அவருடைய (அப) கீர்த்தி இன்றைக்கும் நிலை பெற்றிருக்கிறது..............அந்த மஹாராஜாவும் ஆண்மை இழந்த நபுஞ்சகரே. அதனால் சபலம் அதிகம். குடும்ப இன்பம் அவ்வளவும் அநுபவிக்க வேண்டும் என்பது அவாது ஆசை. தமது ஆசையை நிறைவேற்றிக் கொள்ள அவர் ஒரு சாதனம் கண்டு பிடித்தார். அதன் பெயர் ஆனந்த சக்கரம் (**Joy—wheel**). அந்தச் சக்கரம் எவ்வாறு நிருமிக்கப்பட்டது? அழகிய உல்லாச மண்டபம். அதில் வட்டமாக இருபது ஹம்ஸ் தூளிகா மஞ்சங்கள். அவற்றினிடையே ரத்தினகசிதமான சிம்மாசனம். ஒவ்வொரு கட்டிலின்மீதும் பல நிற மின்சார விளக்குகள். ''ஸ்விச்'' சிம்மாசனத்தின் பக்கம். இந்த ஆனந்த சக்கரத்தை உபயோகிக்கும் விதம்

எப்படி என்பீர்களோ? கவனியுங்கள். காம இச்சை உண்டாகும்போது மஹாராஜா சேவகனுக்குக் குறிப்புக் காட்டுவார். உடனே நாற்பது பேர் ஆண் பெண்கள்—இருபது ஜோடிகள்—உல்லாச மண்டபத்திற்குள் நுழைவார்கள். முதல் மணி அடித்தவுடன் ஒவ்வொரு ஜதையும் ஆனந்த சக்கரத்திலுள்ள ஒவ்வொரு கட்டிலையும் அடையும். இரண்டாவது மணி அடித்தவுடன் எல்லாரும் போகத்தில் மூழ்குவார்கள். ரத்தின கசிதமான சிம்மாசனத்தின்மீது ஆசை வெள்ளம் பெருக்கெடுக்க உட்கார்ந்திருக்கும் மஹாராஜா, மின்சார விளக்குகளை ஏற்றுவதும் அணைப்பதுமாய் இந்த ராக்ஷஸக் காட்சிகளைக் கண்டு களித்துக்கொண்டிருப்பார். பிறகு உடனே வெறி பிடித்தவர்போல் சிம்மாசனத்தினின்று கீழே இறங்கிவந்து சேர்க்கை வைபவங்களை இமை கொட்டாமல் காண்பார். காமவெறி மிதமிஞ்சித் தலைக்கேறிவிட்டால் எந்தஆடவனையேனும் தள்ளிவிட்டுத் தாமே........

பேர்பெற்ற நூலாசிரியரான கன்யலால் கௌபா கூட, "சாந்த்" பத்திரிகையைப் போலவே சில சுதேச சமஸ்தானதிபதிகளின் இழிதகை வாழ்வு பற்றி அநேக கோர வரலாறுகளை வெளியிட்டிருக்கிறார். அவர் எழுதியவைகளையெல்லாம் இங்கே எடுத்துக்காட்டி வாசகர்களுக்குச் சகிக்கமுடியாத அருவருப்புண்டாக்குவது சரியன்று. ஆனால் மாதிரிக்காக ஒரே ஒரு உண்மை இங்கே குறிப்பிடப் படுகிறது. யாரோ ஒரு மஹாராஜா ஆண்டுதோறும் வெய்யிற் காலத்தில் முஸ்ஸோரி மலைவாசத்திற்குப்போவது வழக்கமாம். அங்கே ஆண்மைப் போட்டிப் பரீக்ஷை **(Virility Contest)** நடத்திக்கொண்டிருப்பாராம். அதில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்குவாராம்!

மற்றவர்கள் எழுதிய கதைகள் ஒருபக்கம் இருக்கட்டும். சுதேச சமஸ்தானாதிபதிகளின் விபரீத லீலா விநோதங்களைப்பற்றி இன்னும் எத்தனையோ விஷயங்களை அடிக்கடி கேள்விப்பட்டுக்கொண்டு வருகிறோம். அப்படிக் கேள்விப்பட்டவைகளில் இது ஒன்று. ''காரியதரிசியாகவோ, வேறு உத்தியோகஸ்தனாகவோ வேலை செய்வதற்கு ஆடல் பாடல்களில் சிறந்து விளங்கும் வாலிபர்கள் தேவை'' என்று ஒரு மஹாராஜா எப்பொழுதும் பத்திரிகைகளில் விளம்பரம் செய்துகொண்டிருப்பாராம். உத்தியோகம் விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தங்கள் புகைப்படங்களையும் அனுப்பி வைக்கவேண்டும் என்று நிபந்தனை விதிப்பாராம். பிறகு விண்ணப்பங்களையும் புகைப்படங்களையும் கவனித்துத் தமக்குப் பிடித்தவர்களுக்குப் பிரயாணச் செலவுக்கான பணத்தை அனுப்பி உடனே புறப்படுமாறு கட்டளையிடுவாராம். இப்படி வருகிறவர்களில் தங்களுடைய மானாபிமானங்களை விற்கத் தயாராக இருப்பவர்களுக்கு, ஏதேனும் உத்தியோகத்தைச் சிருஷ்டித்தேனும் கொடுப்பாராம். வர்த்தமானப் பத்திரிகைகளில் வெளியான விளம்பரத்தை நம்பி மோசம் போன ஒரு வாலிபனே இச்செய்தியைக் கூறினான். ஊரும் பேரும் இன்றிச் சமஸ்தானாதிபதிகளைப் பற்றி ஏதோ அத்தைப்பாட்டி கதைகளை அளப்பதாக வாசகர்கள் சந்தேகங் கொண்டாலும் கொள்ளலாம். நியாயந்தானே. மனிதன்—அதிலும் அநேகருடைய உயிர், பொருள், மானங்களைக் காப்பாற்றும் கடமை பூண்ட மனிதன்-இப்பேர்ப்பட்ட நீசத்தனமான காரியங்களில் தலையிடுவானா என்று யாருக்கும் சந்தேகம் தோன்றாமல் இருக்காதல்லவா? என்ன செய்வது? இவையெல்லாம் அசைக்க முடியாத ஆதாரங்களுடன் கூடிய உண்மைகள். மற்றும் சில மஹாராஜாக்களின் விபரீத விபசாரத் திருவிளையாடல்களைப் பற்றி எழுத ஒரு தனி அத்தியாயமே வேண்டும்!

விபசாரம்

பட்டந்துறந்த இந்தூர் மஹாராஜா துகோஜிராவ் ஹோல்காருடையது முதல் கதை!

ஜே. டபிள்யூ. பிளேக் என்பவர் லண்டன் "வீக்லி டெஸ்பாட்ச்" பத்திரிகையில் இவ்வாறு எழுதியிருந்தார்:

"ஒரு எளிய முஸ்லிம் குடும்பத்தில் பிறந்தவள் மும்தாஜ் பீகம். ஆனால் எழில்நலம் வாய்ந்தவள். உல்லாஸ நடையுடை பாவனைகளை உடையவள். அதனால் மஹாராஜா மோகங்கொண்டவராய்த் தமது அரண்மனை அந்தப்புரத்தில் அவளுக்கு முதன்மையான இடங்கொடுத்தார்.

"அவளுக்கு எது தேவையானாலும் சரி—அதன் விலையைப்பற்றிக் கவலையில்லை-உடனே வரவழைத்துக்கொடுத்து விடுவார். காசி, காஷ்மீரம், மஹாபலேஸ்வரம் முதலிய விடங்களிலிருந்து வரவழைத்த உயரிய பட்டாடைகளை ஒரு பீரோ நிறைய அடுக்கி அவளிடம் சமர்ப்பித்தார். அவள் அணியும் ஆபரணங்களோ? ஒப்புயர்வற்றவை. அவற்றில் சில இந்தூர் சமஸ்தான பொக்கிஷத்தைச் சேர்ந்தவை. சில பாரிஸ் வர்த்தகர்களிடமிருந்து தனியாக ஆர்டர் கொடுத்து வாங்கப்பெற்றவை. எப்பொழுது பார்த்தாலும் அவளுடன் அநேக வேலைக்காரிகள் இருந்துகொண்டிருப்பார்கள். மஹாராஜாவின் தனி ரயில் வண்டியில் அவளுக்குத் தனியே ஒரு பெட்டி அமர்த்தப்படும். "ரோல்ஸ்ராய்ஸ்" மோட்டார்கார் எப்பொழுதும் அவள் வசத்தில் இருக்கும்.

ஆனால், அவளுக்குச் சுயேச்சை இல்லை. ராஜகுமாரிகளுக்குள்ள சாதாரண சுயேச்சை உரிமையும் அவளுக்கு இல்லை. அவள் நாள்தோறும் தங்கக் கூண்டுக் கிளிபோல் அடித்துக்கொண்டு அடங்கிக் கிடக்கவேண்டியவளே !

"ராணிகள் வசிக்கும் அந்தப்புரங்களைப் பொறாமைக் களஞ்சியங்கள் என்றே கூறவேண்டும்................மஹாராஜா மும்தாஜ் பீகத்தினிடம் காட்டும் அளவுகடந்த அன்பு, அவளுக்குச் சில சமயங்களில் கெடுதலாக முடிந்தது என்றே சொல்லவேண்டும்...............சென்ற ஆண்டு மஹாராஜாவின் குமாரனுக்கு—யுவராஜாவுக்கு—கலியாணம் நடந்தது................அந்தக் கலியாணச் செலவு ஐம்பது லக்ஷ ரூபாய் என்று கணக்கிடப்பட்டது. இதில் பாதித் தொகை தாறுமாறான வீண் டம்பச் செலவுகளுக்கே உபயோகிக்கப்பட்டது. அந்தக் கலியாணத்திற்குப் பிறகு ஹிமாலயத்திலுள்ள முஸ்ஸோரிக்கு எல்லாரும் பயணம் கட்டினார்கள். அப்பொழுது மும்தாஜ் கூண்டிலிருந்து எகிறிப் பறந்துவிட்டாள்."

மும்தாஜ்பீகம் போக போக்கியங்களையெல்லாம் எட்டி உதைத்துவிட்டு ஓடிப்போவதற்குச் சரியான காரணங்கள் இல்லாமல் போகவில்லை. 1925-ம் ஆண்டு ஜனவரி மீ 24-ம் தேதி ஒரு பிரபல பத்திரிகையில் வெளியான விவரங்களைப் பாருங்கள்.

"1921-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் மஹாராஜா இங்கிலாந்துக்குப் புறப்பட்டபோது மும்தாஜ்பீகத்தையும் அழைத்துக்கொண்டு சென்றார். கமலாபாய் என்னும் மாறு பெயருடன் விவகரிக்கச் செய்தார்............மும்தாஜ் இங்கிலாந்துக்குப் போய்விட்டு வந்த பிறகு ஒரு ஆண்டில் கர்ப்ப

வதியானுள். அப்பொழுது அவள் எவ்வளவோ கெஞ்சிக் கேட்டுக்கொண்ட பிறகு அவளுடைய அன்னை வஜீர் பீகமும், மற்றும் சில உறவினரும் அந்தப்புரத்தில் வசிக்க அநுமதிக்கப்பட்டனர்.

"அவள் ஒரு பெண் குழந்தையைப் பெற்ருள். பிறந்த போது குழந்தை உயிருடன் நன்ருகவே இருந்தது. ஆனுல் சிறிது நேரத்திற்குள் தாதிகள் அக்குழந்தை இறந்துவிட்டது என்று தெரிவித்தார்கள். இதனுல் மும்தாஜ் பீகத்தின் மனம் முறிந்துவிட்டது. மஹாராஜாவின் சம்பந்தத்தை எப்படியேனும் அறுத்துக்கொள்ளவேண்டும் என்று தீர்மானித்துவிட்டாள்."

எப்படியோ தப்பித்துக்கொண்டுவெளியேறிய மும்தாஜ் பீகம் படாதபாடெல்லாம் பட்டுக் கடைசியில் பம்பாய் போய்ச்சேர்ந்தாள். அங்கே போன கொஞ்ச நாளில் அப்துல் காதர் பாவ்லா என்பவர் அவளிடம் தொடர்பு கொண்டு தம்மிடம் சேர்த்துக்கொண்டார். அவர் பம்பாய் கார்ப்பொரேஷன் அங்கத்தினர். கோடீசுவரர். மும்தாஜ் பீகம் பாவ்லா வீட்டில் இருந்தகாலத்தில், "அவளை விட்டு விடவேண்டும். அப்படிச்செய்தால் வேண்டியபணம் கொடுப்போம். இன்றேல் நீர் கொலை செய்யப்படுவது உறுதி" என்று பாவ்லாவுக்கு எங்கிருந்தோ கடிதங்கள் வந்து கொண்டிருந்தன. ஆனுல், பாவ்லா மும்தாஜ்பீகத்தை விட்டுவிட விரும்பவில்லை. மும்தாஜுக்குக்கூட இம்மாதிரிக் கடிதங்கள் வந்தன. அவளும் பாவ்லாவின் துணிச்சலால் அக்கடிதங்களை லக்ஷியம் செய்யவில்லை. பின்னர் நடந்த வரலாறு 1925 ஆண்டு ஜனவரியீ 17-ம் தேதி வெளியான பத்திரிகைகளில் இவ்வாறு வெளிவந்திருக்கிறது.

"இம்மாதம் 12-ம் தேதி மாலை 5 மணிவரை கார்ப்பொரேஷன் கூட்டத்தில் இருந்துவிட்டுப் பாவ்லா, காரில் ஏறி வெளியே உலாவச் சென்றார். இவருடன் மும்தாஜ் பேகமும் இருந்தாள். சௌபாத் கடற்கரைக்கு வந்தபோது அவருடைய காரியதரிசி கே. இ. மாத்யூ என்பவர் மற்றொரு காரில் உலாவச் சென்றுகொண்டிருந்தார். அவரையும் தமது காரில் ஏற்றிக்கொண்டு புறப்பட்டார். அங்கிருந்து ஒரு மோட்டார்கார் இவர்களைப் பின்தொடர்ந்தது. முதலில் இவர்கள் அதைக் கவனிக்கவில்லை. இவர்களுடைய கார், மலபார்மலைமீது "ஹாங்கிங் கார்டன்ஸ்" பக்கம் வந்தபோது ரஸ்தாவில் ஒரு முடக்கில் வளைந்து செல்லவேண்டி யிருந்தது. அந்த முடக்கில் வளைந்து திரும்பிக்கொண்டிருக்கையில் பின்தொடர்ந்து வந்த கார் இவர்களுடைய காரில் மோதியது. பாவ்லாவின் ஷாபர் ஒரு முஸ்லிம். பின்னல் மோதிய மோட்டாரைக் கண்டதும், அதன் ஷாபர் குடிவெறியில் இருக்கிறான் என்றெண்ணிக் காரைக் கொஞ்சம் நிறுத்தினான். உடனே திடும்பிரவேசமாய் ஐந்து குண்டர்கள் அக்காரினின்று குதித்து இவர்கள் மீது பாய்ந்து விழுந்தனர். அவர்கள் முதலில் இந்த ஷாபரை அடித்தார்கள். அவன் ஸ்மரணையற்று மயங்கி விழுந்து விட்டான். அப்பொழுதே நன்றாய் இருண்டிருந்தது. அந்த இருட்டில் குண்டர்கள் பட்டாணியரைப் போல் காணப்பட்டாகள். பிறகு காரில் இருந்தவர்கள் மீது விழுந்தார்கள். துப்பாக்கிச் சப்தங்கள் கேட்டன. உள்ளே இருந்த மூவரும் உதவிக்காகத் தத்தளித்துக் கொண்டிருந்தார்கள். ஒரு ஓரத்தில் உட்கார்ந்திருந்த மாத்யூ எப்படியோ வலது கையைத்

தமக்குக் குறுக்கே வைத்துக்கொண்டு வெளியே குதித்தார். நடுவில் உட்கார்ந்து கொண்டிருந்த பாவ்லாவுக்கு எழுந்திருக்கக்கூட நேரமில்லாமல் போய்விட்டது. குண்டர்கள் அவரைச் சூழ்ந்து துப்பாக்கியால் சுட்டனர். இரண்டு குண்டுகள் வயிற்றிலும், ஒரு குண்டு மார்பிலும் பாய்ந்தன. அவர்களில் ஒருவன் மும்தாஜ் பீகத்தைக் கத்தியால் பல விடங்களிலும் குத்தினான். ஆனால் அவள் அடங்காமல் எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்தாள். இதற்குள் எதிர்பாராத வகையில், நான்கு ஆங்கில ராணுவ உத்தியோகஸ்தர்கள் ஒரு காரில் வந்துகொண்டிருந்தார்கள். அவர்களில் லெப்டினெண்ட் ஸீகார்ட் என்பவர் சற்றுத் தூரத்திலேயே இந்தக் கோரக் காட்சியைக் கண்டார். அங்கே வந்ததும் மும்தாஜ் பீகத்தின்மீது விழுந்து குத்திக் கொண்டிருந்தவனைப் பிடித்தார். அவன் சும்மா இருக்கவில்லை. சட்டைப் பையிலிருந்த ரிவால்வரை எடுத்து ஸீகார்ட் மீது சுட்டான். மற்றவர்கள் பின்னே நின்று கத்திகளை வீசினார்கள். இரண்டு மூன்று துப்பாகிக் குண்டுகள் தாக்கின. ஆனால் ஸீகார்ட் மட்டும் தாம் பிடித்திருந்தவனை விடவே இல்லை. இதற்குள் இந்த அல்லோல கல்லோலங்களை அறிந்து அக்கம் பக்கத்திலிருந்தவர்கள் ஓடிவந்து சேர்ந்தார்கள். ஸீகார்ட் பிடித்துக்கொண்டிருந்தவனைத் தவிர மற்றவர்கள் எல்லாரும், இனி இங்கே இருந்தால் ஆபத்து என்றெண்ணிக் காருக்குள் குதித்தனர். தங்களை யாரும் பின் தொடராமல் இருப்பதற்காக நான்கு திக்கிலும் துப்பாக்கி வேட்டுகளை எழுப்பினர். விரைவில் தப்பி மறைந்தனர். ஒருவன் மாத்திரம் அகப்பட்டான்....

....ஆஸ்பத்திரியை அடையும் போது மணி ஒன்பது. இரவு 12, மணி வரை பாவ்லா உயிர்தாங்கி யிருந்தார். அவர்

தமது சொத்துக்களை யெல்லாம் அன்னையார் பேரில் எழுதி வைத்தார். ஐம்பதினுயிரம் ரூபாய் மாத்திரம் மும்தாஜ் பீகத்திற்கு எழுதி வைத்தார். சத்திர சிகிச்சை நடந்த போது இரவு 1 மணி. பாவ்லா உயிர் நீத்தார்."

பிறகு இந்தூர் சமஸ்தான உத்தியோகஸ்தர் ஒன்பது பேர் கைது செய்யப்பட்டுப் பம்பாய் ஹைகோர்ட்டில் விசாரிக்கப்பட்டனர். அவர்களில் இருவர் விடுதலை அடைந்தனர். மற்றவர்களில் சிலருக்குத் தூக்குத் தண்டனையும், சிலருக்குத் தீவாந்தர சிக்ஷையும் விதிக்கப்பட்டன.

பின்பு பாவ்லா கொலையில் துகோஜிராவ் ஹோல்காருக்குச் சம்பந்தம் உண்டா இல்லையா என்று முடிவு செய்வதற்கு, இந்திய சர்க்கார், ஒரு தனி விசாரணைக் கமிட்டி அமைக்கத் தீர்மானித்தது. இந்தக் கமிட்டியின் விசாரணையைச் சமாளிக்கத் துணிச்சல் இன்றி, மஹாராஜா துகோஜிராவ் ஹோல்கார் சிம்மாசனம் துறந்து மனச்சாந்தியின் பொருட்டு (?) மேனுடுகளுக்குச் சென்றுர்

மேனுடுகளுக்குச் சென்றுரே ஒழிய மறுபடியும் காமலீலைகட்கு வாய்ப்புக் கிடைக்கும்வரை அவருக்கு மனச்சாந்தியே ஏற்படவில்லை. அவர் முதலில் சுவிட்ஜர்லந்துக்குச் சென்றுர். அங்கிருந்து பிரான்ஸுக்குப் புறப்பட்டார். ஆனுல் எங்கும் தாம் எதிர்பார்த்த மனச்சாந்தி கிடைக்கவே இல்லை. பிறகு துகோஜிராவ் மஹாராஜா கலிபோர்னியா (அமெரிக்கா) வுக்குப் போனுர். அங்கேதான் அவர் சாந்தி தேவதையைச் சந்தித்தார். மிஸ் மில்லர் அறிமுகம் ஆனுள். அறிமுகம் உடனே காதலாக மாறி, அக்காதல் கலியாணமாக மாறிவிட்டது. மஹாராஜா மிஸ் மில்லரை ஹிந்து மதத்தில் சேர்த்தார். கலியாணம் செய்தார். இந்தக் கலியா

ணத்தைப் பற்றி, "சாந்த்" பத்திரிகை இவ்வாறு எழுதியது: "சில ஜோசுகுரும் வாலாக்கள் மஹாராஜாவுக்கும் மில்லருக்கும் நடந்த கலியாணம் சாஸ்திரோக்தமானது—தர்ம சம்மதமானது என்று வாதிக்கலாம். ஆனால் நம்மால் இதை ஒப்புக்கொள்ள முடியாது..............

"சாரதாபீடம் சங்கராச்சாரிய ஸ்வாமிகள் இந்தப் பாவச் செயலுக்குத் தர்ம முத்திரை போட்டார். இது எந்தத் தர்மமானாலும் சரி, இரண்டு மனைவிகள் உயிரோடிருக்கும்போது மூன்றாவது கலியாணம் செய்வதற்கு அங்கீகரிப்பது தர்மம் ஆகாது; ஆகமுடியாது. இதுவே தர்மம் என்றால், இத்தகைய தர்ம சம்பிரதாயங்களை அழித்து ஒழிக்க வேண்டியது ஒவ்வொருவருக்கும் நீங்காக் கடமை ஆகும்."

இரண்டாவது ஒரு ராஜாதி ராஜனுடைய கதை

அந்த மஹாராஜா 1925-ம் ஆண்டில் வெளிநாடுகட்கு யாத்திரை சென்றார். அவர் பாரிஸ் நகரில் இருந்த காலத்தில் ராபின்ஸன் மனைவியுடன் பழக்கம் ஏற்பட்டது. அவள் அதற்கு முந்தியே புருஷனுடன் வாழாமல் பிரிந்திருந்தாள். தாய்-தந்தையரிடம் பெற்ற செல்வத்தை வைத்துக் கொண்டு லண்டன், பாரிஸ் நகரங்களில் உல்லாசமாகச் சஞ்சரித்துக் கொண்டிருந்தாள். இவ்விதம் அவள் தன்னிச்சையாய்த் திரிந்துகொண்டிருந்தபோது நியூடன் என்பவனோடு கொஞ்சம் தொடர்பு ஏற்பட்டது. நியூடன் பக்காத்திருடன். கொட்டாவிவிட்டால் குடல்களைக் கணக்கிடும் கெட்டிக்காரன். அவன் அந்த மஹாராஜாவுக்கும் ராபின்ஸன் மனைவிக்கும் ஏற்பட்ட தொடர்பு, வெகு வேகத்தில் காதலாக மாறி வருவதைக் கண்டு கொண்டான். உடனே ராபின்ஸனிடம் சென்று "உன்

மனைவி ஒரு கறுப்பனுடன் நட்புப்பூண்டிருக்கிறாள். எனவே அவளை உடனே விவாக ரத்துச் செய்து நீக்கிவிடு" என்று எச்சரிக்கை செய்தான்.

ராபின்ஸன் அப்பாவி. தன் மனைவியின் ஒழுக்கத்தைப்பற்றி அவனுக்கு என்றும் கடுகளவு சந்தேகமும் ஏற்பட்டதில்லை. நியூடன் சொன்னதைக் கேட்டதும் அவனுக்குச் சினம் பொங்கியது. மறு பேச்சின்றி விவாக ரத்துச் செய்ய ஒப்புக்கொண்டான்.

நியூடனும் ராபின்ஸனும் ஹாப்ஸ் என்னும் சொலிஸிட்டர் குமாஸ்தாவிடம் சென்றார்கள். இந்த ஹாப்ஸ் சாமானியன் அல்லன். பக்காப் பேர்வழி. தானே சொலிஸிட்டராக நடித்து, வேண்டிய காகிதங்களைத் தயாரித்தான். மிகவும் அப்பாவியான ராபின்ஸன், அவன் காட்டிய இடங்களில் கையெழுத்துப் போட்டுவிட்டு வீட்டுக்குச் சென்றான்.

பின்னர் ஹாப்ஸ், நியூடன் ஆகிய இருவரும், "விவாக ரத்தின் பொருட்டு வழக்குத் தொடுக்கப்போகிறோம். ஜாக்கிரதை" என்று மேற்படி மஹாராஜாவை அச்சுறுத்தி, மிட்லண்ட் பாங்கி செக் $1\frac{1}{2}$ லக்ஷம் பவுன்களுக்கு வாங்கிக்கொண்டனர். இந்தச் செக்கில் நியூடன், ராபின்ஸன் கையெழுத்தைப்போல் பொய்க் கையெழுத்திட்டான். முழுத்தொகையையும் தானே பெற்றுக்கொண்டான். இருபத்தோராயிரம் பவுன்களை மாத்திரமே ராபின்ஸனிடம் கொடுத்தான். "மஹாராஜா இருபத்தையாயிரம் பவுன் கொடுத்தார். அத்தொகையில் நான்காயிரம் பவுன் சொலிஸிட்டர் ஹாப்ஸுக்குப் பீஸ் கொடுக்கப்பட்டது" என்று கூறினான்.

ஹாப்ஸ், நியூடன் ஆகிய இருவரும் செய்த பித்த லாட்டம் சில நாள் சென்ற பிறகுதான் ராபின்ஸனுக்குத் தெரிந்தது. உடனே அவன் மிட்லண்ட் பாங்கிமீது செக்கில் கண்ட தொகை முழுதும் தனக்கே சேரவேண்டும் என்று வழக்குத்தொடுத்து வென்றான். இப்பொழுதுள்ள காஷ்மீர சமஸ்தானாதிபதிதான் மேற்சொன்ன கதாநாயகர்.

மூன்றாவது ராம்பூர் நவாப் கதை

1933-ம் ஆண்டு செப்டம்பர்மீ 17-ம் தேதி வெளியான "பிரின்ஸிலீ இந்தியா" என்னும் பத்திரிகையில் கீழ்வருமாறு காணப்படுகிறது:

"சமீபத்தில் ராம்பூர் நவாப், பெற்றதாயையும், உடன் பிறந்த சகோதரியையும் எப்படி நடத்தினார் என்று பாருங்கள். அவர்கள் இருவரையும் ராம்பூரில் உள்ள ஒரு பழைய மலைக்கோட்டையில் அடைத்துவைத்தார். தம்முடைய ஒரே மகளின் பொருட்டுப் பரிந்து பேசிய காரணத்திற்காகவே தாயாரைப் படாதபாடு படுத்தினார் அந்த நவாப்.

"குடிகளுக்குத் துன்பங்களை விளைவிக்கும் ராஜாக்களைப்பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். ஆனால் பெற்ற தாயையும், உடன் பிறந்த சகோதரியையும் ராம்பூர் நவாப் படுத்திய பாட்டைப்போல் இதுவரை எங்கும் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை. அவர்களை இவ்விதம் துன்புறுத்துவானேன்? அவர்கள் ஏதேனும் குற்றம் செய்தார்களா? இல்லை! இல்லை!! அவருடைய கொடிய மிருக இச்சையே இதற்குக் காரணம்.

"ராம்பூர் நவாப்பின் விபரீதப்போக்கைக் கண்டு ஆத்திரப்படுவதா? பரிதாபப்படுவதா? காமவெறியும், எதேச்சாதிகாரமும் அவருடைய கண்களை மூடிவிட்டன. இத னால் அவருக்கு வரிசை—வரன்முறைகள்கூடத் தெரியவில்லை. வாலிப மிடுக்கிலிருந்த நவாப், தம்முடைய மருகர்களிடம், தங்கள் மனைவிமாரை விவாகரத்துச் செய்து விலக்குமாறு வற்புறுத்தினர். மருகர் மனைவிமாரின் எழில் நலம் அவருடைய காமவிகார உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிட்டது. அப்பெண்களை அவர் கலியாணம் செய்கொள்ள விரும்பினர். இதுதான் இந்தச் சங்கடங்களுக்கெல்லாம் காரணம்.

"நவாப் எத்தனைபெயரை வேண்டுமாஞலும் கலியாணம் செய்துகொள்ளலாம். வேண்டியபடி வைப்பாட்டிகளையும் வைத்துக்கொள்ளலாம். அழகிய பெண்களைக் கண்டால் பலாத்காரத்தால் கவர்ந்து கொண்டுவரச் செய்யலாம். இப்பேர்ப்பட்ட காரியங்களில் தலையிட அவருக்குச் சக்தி, சாமர்த்தியம், இடம், பொருள், ஏவல்கள் எல்லாம் இருக்கின்றன. இவ்வளவு சௌகரியங்கள் இருந்தும் குற்றமற்றவர்களும், திக்கற்றவர்களுமான மருகர் மனைவிமார் மீது இவர் கண்ணும் கருத்தும் செலுத்தியது ஏன்? அவர்களைத் தம் குமாரிகளைப்போல் எண்ணுமல் மனைவிகளாக்க எண்ணியது ஏன்? இது என்ன ஆசை? மருந்தே இல்லாத ஒரு விபரீத நோய் என்பதைத் தவிர வேறென்ன சொல்லுவது?

"அக்கிரமமானதும், மனிதத்தன்மையற்றதுமான இந்தக் கலியாண ஆசையை அங்கீகரிக்காத காரணத்தால், ராம்பூர் நவாப் தாயையும், சகோதரியையும், மருகரையும்

சிறையில் அடைத்தார். இளைய மருகனை நெருக்கி நிர்ப் பந்தப்படுத்தி விவாக ரத்துச் செய்யச் சொன்னார். இந்த இளைய மருகனுடைய மாமனார் மாலேர்கோட் நவாப்.

"மாலேர்கோட் நவாப் இவ்விஷயத்தில் மருமகனுக்கு ஒத்தாசையாகப் பாடுபட்டிருக்கவேண்டும். என்ன காரணத்தாலோ அவர் இதில் தலையிடவே இல்லை. ராம்பூர் நவாப்பே தம் மருமகனைக வரவேண்டும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தார் போலும்! எவ்வளவு அழகான யோசனை!

"மாலேர்கோட் நவாப் மகளான தன் மனைவியை விவாக ரத்து மூலம் விலக்கவேண்டும் என்று கட்டாயப் படுத்திய காலத்தில், ராம்பூர் நவாப், அவனுக்கு வேறு கலியாணம் செய்துவைப்பதாகக் கூறினார். ராம்பூர் நவாப் புக்கு ஒரு வயதுள்ள பெண்குழந்தை ஒன்றுண்டு. இந்தப் பச்சிளங்குழந்தையையே தம் இளைய மருகனுக்குக் கலி யாணம் செய்துகொடுக்கவேண்டும் என்று சொன்னார்."

இந்த நவாப்பின் திருவிளையாடல்களைப்பற்றி "பிரின் ஸிலீ இந்தியா" இன்னும் எவ்வளவோ செய்திகளை வெளி யிட்டது — வெளியிட்டுக்கொண்டிருக்கிறது. அவற்றை யெல்லாம் இங்கே எடுத்துக் காட்டவேண்டியது அநா வசியம்.

ஜாப்வா சமஸ்தானதிபதி ராஜா உதயசிங் கதை

இவர் 1934-ம் ஆண்டு ஏப்ரல் மாதம்வரை மொத்தம் ஒன்பது கலியாணங்களைச் செய்திருந்தார். அந்த ஒன்பது பத்தினிமார்களின் பெயர்கள் வருமாறு :—

1 திமெகர் ராணி
2 தரம்புரி ராணி
3 கெரோட் ராணி
4 ஷிமெபூர் ராணி (கௌ ராணிஜி)
5 தரியாவாட் ராணி
6 சந்த்ரம்பூர் ராணி
7 குரவாட் ராணி
8 பராட் ராணி
9 புல்ஸீ ராணி

இந்த ஒன்பது பத்தினிமாரும் போதவில்லை என்று பஸ்வான்கள் என்னும் பெண்கள் இருபத்தாறு பேரைக் கொண்டுவந்து வைத்திருந்தார். பஸ்வான்கள் என்றால் யார் ? சமஸ்தானாதிபதியின் கலியாண சம்பந்தமற்ற காதல் கிழத்திகள்! இவர்கள் மற்றவர்களின் மனைவிமாரா யிருந்தாலும் இருக்கலாம். எனினும் இவர்களுக்கு விவாக ரத்து அவசியம் இல்லையாம். சமஸ்தானாதிபதியின் காமக் கண்ணுக்குக் குறியானால் போதும். அவள் எப்பேர்ப்பட்ட பெண்மணியானாலும் அவருக்கு உட்பட்டே தீரவேண்டும்! சமஸ்தானாதிபதியின் காம இச்சைக்கு அவள் கட்டுப்பட வேண்டும்; இன்றேல் தன்னுயிரையும், தன்னைச் சேர்ந்த வர்களின் உயிர்களையும் இழக்கத் தயாராக இருக்கவேண்டும். இந்த ஜாப்வா ராஜாவின் காமக் கிழத்திகளான பஸ்வான்களைப் பற்றிய விவரங்கள் வருமாறு :—

எண்	பஸ்வான் பெயர்	புருஷன் இருந்தால் அவர்கள் பெயர்
1	பகீரதிபாய்	கிஷன் (ரட்லம்)
2	நவரதன்பாய்	ஜகந்நாத்

3	சந்திராபாய்	ஸூவ
4	நாபீபாய் (ஜூனியர்)	செயின்சிங்
5	மோதி	இறந்தாள்
6	காமிரா	நாராயண் இறந்தாள்
7	கன்வேரி	ராம
8	குலி	மதன்
9	காசி பாய்	ஜகந்நாத்
10	கோதி	பட்டா (11. மீனு தாய்)
11	மீனு	(10. கோதி மகள்)
12	ராமஜோதி	மதன் (நாபியின் தாய்)
13	சுந்தரி	
14	மேதாப்	மோஹன் இறந்தாள்
15	பார்வதி	
16	லலிதா (தியோகர்)	(ஜானி தங்கை)
17	நாபி (ஸீனியர்)	
18	கெஷி	கன்யலால்
19	ராமஸ்வரூபி	ராம
20	மோதி	பாபாஜான்
21	தேவ்தபயான்	
22	ஸாமத்	ஜக்கு இறந்தாள்
23	ஸூர்ஜி	கம
24	ஜாபீபாய்	புருஷன் தெரியவில்லை
25	வஸந்தி	பிரதாப் (மஹாராஜாவே இப் பெண்ணைக் கன்னிகாதானம் செய்தவர்)
26	லலிதா	கிஸோர்ஸிங் (இந்தப் பெண்ணுக்கும் மஹா ராஜாவே கன்னிகாதானக் கர்த்தர்)

போகட்டும். இத்துடனாவது இவருடைய காம வேட்கை தீர்ந்ததா? அப்பப்ப! இல்லவே இல்லை. சீஜ, மகியா, சாந்தகுமாரி என்ற மூன்று வேசிகளையும் வைத்துக் கொண்டார்!

மஹாராஜாக்களின் காமவேட்கையும், விபசார விபரீதமும் எப்படி இருக்கின்றன என்று பார்த்தீர்களா? இப்படிப்பட்ட கண்ணற்ற காமுகர்களான மஹாராஜாக்கள் செய்யும் அதிக்கிரமக் கொடுமைகளைப் பற்றி கௌயா கீழ்வருமாறு விளக்குகிறார்:

"சமஸ்தானாதிபதியின் அந்தப்புரத்தில் நடக்கும் காரியங்களை யெல்லாம் உடனே தெரிந்துகொள்ளுவது எளிதன்று. அசாத்தியம். நாளாவட்டத்தில் உண்மை வெளிப்பட்டுக்கொண்டிருக்கும். சில ஆண்டுகள் சென்ற பிறகுதான் பட்டங் துறந்த ஒரு சமஸ்தானாதிபதியின் அந்தப்புரத்தில், புதையுண்டு போன சில பெண்களின் எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டன. மஹாராஜாவின் மிருக விருப்பத்திற்கு இணங்காத பெண்மணிகளின் கதி இப்படி ஆயிற்று! அவருடைய ராக்ஷஸ விளையாட்டுக்களுக்கு "முடியாது" என்று மறுக்க, மிகுந்த துணிவும் திறமையும் வேண்டும். "முடியாது" என்ற பெண்மணி தனக்கு இழைக்கப் படும் கொடுமைகளைச் சாதாரணமாய் மற்றவர்களிடம் சொல்ல மாட்டாள். அந்தச் சித்திரவதைகளுக்குத் தப்பி உயிர் வைத்துக் கொண்டிருந்தால் தானே மற்றவர்களிடம் சொல்ல முடியும்? மஹாராஜாவின் விருப்பத்திற்கு இணங்காமல் எதிர்க்கும் பெண்மணிக்குச் சகஜமாய்க் கொடுக்கப்படும் தண்டனை—ஒரு பெரிய சமஸ்தானத்தில் பல ஆண்டுகள் மந்திரி பதவி வகித்த பிரமுகர் ஒருவர் சொன்னதுபோல்—சமஸ்தான சிப்பந்தியை ஏவிச் செய்யும்

மானபங்கமே! சிற்சில சமயங்களில் நவநவமான நூதன தண்டனை முறைகள்கூடக் கையாளப்படும். பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியை மர்மஸ்தானத்தில் செருகல், கொங்கைகளை அறுத்தல், மூக்கையறுத்து முகத்தை விகாரப்படுத்தல் முதலியன நூதன தண்டனைகளில் குறிப்பிடத்தக்கவை. குழந்தைகளையுடைய தாயாக இருந்தால் அவள் கண் முன்னே அந்தக் குழந்தைகள் துன்புறுத்தப்படும். மேலும் 'கோகைன்' விஷத்தால் அவளுடைய உடம்பை வாட்டி இளைக்கச் செய்து கொல்லும் முறையும் உண்டு."

யாரைப்பற்றி கௌபா இப்படி எழுதுகிறார்? மனிதரைப்பற்றித் தானா? அல்லது?................

சொந்தச் செலவு

"ஒழுங்கான முறையில் ஆட்சி நடைபெறும் சமஸ்தானங்கள்" என்று கொஞ்சம் நல்ல பெயர் எடுத்திருப்பவைகளை விரல் விட்டு எண்ணி விடலாம். இவற்றுள் குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்தவை மூன்று. அவை: மைசூர், பரோடா, திருவாங்கூர். இந்தச் சமஸ்தானுதிபதிகள்கூடச் சொந்தச் செலவின் **(Privy Purse)** கீழ் பொக்கிஷத்திலிருந்து அநாவசியமாய் (அக்கிரமமாய்) ஏராளமான தொகைகளை எடுத்துக் கொள்ளுகிறார்கள்.

மைசூர் மஹாராஜா 1931—32-ம் ஆண்டில் சொந்தச் செலவுக்காக 21 லக்ஷ ரூபாய் எடுத்துக்கொண்டார். அந்த ஆண்டிலேயே திருவாங்கூர் மஹாராஜா 14 லக்ஷத்து 56 ஆயிரம் ரூபாய் எடுத்துக்கொண்டார். சமஸ்தான வருமானத்தில் நூற்றுக்குச் சுமார் ஐந்து பங்கு விகிதம் மைசூர் மஹாராஜாவும், ஏழு பங்கு விதம் திருவாங்கூர் மஹாராஜாவும் சொந்தச் செலவு செய்தார்கள் என்று ஏற்படுகிறது.

செலவு வகையில் மைசூர், திருவாங்கூர் மஹாராஜாக்களை இத்தாலி நாட்டுத் தலைவரோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம். இத்தாலி சுதந்தர நாடு. இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி முதலிய நாடுகளுடன் அதற்குச் சம அந்தஸ்து உண்டு. அது விரும்பினால் உலக அமைதியை நிலைநாட்டலாம்; அல்லது கெடுக்கலாம். இத்தகைய நாட்டுத் தலைவரைக் காட்டிலும் மைசூர் மஹாராஜா சொந்தச் செலவு

1½ மடங்கு அதிகமாகச் செய்து வருகிறார்! திருவாங்கூர் மஹாராஜா சற்றேறக் குறையச் சரிசமமான தொகையைச் செலவு செய்து வருகிறார்!!

மைசூர் வருஷ வருமானம் இத்தாலி வருமானத்தை விட அதிகம் என்றோ, திருவாங்கூர் வருமானம் ஏறக் குறைய அதற்குச் சமம் என்றோ எண்ணிவிடாதீர்கள்! அப்படி ஒன்றும் இல்லை. இத்தாலி நாட்டு வருமானம் சுமார் 20 கோடி பவுன்கள். மைசூர் வருமானம் அதில் 70-ல் 1 பங்கு மாத்திரமே! திருவாங்கூர் ஆதாயம் சுமார் 17½ லக்ஷம் பவுன்களே! மற்றச் சமஸ்தானாதிபதிகளுக்கு வழிகாட்டிகள் — ஆதர்ச புருஷர்கள் என்று சொல்லத்தக்க மைசூர், திருவாங்கூர் சமஸ்தானாதிபதிகளே சொந்தச் செலவுக்காக இவ்வளவு பெருந் தொகைகளை எடுத்துக்கொள்ளும்போது, இனி மற்றவர்களின் சங்கதியைச் சொல்லவும் வேண்டுமோ? எனினும் மஹாராஜாக்களின் டம்பச் செலவுகளின் விபரீதப் போக்கு எப்படி இருக்கிறது என்று அறிவிக்க இரண்டொருவரையேனும் உதாரணமாகக் காட்டாமல் போவது நியாயம் அன்று.

உலகத்திலேயே மிகப் பெரிய ஏகாதிபத்தியத் தலைவராக விளங்கும் பிரிட்டிஷ் மன்னரின் சொந்தச் செலவு 4,70,000 பவுன்கள். ஜப்பான் சக்ரவர்த்தியின் செலவு 4.50,000 பவுன்கள். நஜரானு முதலியவைகளைச் சேர்த்துக் கொண்டால் நைஜாம் மன்னரின் சொந்த வரவு, பிரிட்டிஷ், ஜப்பான் சக்கரவர்த்திகளின் சொந்த வரவுக்கு ஏகதேசம் நிகராகவே இருக்கும்! இதைவிட விபரீதம் எங்கேனும் காணமுடியுமா? சர்க்கார் வருமானத்தைப் பாருங்

கள்! பிரிட்டிஷ், ஜப்பான் சர்க்கார்களுக்கு வரும் வருவாயில் ஹைதராபாத்துக்கு வரும் வருவாய் 1/300 விகிதம் கூட இல்லை!

"உலகத்திலேயே எங்கும் காண முடியாத அநியாயம்! அந்நிய அரசாங்கத்தை நிர்வகிப்பதற்காகவே மேற்சொன்ன அநியாயங்கள் எல்லாம் நடத்தப்படுகின்றன. உதாரணமாக உங்களுடைய சம்பளத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். அநாவசிய அநியாய வழியில் செலவு செய்யப்படும் தொகைகளைத் தவிர, தங்களுக்குச் சம்பளமாக மாதம் 1க்கு 21,000 ரூபாய் கொடுக்கவேண்டியிருக்கிறது. பிரிட்டிஷ் முதல் மந்திரியின் மாதச்சம்பளம் சுமார் 5,400 ரூபாய் மாத்திரமே! இந்தியரின் சராசரி மொத்த தினசரி வருமானம் ஆள் 1க்கு இரண்டணாக்கூட இல்லை. ஆனால், நீங்களோ? நாள் ஒன்றுக்கு எழு நூறு ரூபாய்களுக்கு மேல் கைப்பற்றி வருகிறீர்கள். கிரேட் பிரிட்டன் மக்களின் சராசரி மொத்த வருமானம் ஆள் ஒன்றுக்கு ஒரு நாளைக்கு 2 ரூபாய்! அப்படியிருந்தும் பிரிட்டிஷ் முதல் மந்திரி நாள் ஒன்றுக்கு 180 ரூபாய் மாத்திரமே பெற்றுக்கொண்டு வருகிறார். இந்தியாவின் சராசரி மொத்த தினசரி வருமானத்தை விட 5000 மடங்கு அதிகமாக உங்களுக்குக் கிடைக்கிறது. பிரிட்டிஷ் முதல் மந்திரிக்கு பிரிட்டிஷ் மொத்த வருமானத்தைக் காட்டிலும் அதிகமாயிருப்பது 90 மடங்கு மாத்திரமே!" என்று உப்புச் சத்தியாக்கிரகம் தொடங்கு முன் வைஸிராய்க்குக் காந்தியடிகள் எழுதினார்.

இந்தியரின் சராசரி தின வருமானத்தை விட 5000 மடங்கு அதிகமாக வைஸிராய் வாங்கிக்கொள்ளுவதே அக்கிரமம் என்றால், நைஜாம் செய்யும் வேலையை என்ன

என்று சொல்லுவது? வாசகர்களே நிர்ணயிப்பார்களாக. நைஜாமின் சொந்த வருமானம் இந்தியனின் சராசரி வருமானத்தை விட லக்ஷம்—இரண்டு லக்ஷம் பங்கு அதிகமாக இருக்கவேண்டும் என்று முடிவு கட்டலாமே!

ஒரு ஆண்டில் நைஜாமுக்கு வரும் சொந்த வருமானத் தொகையை மாதம் 1க்கு நூற்றுக்கு 12 அணா வட்டி வீதம் பாங்கியில் போட்டால், வட்டித்தொகை மாத்திரமே வைஸிராய்க்கும், அவருடைய நிர்வாகச் சபை அங்கத்தினர்களுக்கும் சாசுவதமாகச் சம்பளம் கொடுத்து வரலாம்!

மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப்பார்த்தால் நம்முடைய சமஸ்தானங்களின் நிலைமை எவ்வளவு வேற்றுமையாயிருக்கிறது என்று நன்ருக விளங்கும். கீழ்வரும் விவரங்களால் அவ்வுண்மையை அறிந்துகொள்ளலாம்.

நாடுகள்		சர்க்கார் வருமானத்தில் அதிபதியின் சொந்தச் செலவு
இங்கிலாந்து	....	1600-ல் ஒரு பங்கு
பெல்ஜியம்	....	1000-ல் ஒரு பங்கு
இத்தாலி	....	500-ல் ஒரு பங்கு
டென்மார்க்	....	300-ல் ஒரு பங்கு
ஜப்பான்	....	400-ல் ஒரு பங்கு
நார்வே	....	700-ல் ஒரு பங்கு
ஸ்பெயின் (குடியரசுக்கு முன்)		500-ல் ஒரு பங்கு
திருவாங்கூர்	....	17-ல் ஒரு பங்கு
மைசூர்	....	14-ல் ஒரு பங்கு
நைஜாம்	....	13-ல் ஒரு பங்கு
பரோடா	....	13-ல் ஒரு பங்கு
காஷ்மீரம்	....	5-ல் ஒரு பங்கு
பிகானிர்	....	5-ல் ஒரு பங்கு

பிரிட்டிஷ் மன்னர்பிரானே சர்க்கார் வருமானத்தில் 1600-ல் ஒரு பங்கைச் சொந்தச் செலவுக்கு எடுத்துக் கொள்ளும்போது காஷ்மீர், பிகானிர் மஹராஜாக்கள் 5-ல் ஒரு பங்கு எடுத்துக்கொள்ளுவது எவ்வளவு அநியாயம் என்பதை வாசகர்கள் கவனிப்பார்களாக. இந்த அதிகார ஆரம்பத்தில் குறிப்பிட்ட சமஸ்தானாதிபதிகளே எவ்வளவோ மேலானவர்கள் என்று சொல்ல வேண்டும். மலைவிழுங்கி மகாதேவர்கள் மற்றும் பலர் இருக்கின்றனர். அவர்கள் வருகிற வருமானத்தில் சரி பகுதிக்குமேல் தாங்களே விழுங்கி ஏப்பமிட்டுவிடுவார்கள்!

நமது நாட்டில் ராணுவச் செலவு விபரீதம். இதைப் பற்றி அடிக்கடி குறை கூறப்படுவது உண்டு. இந்தப் பழியினின்று ஓரளவேனும் தப்பிக்கொள்ளலாம் என்ற எண்ணத்துடன் இந்திய அரசாங்கம் ஒரு தந்திரம் செய்வது வழக்கம். அதாவது ராணுவச் செலவுகளில் சிலவற்றை ரயில்வே, பொருளாதார இலாகாக்களில் நுழைத்துவிடும். சில சமஸ்தானாதிபதிகள்கூட இந்தத் தந்திரங்களையே கையாண்டு வருகிறார்கள். அரண்மனையை அழகுபடுத்தும் செலவுகளைப் பொது மராமத்து இலாகாச் செலவில் சேர்த்து விடுவார்கள். வேட்டையாடப் போகும் செலவுகளைக் காட்டிலாகாக் கணக்கில் எழுதிவிடுவார்கள். காமக் கிழத்திகளின் செலவுகளை--கௌபா சாதுரியமாய்ச் சொன்னதுபோல் — "ஹோம் டிபார்ட்மெண்ட்" கணக்கில் சேர்த்து விடுவார்கள்.

இதற்கு உதாரணமாக இந்தூரை எடுத்துக் கொள்ளலாம். இந்தச் சமஸ்தானத்திற்கு 1926-ம் ஆண்டில்

1,28,10,887 ரூபாய் வருமானம் வந்தது. அந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் மஹாராஜாவின் சொந்தச் செலவின் பொருட்டு 23,22,924 ரூபாய் ஒதுக்கிவைக்கப் பட்டது. மொத்த வருஷ வருமானத்தில் 100க்கு 18 விகிதம் சமஸ்தானாதிபதியின் சொந்தச் செலவுகளுக்குப் போய்விட்டது என்பது இங்கே கவனிக்கத்தக்க விஷயம். ஆனால், உண்மையில் அதைவிட அதிகமாகவே சொந்தச் செலவு ஆயிற்று. அவ்வாண்டில் "லால்பாக்" அரண்மனை நிர்மாணத்திற்காக 6 லக்ஷம் ரூபாய் செலவிடப்பட்டது. இது சொந்தச் செலவினத்தின்கீழ் வரவேண்டும். அப்படி வந்ததா? இல்லை. பொது மராமத்து இலாகாச் செலவினத்தில் சேர்க்கப்பட்டது. மற்றும் சில ராஜமாளிகைகள் சீர்திருத்தம் செய்யப்பட்டதற்கு, மேலும் ஆறுயிரம் ரூபாய் செலவாயிற்று. அதுவும் ஷை கணக்கிலேயே எழுதப்பட்டது. வேட்டையின் பொருட்டுச் செலவான 12 ஆயிரம் ரூபாயைக் காட்டிலாகாக் கணக்கில் நுழைக்கப்பட்டது. இந்தத் தொகைகளையும், இப்படியே செலவாகும் மற்றத் தொகைகளையும் சேர்த்துக் கணக்கிட்டால் சமஸ்தானாதிபதியின் சொந்தச் செலவு 18 சத விகித அளவில் நில்லாது; 22 சத விகிதம் வரை பெருகும்!

அநேகமாய் எல்லாச் சமஸ்தானங்களிலும் கணக்கு வைக்கும் முறை ஏறக்குறைய இப்படியே! இது என்ன நியாயமோ, நீதியோ, தர்மமோ........

அமிர்தலால் தாக்கர் "இந்திய ஊழியர் சங்க" அங்கத்தினர். அகில இந்திய 'ஹரிஜன' சேவாசங்கக் காரியதரிசி. இவரை அமிதவாதி—தீவிரவாதி என்று எதிரிகளும் கூறத் துணியார். இத்தகைய தாக்கர் பாபு, சமஸ்தானாதிபதி

களின் செலவுகளைப்பற்றிக் கூறுவதைப் பாருங்கள்; "தாங்கள் செய்யும் செலவுகளைப்பற்றிக் கேட்க யாருக்கும் உரிமை இல்லை என்ற காரணத்தால் மஹாராஜாக்கள், சமஸ்தான பொக்கிஷத்தைத் தங்கள் சொந்தப் பொக்கிஷம் போலவும், சமஸ்தானத்தைத் தனிப்பட்ட சொந்த எஸ்டேட்போலவும் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்................ அநேக சந்தர்ப்பங்களில் சமஸ்தான வருமானத்தில் பாதிக்குமேல், மஹாராஜாவுக்காகவும், அவருடைய குடும்பத்திற்காகவும் செலவழிந்து போகிறது."

வேலியே பயிரை மேய்ந்தால், கலிகாலக்கூத்து என்பதைத்தவிர வேறு என்ன சொல்லுவது?

வீண் செலவு

"பசித் தீயால் வாடி வதங்கிக்கொண்டிருக்கின்றன பச்சிளங் குழந்தைகள்! அவற்றின்பரிதாப நிலைமையைப் பார்க்கச் சகியாதவர்களானார்கள் தாய்மார்கள். எனவே காப்பாற்ற வேறு வழியின்றி அக்குழந்தைகளின் கழுத்துகளைத் திருகித் தாய்மையைத் தத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள் ஒரு பக்கம். வெள்ளை அதிகார வர்க்கத்தினருக்கு வரவேற்புகள் அளிக்கவும், அவர்கட்கு விருந்துகள் நடத்தவும் லக்ஷக்கணக்கான ரூபாய்கள் வீண் விரயம் செய்யப்படுகின்றன மற்றொரு பக்கம். பாதுகாப்பு விடுதிகள் சூனியமான காரணத்தால் ஆயிரக்கணக்கான பெண்களும், குழந்தைகளும் உயிர் விட்டுக்கொண்டிருக்கிறார்கள் ஒரு பக்கம். நாய்களை வாங்கி வளர்ப்பதற்காக லக்ஷக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்யப்படுகின்றன மற்றொரு பக்கம். பள்ளிக்கூடங்கள் இல்லாத காரணத்தால் கோடிக்கணக்கான சிறுவர்—சிறுமியர் கல்வியறிவு பெறும் ஜீவாதார உரிமையை இழந்து தவிக்கின்றார்கள் ஒரு பக்கம். குடிமக்களின் ரத்த மாமிசங்களைக் கசக்கிப்பிழிந்து எடுத்த பொருட் குவியல்கள், தாஸி வேசிகளின் பாதகமலங்களில் அர்ப்பணம் செய்யப்படுகின்றன மற்றொரு பக்கம்."—"சாந்த்" பத்திரிகை ஒரு சமயத்தில் சமஸ்தானாதிபதிகளைப்பற்றி வெளியிட்ட வருணனை இது.

மக்கள் உள்ளங்களைக் கவர்ச்சி செய்யவேண்டும் என்று வருணித்த உயர்வு நவிற்சி அன்று; உண்மை. வாசகர்கள் கொஞ்சம் பொறுமைகாட்டினால் மேற்கண்ட வாக்கியங்களில் உள்ள ஒவ்வொரு எழுத்தும் நம்பிக்கை வாய்ந்தது—உண்மையானது என்று ருஜுப்படுத்தலாம்.

காலஞ்சென்ற நவநகர் ஜாம்ஸாஹெப்-பிரிட்டிஷ் பிரஜைகளால் "ரான்ஜி" என்ற செல்லப்பெயர் பெற்றவர். கிரிக்கட் விளையாட்டில் பலே நிபுணர். இவர் ஒரு ஆண்டில் ஒன்பது மாதங்கள் வெளிநாடுகளிலேயே குடியிருப்பார். இவர் இறப்பதற்கு முன் தேசீயக் கிளர்ச்சியை அடக்கி ஒடுக்க ஒரு வேலை செய்தார். அதாவது ஆங்கிலோ—இந்திய வர்த்தக சம்பந்தத்தை நிலைநாட்ட அதிதீவிர சிரத்தை காட்டினார். இந்தக் கதைகளெல்லாம் இச்சமயம் அநாவசியம். இப்பொழுது சொல்ல வந்த விஷயம் வேறு. காலஞ் சென்ற ஜாம் ஸாஹெப், பலதிறப்பட்ட அரசாங்க அதிகாரிகளுக்கும் எப்படி வரவேற்பு வைபவங்களையும், விருந்து உபசாரங்களையும் நடத்தினார்? அவற்றிற்காகக் குடிமக்களின் வரிப் பணங்களை எப்படி வாரி இறைத்து வீணாக்கினார்? என்பதே இப்பொழுது சொல்ல வந்த விஷயம்.

		ரூபாய் (லக்ஷக்கணக்கு)
ஸிடென்ஹாம் பிரபு	....	7
வெல்லிங்டன் பிரபு	....	10
லாயிட் பிரபு	....	5
ரீடிங் பிரபு	....	5
இர்வின் பிரபு	....	25 (!!)

கடைசியில்—வாழ்க்கையில் கடைசி என்று அர்த்தமில்லை; வரிசைக் கடைசியில் உள்ள 25 லக்ஷ ரூபாய்களும் செலவான விவரங்கள் கீழே காட்டப்பட்டிருக்கின்றன.

		ரூபாய்கள் (ஆயிரக்கணக்கு)
புதிய மோட்டார்கள்	....	400
மோட்டார் படகுகள்	....	580
சிப்பந்திகளின் உடைகள்	....	65
அலங்காரங்கள்	....	200
மலர்மாலைகள்	....	15
கர்ப்பூர ஹாரங்கள்	....	5
புதிய எலக்ட்ரிக் சாமான்கள்	....	150
டேராக்கள்	....	50
பெட்ரோல்	....	25
வேட்டை	....	100
விருந்து	....	100
பர்னிச்சர்	....	100
போட்டோக்கள்	....	35
திவாசிகள்	....	30
வாணவேடிக்கை	....	20
சொல்லுவதற்கு முடியாத காரியங்கள்	....	300
மற்றவை	....	315
மொத்தம்	ரூ.	2500

இந்தப் புள்ளி விவரங்களை ஊன்றிக் கவனித்தால் பெண்டாட்டி கழுத்திலிருந்த தாலியை விற்றுக் கிஸ்து

செலுத்திய குடியானவன் மனம் பகீரென்று பற்றி எரியும். ஆனால் இவைகளைக் கவனித்து ஆவேசம் கொள்ளும் நிலையில் குடியானவர்கள் இல்லையே! பாவம், அறியாமையில் அன்றோ மூழ்கிக் கிடக்கின்றனர்!

பாடியாலா * மஹாராஜாவின் சங்கதியைக் கவனிப்போம். இவருக்கு நாய்கள் என்றால் அளவு கடந்த ஆசை. லண்டனுக்குச் சென்றபோதெல்லாம், இவர் நாய்களை வாங்கும் பொருட்டு லக்ஷக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்வார். இவரைக் கண்டு, நாய்களுக்காக உயிரைக் கொடுக்கும் ஆங்கிலேயர் கூட ஆச்சரியப்படுவார்கள். முதல் வட்டமேஜை மகாநாட்டுச் சந்தர்ப்பத்தில் லண்டன் சென்றபோது, பந்தயப் புறாக்கள் முதலியவற்றை ஏராளமாக வாங்கினாராம். அதே சமயத்தில் பனியன்கள், ட்ராயர்கள் (**Under ware**) மாத்திரம் ஐம்பதினாயிரம் ரூபாய்களுக்கு வாங்கியதாகக் கேள்வி.

நாய்களிடம் அன்பும் அபிமானமும் கொண்டவர் ஒரு பாட்டியாலா மஹாராஜா மாத்திரமா? இல்லை! சமஸ்தானாதிபதிகளில் எத்தனையோ பேர்களுக்கு இந்தப் பைத்தியம் உண்டு. இவர்களில் ஜிண்ட் சமஸ்தானாதிபதி குறிப்பிடத்தக்கவர். இவரிடம் ஆயிரக்கணக்கான பவுன்கள் மதிப்புள்ள நாய்கள் இருக்கின்றன.

சமஸ்தானாதிபதிகள் வேட்டையாடும் பொருட்டுச் செய்யும் செலவுகள் இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது. பட்டந் துறந்திருந்து பரமபதம் அடைந்த

---

* இவர் சமீபத்தில்தான் காலஞ்சென்றார்.

ஆள்வார் மஹாராஜாவின் வேட்டை விநோதங்களைப்பற்றி லண்டன் "டெய்லி ஹெரால்டு" பத்திரிகை ஒரு சமயத்தில் கீழ்வருமாறு குறிப்பிட்டது:

"மஹாராஜா இப்பொழுது ஆஜாப் கர்டர் பக்கம் ஒரு அணைக்கட்டு (**Dam**) நிர்மாணித்துக் கொண்டிருக்கிறார். இதனால் தண்ணீர் வசதி அதிகம் ஏற்படும். இந்த வசதி பாசனத்திற்காகவா? இல்லை. மஹாராஜா வேட்டையாடும் காட்டு வளத்திற்காகவே பயன்படுத்தப்படும்! அணைக்கட்டு வேலையில் மூவாயிரம் பேர் ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் பலவந்தமாகவே கட்டாய வேலை வாங்கப் படுகிறார்கள். இவர்களுக்குக் கூலி கிடையாது. வயிற்றுக்குக் கொஞ்சம் சோறு மாத்திரம் கொடுக்கப்படுகிறது.

"வேட்டையாடுவதில் மாத்திரமில்லை; ஐரோப்பியர்களுக்கு வனவிருந்து நடத்துவதில்கூட மஹாராஜாவுக்குப் பேரும் புகழும் உண்டு.

"1925-ம் ஆண்டில் ஆள்வார் சமஸ்தானத்திற்கு மொத்தம் 3,37,500 பவுன்கள் வருமானம். அதில் 52,000 பவுன்கள் ஐரோப்பியருக்கு வனவிருந்து அளிப்பதில் செலவு செய்தார். மோட்டார் டிரைவர்களின் சம்பளம், பெட்ரோல், குதிரைகள் போஷணை முதலியவற்றிற்கு மொத்தம் 65,000 பவுன்கள் செலவு செய்தார். சிப்பந்திகளின் பொருட்டு 11,500 பவுன்கள் செலவு செய்தார். இவ்வளவும் போக, வரவு செலவுத் திட்டத்தில் கல்விக்காக ஒதுக்கப்பட்ட தொகை 7,500 பவுன்களே!"

மேற்கண்ட செய்தி "சாந்த்" பத்திரிகை வெளியிட்டதன்று; லண்டன் "டெய்லி ஹெரால்டு" வெளியிட்டது குறிப்பிடத்தக்கது.

மஹாராஜாக்களின் வேட்டை வெறி காரணமாகச் சமஸ்தானக் குடிமக்கள் அநுபவிக்கும் கஷ்டநஷ்டங்கள் கொஞ்சமில்லை. இதற்கு உதாரணமாக "நவநகரின் உள் தோற்றம்" என்னும் பிரசுரத்தினின்று சில பகுதிகள் கீழே காட்டப்படுகின்றன:

"நவநகர் சமஸ்தானத்தில் வேட்டையாடுவதற்குரிய சௌகரியங்கள் மிகமிகப் பிரசித்தி பெற்றவை. இந்தப் பிரசித்திக்குக் காரணம் நவநகர் சமஸ்தானக் காடுகளில் உள்ள வனவிலங்குகளின் சிறப்பு அன்று. வேட்டையாட வரும் பிரமுகர்களை மகிழ்விக்கும் பொருட்டு விசேஷச்செலவில், சமஸ்தானாதிபதி காட்டு நடுவிற் செய்யும் அபார ஏற்பாடுகளே பிரசித்திக்குக் காரணம். நவநகர் சமஸ்தானம் ஏற்பாடு செய்யும் வேட்டைப் பாடிவீடுகள் சொர்க்கத்திற்கு நிகர் என்று பலர் பாராட்டி யிருக்கிறார்கள். ஆனால் இவ் வேற்பாடுகளைச் செய்ய ஏழைமக்களின் ரத்த மாமிசங்களைக் கசக்கிப் பிழியவேண்டும் என்னும் உண்மையை யாரும் எண்ணிப் பார்ப்பதில்லை. வேட்டை ஏற்பாட்டில் மக்கள் மூன்றுவிதமான கஷ்டங்களைத் தாங்கவேண்டும். அவை யாவன: வனவிலங்குகளைப் பாதுகாப்பதில் கடினவிதிகள்; வேட்டைப் பாடி வீடுகளை நிரும்பிப்பதில் கடினவிதிகள்; பிரஜைகளின் பொருள் விரயம்.

"வேட்டைக்குரிய பறவைகள், விலங்குகள் முதலியவற்றைப் பாதுகாக்கும் பொருட்டுச் சமஸ்தான கெஜட்டில் அடிக்கடி புதிய புதிய விதிகள் வெளியிடப்பட்டு வரும். அவற்றுள் மாதிரிக்காகச் சில கீழே தரப்படுகின்றன:

"1909ஆம் ஆகஸ்டுமீ 13உ 22-வது எச். ஐ. சி. எப்-ல் கண்டது:

"....................இந்த விதிகளுக்கு விரோதமாக யாரேனும் நடந்து கொண்டதாக மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் நிரூபணமானல், அப்பேர்ப்பட்டவர்கட்கு ஆறு மாத தண்டனேயேனும், நூறு ரூபாய் அபராதமேனும் விதிக்கப்படும்........................

"1923-ம் ஆண்டு நவம்பர்மீ 1-ம் தேதியில் வெளியான "ஸ்டேட் கெஜட்"டில் கண்ட 22-வது சர்க்குலர் :

"போலீஸ், ரெவினியூ அதிகாரிகளும், கிராம உத்தியோகஸ்தர்களும் வன விலங்குகளின் பாதுகாப்பு விஷயமாய்ச் சமஸ்தானம் இயற்றிவைக்கும் விதிகள் ஒழுங்காக அநுசரிப்பதற்கான கட்டுத்திட்டங்களேச் செய்ய வேண்டும். இந்த விதிகள் மீறப்படுவதாகத் தெரிந்தால் மஹாராஜா தனி அதிகாரியை நியமித்து, அதுபற்றி விசாரணே நடத்தலாம். அத்தகைய சந்தர்ப்பத்தில் தனி அதிகாரியின் தீர்ப்புக்கு மேல் அப்பீலே இல்லே.

"1919-ம் ௵ ஏப்ரல்மீ 24௨ சர்க்குலர் :

"ஒருபுதிய ஜாதிமான் கூட்டம் சமஸ்தானக் காடுகளில் திரிந்து கொண்டிருக்கிறது. இந்த மான்களுக்கு ஏதேனும் தொல்லே கொடுத்தாலும், இவைகளேக் காயப்படுத்தினுலும் அப்பேர்ப்பட்டவர்கட்கு ஐந்தாண்டுகள் கடுந்தண்டனேயும், ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்படும்.

"சிறுத்தைகள், மான்கள் முதலிய மிருகங்களும், பலவிதமான பறவைகளும் வேட்டைக்குரியவை என்று பிரகடனம் செய்யப்படும். இவ்விதம் செய்யப்பட்ட பிறகு அவைகளே யாரும் துன்புறுத்தக் கூடாது. கூடியவரை பாதுகாப்பு அளிக்க முயலவேண்டும். அந்த ஜந்துக்களேத்

துன்புறுத்துவது பெரிய குற்றமாகக் கருதப்படும். கண் காணிப்புக்காக அநேகம் பேர் டபேதார்கள் கிராமங்களில் சுற்றிக் கொண்டிருப்பார்கள். இந்த டபேதார்களின் தர் பாரோ சொல்ல முடியாது. இவர்கள் கிராமவாசிகளில் யாரையேனும் பழிவாங்க எண்ணினால் உடனே "வேட்டை விதிகளை மீறினர்" என்று சம்பந்தப்பட்ட மேலதிகாரிக்குத் தகவல் கொடுத்துவிடுவார்கள். உடனே மறு பேச்சின்றி டபேதார்களின் சாக்ஷி ஒன்றையே ஆதாரமாக நம்பி, அந்த அதிகாரி "குற்றவாளி"க்கு அபராதமோ, சிறைத் தண்டனையோ விதித்து விடுவார்.

"வனமிருகங்கள் பயிர்களை அழித்தாலும், மக்கள் உயிர் களையே கொள்ளை கொண்டாலும் கேள்வி முறை இல்லை. அதற்காக அவைகளைப் பயமுறுத்தவோ கொல்லவோ வழி யில்லை. இவ்வுண்மையை நிரூபிக்கக் கீழே வரும் கதைகளைக் கவனியுங்கள் :

1. நாகஜா கிராமத்தைச் சேர்ந்த ஏழு வியாபாரி களின் மீது காடை கௌதாரிகளை வெருட்டியதாகக் குற் றம் சுமத்தப்பட்டது. அவர்கள் இரண்டு நாள் சிறையில் வைக்கப்பட்டனர். ஒவ்வொருவரும் தலைக்கு நூறு ரூபாய் அபராதம் செலுத்திய பிறகு விடுதலை செய்யப்பட்டனர்.

2. ஒரு கிராமப் படேல்மீது சிறுத்தையைக் கொன்ற தாகக் குற்றம் சுமத்தப்பட்டது. இதற்காக அவர் உத்தி யோகம் இழந்ததோடு ஆயிரம் ரூபாய் அபராதமும் செலுத்தினர்.

3. பால்ஸான் கிராமத்தில் தாழ்த்தப்பட்ட வகுப் பைச் சேர்ந்த ஒரு கிழவியைச் சிறுத்தை கொன்று விட் டது. கிழவியின் மீது சிறுத்தை பாய்வதைக் கண்டும்—

தங்கள் குடிகெடும் என்ற பயத்தால்—யாரும் அவளுக்கு உதவி புரியத் துணிய வில்லை.

4. சுமேரி கிராமத்தில், சிறுத்தை ஒரு இடைப் பையனைக் காயப்படுத்தியது. ஆனால், யாரும் அவனைக் காப்பாற்றப் போகவில்லை.

5. ராலியா கிராமத்தில் மூன்றுபேர் அண்ணன்—தம்பிகள். அம் மூவருக்கும் வாரிசாக ஒரே ஒரு பையன் தான் இருந்தான்! நிலத்தில் விளையாடிக் கொண்டிருந்தபோது ஒரு புலி வந்து அவனைத் தாக்கியது. யாரும் அந்தப் பையனைக் காப்பாற்றப் போக முடியாதவர்களானார்கள்.

6. உப்ளேட்டா கிராமத்தில் ஒரு விதவை. அவளுக்கு ஒரே மகன். அவனும் புலிக்கோட்பட்டான்.

இந்தக் கொடுமைகள் எல்லாம் ஒரு புறம் இருக்க, மஹாராஜவோ, அவருடைய விருந்தினரோ வேட்டை மேற் செல்லுங் காலத்தில், தங்குமிடங்களான பாடி வீடுகளை நிருமிக்கவும், மற்ற உதவி வேலைகளைச் செய்யவும் நூற்றுக்கணக்கான கிராமவாசிகள் அழைக்கப்படுவார்கள். ஒவ்வொரு கிராமமும் கட்டளை முறைப்படி அதனதன் பங்குக்குரிய மக்களை கூட்டங் கூட்டமாக அனுப்பித் தீரவேண்டும். ஒவ்வொரு கூட்டத்திலும் 10 பேர் முதல் 100 பேர்வரை சேர்ந்திருப்பார்கள்.

வேட்டைகட்கு ஆகும் செலவுகளோ?—இவ்வளவு என்று வரையறை செய்து கூற முடியாது. அந்தச் செலவுகளைக் கண்டால் நாகரிக உலகம் பிரமித்துப் போகும். எங்கேயோ காட்டுப் பிரதேசத்தில், இரண்டு நாள் கூத்துக்கு நிருமிக்கப்படும் கட்டடங்கட்கு ஆகும் செலவு லக்ஷக்கண

க்கே ஒழிய ஆயிரக்கணக்கு அன்று. அந்தக் கட்டடங் களைக் கண்டவர்கள் "ஜாம் ஸாஹெப் வனுந்தர மத்தியில் அழகாபுரியைச் சிருஷ்டித்தார்" என்று மூக்குமேல் விரல் வைத்து வியந்து பாராட்டுவார்கள்.

சந்தர்ப்பம் நேர்ந்ததால், கச் சமஸ்தானாதிபதியின் வேட்டை விநோதங்களைப் பற்றி லண்டன் "நியூ லீடர்" பத்திரிகை சமீபத்தில் வெளியிட்ட செய்தியை இங்கே எடுத்துக் காட்டுவது மிகையாகாது. அதாவது: "இந்தியாவின் முக்கிய சுதேச சமஸ்தானாதிபதிகளில் கச் மஹாராஜாவும் ஒருவர். இவரிடம் பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்கு அதிக அன்பு. 'நரேந்திர மண்டலி'யில் இவருக்கு மிகுந்த மதிப்பும் மரியாதையும் உண்டு. சிறுத்தைகளையும், காட்டுப் பன்றிகளையும் வேட்டையாடுவதில் இவர் ஊக்கமும் உற்சாகமும் காட்டுவார். ஆப்பிரிக்காவிலிருந்து சிறுத்தைகளை வரவழைத்துத் தம்முடைய காடுகளில் விட்டு வைத்தார்.

"தற்காப்பின் பொருட்டாயினும் சரி, கச் சமஸ்தானக் குடிகள் சிறுத்தைகளையாவது, காட்டுப் பன்றிகளையாவது எதிர்க்க வழியில்லை. சிறுத்தைகள் ஆண், பெண், குழந்தைகள் உட்பட மொத்தம் இருபது பேர்களைக் கொன்றன. காட்டுப் பன்றிகள் இரண்டுபேரைக் கொன்றன. இது மாத்திரமன்று. சிறுத்தைகள் 42 பேரையும், காட்டுப் பன்றிகள் 33 பேரையும் காயப்படுத்தின. எனினும் மஹாராஜாவின் திருவுள்ளத்திற்குத் தம்முடைய குடிமக்களின் உயிர்களைவிடக் கொடிய காட்டு மிருகங்களின் உயிர்களே மேல் என்று தோன்றுவதாகத் தெரிகிறது.

"காட்டு மிருகங்களின் கொடுமைகட்கு ஆளான வர்களைப் பற்றிய விவரங்கள் அடங்கிய அறிக்கை ஒன்றை, அகில இந்திய சமஸ்தானப் பிரஜைகள் சங்கத் தார் வெளியிட்டனர். இந்த அறிக்கையில் கண்ட துன் பக் கதைகளில் இது ஒன்று.

"35 வயதுள்ள ஒரு மனிதனைக் காட்டுப் பன்றி காயப்படுத்திற்று. தற்காப்பின் பொருட்டு அவன் அதைக் கொன்றான். அவன் செய்த இந்தப் 'பெரிய குற்ற'த்திற் காக வேட்டையாடினான் என்ற குற்றத்திற்கு ஆளானான். கைது செய்யப்பட்டான். இரண்டாண்டுகள் சிறைத் தண் டனை விதிக்கப்பட்டான். இப்படியே 40 வயதுள்ள இன் னொரு மனிதனையும் கைது செய்து சாகவடித்தார்கள். அவனுடைய மனைவியையும் மகனையும் கைது செய்தார்கள்.

"இந்திய விவசாயிகளும், தொழிலாளர்களும் பிரிட் டனிலிருந்துவரும் எதேச்சாதிகாரப் பிரபுக்களின் கொடு மைகளிலிருந்து மாத்திரமன்றி—சுதேசிகளான எதேச் சாதிகாரப் பிரபுக்களின் கொடுமைகளிலிருந்துகூட விடு தலை பெறவேண்டும். ஆனால், கச் சமஸ்தானத்தில் பயங் கர காட்டுமிருகங்களின் கொடுமைகளை அநுபவித்த வர்களைப்பற்றி, சமஸ்தான பிரஜைகள் சங்கத்தார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கண்டபடி, கொடுங்கோன்மை, அடக்குமுறை முதலியவைகளை எதிர்க்கக் குடிமக்களுக்குள்ள பிறப்புரிமையைப் பிரிட்டிஷ் மிருகபலம் நாசம் செய்துகொண்டிருக்கிறது. பரஸ்பரம் ஒருவர் தயவு மற்றவருக்கு வேண்டியிருப்பதால் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகளும், இந்திய சுதேச சமஸ் தானாதிபதிகளும் "ஐக்கிய முன்னணி"யில் நிற்க ஏற்பாடு

செய்துகொண்டனர்." இது 'நியூ லீட'ரின் அபிப்பிராயம்! ஆஹா! எவ்வளவு உண்மை, எவ்வளவு நேர்மை என்பதை வாசகர்கள் உணர்வார்களாக.

ஸிம்லாக் குளிர்மலைவாசத்திற்காகப் போகும்போது மஹாராஜாக்கள் வாரி இறைக்கும் பணத்தைக் கண்டால் எப்பேர்ப்பட்டவர்களுக்கும் தலை சுழன்றுவிடும். சில நாளைக்கு முன் ஒரு மஹாராஜா நான்கே நான்கு நாள் ஸிம்லாவில் தங்குவதற்காகச் சென்றார். அப்பொழுது அவருக்கான செலவுகள் இவை:

23 மோட்டார்கார்கள் சமஸ்தானத்தி விருந்து போக	ரூ.	4,300
திரும்பி வர	ரூ.	4,300
ஸ்பெஷல் ஸலூன்	ரூ.	1,050
சிப்பந்திகளின் ரயில் பிரயாணச்செலவு	ரூ.	1,370
18 ஆசனங்கள் உள்ள ரயில் மோட்டார் செலவு (போக—வர)	ரூ.	720
ஹோட்டல் செலவு	ரூ.	4,500
மற்றச் செலவுகள்	ரூ.	7,000
மொத்தம்	ரூ.	23,240

ஒரு காலத்தில் இந்திய அரசாங்கத்தின் அநுமதியின்றிச் சமஸ்தானதிபதிகள் தங்கள் எல்லையை விட்டு வெளியேற முடியாத நிலைமை இருந்தது. ஐரோப்பியப் பெரும் போருக்குப் பிறகு அந்நிலைமையில் மாறுதல் ஏற்பட்டது. இப்பொழுது சமஸ்தானதிபதிகள் குளிர்காலத்தில் கல்கத்தாவிலும், கோடைக்காலத்தில் வெளிநாடுகளிலும்

காலங்கழிக்கிறார்கள். அவர்களுடைய உள்ளங்களைக் கொள்ளக் கல்கத்தாவில் குதிரைப் பந்தயங்களும், வெளிநாடுகளில்...............ம் உண்டல்லவா?

உடல் நலத்தின் பொருட்டு வெளி நாடுகளுக்குப் போவதாகச் சமஸ்தானாதிபதிகள் அடிக்கடி சொல்லிக் கொண்டு வருகிறார்கள். அந்நியநாடுகளில் இஷ்டம்போல்-மனம்போன போக்கில் லீலாவிநோதங்களை நடத்துவது உடல் நலம் பேணுவதற்கு ஒரு வழியோ, என்னவோ? யாருக்குத் தெரியும்?

மிதவாத சிகாமணியான மகாகனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியாரின் ஐயத்திற்கு இடமில்லாத வார்த்தைகள் இவை: "சமஸ்தானாதிகளில் பெரும்பாலோரை, அவர்களுடைய அந்தப்புரங்களில் காண்பது அருமை...........குடிகளின் வரிப்பணங்களைக் கொண்டு போகங்களை அநுபவிக்கச் சௌகரியம் உள்ள இடங்களில் எல்லாம் அவர்களைக் காணலாம், லண்டன், பாரிஸ்-இவ்வளவேன்?-உல்லாஸ விநோதங்கட்கு உறைவிடமான ஒவ்வொரு நகரத்திலும் ஐரோப்பியர்களைப் பிரமிக்கச் செய்துகொண்டும், பக்கத்தில் இருப்பவர்களைக் களங்கப்படுத்திக்கொண்டும் யாவராவது ஒரு சமஸ்தானாதிபதி இருப்பார்."

வெளிநாடுகளில் இருக்கும்போது இவர்கள் ரூபாய்களை ரூபாய்களாக மதிக்கமாட்டார்கள்; ஓடுகளாகப் பாவித்தே செலவு செய்வார்கள். ஒரு சமஸ்தானாதிபதி—மிகவும் சாமானிய சமஸ்தானாதிபதி—லண்டனில் உல்லாசமாக மூன்று வாரங்கள் தங்கினார். அச்சமயத்தில் பெண்களுக்காக ஆறாயிரம் பவுன்கள் செலவு செய்ததைக் கௌபா நேரில் அறிவாராம்.

கர்னல் பவல் என்பவர் வெளியிட்ட விஷயம் இது: "ஸெயிண்ட் ஜர்மனில் ஒரு இந்திய சமஸ்தானாதிபதி வசித்துக்கொண்டிருந்தார். இவருக்குச் சமீபத்திலேயே பிரஞ்சு அரச பரம்பரையைச் சேர்ந்த சிலர் குடியிருந்தனர். இவருடைய ஆடம்பரங்களுக்கு முன் அவர்கள் கஞ்சிக்கு வழியில்லாதவர்களைப்போல் காணப்படுவார்கள். பாரிஸ் நகரத்திற்குச் செல்லும்போது, இவர் நடத்தும் விருந்துகள், அந்தப் பிரஞ்சுத் தலைநகரையே கலகலக்கச் செய்து விடும். மற்றொரு சமஸ்தானாதிபதிக்குப் பிரான்ஸில் மாத்திரம் ஆறு பந்தயக் குதிரை லாயங்களும், ஸ்காட்லாந்தில் வேட்டைக்குச் செல்லும்போது இறங்கித் தங்குவதற்கு ஒரு மாளிகையும், பாரிஸில் ஒரு விசாலமான பெரிய அரண்மனையும் உண்டு. இன்னொரு மஹாராஜா மாண்ட் கார்லோவில் உள்ள "இண்டர் நேஷனல் ஸ்போர்ட்டிங் க்ளப்"பில் சூதாடி, ஒரே நாளில் பத்து லக்ஷம் பிராங்குகளைத் தோற்றுவிட்டார். (ஒரு பிராங்கு—பத்தணா)

இப்படியே இன்னும் எத்தனையோ வரலாறுகளை அடுக்கிக்கொண்டு போகலாம். ஆனால் இப்பொழுதே இந்த விஷயம் விரிந்துவிட்டது. எனவே சமஸ்தானாதிபதிகளின் வீண் செலவுகளைப்பற்றிச் சில அறிஞர்கள் வெளியிட்ட அபிப்பிராயங்களை மாத்திரம் இங்கே எடுத்துக்காட்டிவிட்டு இதை முடிக்க உத்தேசம். ஒரு சுகபோகியான மஹாராஜாவின் உல்லாச உப்பரிகையைப்பற்றி மாண்டேகு சொன்னது: "சிகரெட் கேஸுகள், மோட்டார் கார்கள், ஆகாய விமானங்கள் முதலியவற்றின் வடிவங்களில் எங்கும் விநோதச் சாமான்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. சில கேஸு

களில் சிகரெட்டுகளை எடுத்துக்கொடுக்கும் சொக்கு உருவங்கள்கூட அமைக்கப்பட்டிருக்கின்றன. "டைனிங் டேபிள்" மீது மின்சார விசையால் இயக்கப்படும் நீரூற்று (Fountain) உண்டு. மேனாட்டு நகரத் தெருக்களில் இத்தகைய விநோதப் பொருட்களைக் காணும்போது, இவைகளையெல்லாம் யார் வாங்கப்போகிறார்கள் என்று வியப்பாக இருக்கும். இவை சமஸ்தானாதிபதிகளைச் சேரும் என்று இப்பொழுது நினைக்கவேண்டி இருக்கிறது."

பேர்பெற்ற நூலாசிரியரான கௌபா: "எத்தனையோ சமஸ்தானாதிபதிகளிடம் டஜன் கணக்கில் "ரோல்ஸ்ராய்ஸ்" கார்கள் இருக்கின்றன. இந்தக் கார்கள் ஒவ்வொன்றும் ஐம்பதினாயிரம் ரூபாய்களுக்கு மேல் விலை மதிப்புள்ளது. டெர்பி பந்தயங்களில் வெற்றிபெறும் குதிரைகளை வாங்குவதில் சமஸ்தானாதிபதிகளே முன்னணியில் நிற்பார்கள். இந்தக் குதிரைகளில் ஒன்றை, லக்ஷம் பவுன்களுக்கு ஒரு மஹாராஜா பேரம் பேசியது உலகறிந்த செய்தி ஆகும். எத்தனையோ பேர் தங்களுக்குப் பிடித்தமான லண்டன், பாரிஸ் நகரங்களில் உள்ள நாட்டியக்காரிகளுடன் சரச சல்லாபங்கள் செய்து குளிரின் கொடுமையைப் போக்கிக் கொள்ளுவார்கள். அசல் வாக்கியம் இது—**Not a few have their beds warmed by their pick of the music halls of London and Paris.** வெளி நாடுகளைப்போலவே சொந்த நாட்டிலும்! அவர்களுடைய ஆசைகளுக்கு ஓர் அளவில்லை. பதினொரு "ஹெட் லைட்ஸ்" உள்ள கார்கள்; தங்கம், வெள்ளி வேலைப்பாடுகள் அமைந்த கார்கள்; மணிக்கு நூறு மைல் வேகம் உள்ள கார்கள்; காதல் கிழத்திகளுடன் இஷ்டப்போல் சரச சல்லாபங்கள் நிகழ்த்துவதற்குச் சௌகரியமான கார்கள்;............பெண்

களோ? படைப்புக்குள்ளேயே சிறந்த அழகிகள்; நீலோற்பலக் கண்கள் படைத்த வடநாட்டுக் கோமளாங்கிகள்; நறுமணம் வீசும் நீண்ட கூந்தல் படைத்த தென்னாட்டுச் சுந்தரிகள்; பொன்மயமான மேனி படைத்த காதல் வெறி ஏற்றும் 'குலு' யுவதிமணிகள்; கருநாகம்போன்ற சடைகளையுடைய காஷ்மீர நாட்டு வனிதைகள். இவர்கள் எல்லாரும் ராணிகளாக வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆனால், இவர்களே மஹாராஜா வாழ்க்கையின் ஜீவநாடிகள். அவருடைய உள்ளத்தில் குடிகொண்ட தேவதைகள். அவருடைய வாழ்க்கையை இன்பமயமாகச் செய்யும் மோஹனாங்கிகள்!"

சிம்லாவில் நடைபெற்ற பஞ்சாப் சமஸ்தானப் பிரஜைகள் மகாநாட்டில் தலைமை வகித்த தாக்கர் பாபு, தமது தலைமை உரையில் கூறியது இது: "சமஸ்தான வரிப்பணம் போக போக்கியங்களுக்கும், வேட்டை விநோதங்களுக்கும், ஐரோப்பியர் விருந்துகளுக்கும் செலவு செய்யப்படுவதுடன், வேசையர்கட்கும், ஐரோப்பா, அமெரிக்கா கண்டங்களில் சுற்றுப் பிரயாணங்கள் செய்வதற்கும் செலவு செய்யப்படுகின்றது என்று சமஸ்தானப் பிரஜைகள் கூச்சல் கிளப்புகிறார்கள். அநேக சந்தர்ப்பங்களில் சமஸ்தான வருமானம், மஹாராஜாவின் சொந்தச் செலவுக்கும், அவருடைய குடும்பச் செலவுக்கும் பாதிக்குமேல் செலவழிந்து போகிறது. இதனால் தேசிய வளர்ச்சிக்கான கல்வி, சுகாதாரம் முதலியவற்றிற்கு வெகு சொற்பத் தொகையே ஒதுக்கிவைக்க மிஞ்சுகிறது. மக்களிடமிருந்து வசூலிக்கப்படும் வரிப்பணம் ஏதோ ஒரு உருவத்தில் மீண்டும் அவர்கட்குச் சேரவேண்டும். இதற்கு மாறாக முகஸ்துதியாளர், ஓட்டல்காரர், லண்டன்—பாரிஸ் நகரங்களில் உள்ள பர்

ளிச்சர் வியாபாரிகள் முதலியவர்களின் ஜேபிகளில் விழுகின்றது.

"சமஸ்தானாதிபதிகளின் சொந்தச் செலவுகளுக்கு ஒரு கட்டுத்திட்டம்—எவ்வித மாய மந்திரங்கள் செய்தேனும்— நூற்றுக்குப் பத்து விகிதம் என்று ஏற்பாடு செய்து விடவேண்டும். அதற்குத் தகுந்த தணிக்கை—ஆடிட் முறைகளை ஏற்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால் கோணல் ஆட்சியின் கொடுமைகளில் பாதியேனும் குறையும். வீண் செலவுகள்கூடப் பெரும்பகுதி குறைந்துவிடும். சமீபகாலத்தில் பாடியாலா சமஸ்தானம் மூன்று கோடி ரூபாய் கடன்பட்டதாகத் தெரிகிறது. இத்தகைய கடன்களைத் தீர்க்க, முன்னேற்பாடான கட்டுத்திட்ட முறைகளைத் தவிர வேறு வழியில்லை."

சரி, அந்த மாய மந்திரம் எது?

சட்டசபைகள்

சுதேச சமஸ்தானங்களில் உண்மையான—பிரதிநிதித்துவம்வாய்ந்த சட்டசபைகளே இல்லை எனலாம். சில சமஸ்தானங்களில் மாத்திரமே சட்டசபைகள் இருக்கின்றன. அவையும் பொறுப்பற்ற வெறும் போலிச் சபைகள். அவற்றைப்பற்றி ஒரு சிறிது கவனிப்போம். ராமநாராயண சௌதரி என்பவர் ரஜபுதன சமஸ்தானங்களைப்பற்றி ஒரு அருமையான கட்டுரை எழுதினார். 1928-ம் ஆண்டு டிஸம்பர் மாத "மாடர்ன் ரிவியூ" மாசிகையில் ஆசிரியர் ராமாநந்த சட்டர்ஜி அதை வெளியிட்டார். கட்டுரையாளரும், ஆசிரியரும் பேரும் புகழும் வாய்ந்த அறிஞர்கள். எனவே அக்கட்டுரையின் சிறப்பையும் பொறுப்பையும் பற்றித் தனியாக எடுத்துக் கூறுவது மிகை. அதில் கண்ட சில உண்மைகள் வருமாறு:—

"ரஜபுதனத்தில் 21 சமஸ்தானங்கள். இந்தச் சமஸ்தானங்கள் நடத்தும் ஆட்சி முறை எத்தகையது? பரம்பரையாக வரும் எதேச்சாதிகார தர்பாரே! பிக்கானிர் ஒன்றைத் தவிர, வேறு எந்தச் சமஸ்தானத்திலும் சட்டசபை என்பது பெயரளவில்கூட இல்லை..........மற்றச் சமஸ்தானங்களில் குடிகளின் விருப்பப்படி—அவர்களுடைய சம்மதம் பெற்றுச் சட்டமியற்றும் முறை இல்லை. மஹாராஜாக்கள் இட்டது சட்டம். அதிகாரிகளின் உத்தரவுகட்கும் சட்டத்திற்கும் அணுவளவு வேற்றுமையும்

காணமுடியாது. திடும்பிரவேசமாய் உத்தரவுகள் பிறக்கும். உடனே சாதாரா செய்யப்பட்டுவிடும். பிறகு அந்த உத்தரவுகள் ஸ்டேட் கெஜட்டில் வெளியாகும். அதுவும் கெஜட் உள்ள இடங்களில் மாத்திரமே! ஏதோ ஒரு காரியம் குற்றமாகக் கருதப்பட்டு மஹாராஜாவின் கையெழுத்துடன் தாக்கீது வரும். அதற்குத் தகுந்த தண்டனையும் அதிலேயே விதிக்கப்பட்டிருக்கும். யாரோ ஒரு அதிகாரிக்கு அந்தக் கட்டளையை நிறைவேற்றிவைக்க அதிகாரம் அளிக்கப்படும். சிவில், கிரிமினல் கோர்ட்டுகளின் அதிகாரங்களில் சிலவற்றைக் குறைத்து, அவைகளை நிர்வாக உத்தியோகஸ்தர்களுக்கு அளித்து, உத்தரவுகள் ஜாரி செய்யப்படுவதும் உண்டு. விசாரணையின்றிக் குடிகளைச் சமஸ்தானத்தை விட்டு வெளியேற்றல், பத்திரிகைத்தடை, சொத்துப் பறிமுதல் முதலிய காரியங்கள் சகஜமாய் நடந்துகொண்டே இருக்கும்.''

ரஜபுதன சமஸ்தானங்களைப் போன்றவையே மற்றச் சமஸ்தானங்களும். இந்தியாவில் மொத்தம் 563 சமஸ்தானங்கள் இருக்கின்றன. இவற்றில் 108 முதல்தரமானவை. பட்லர் கமிட்டி அறிக்கைப்படி (15-வது பாரா) முதல்தரமான 108 சமஸ்தானங்களுக்குள் 30 மாத்திரமே சட்டசபைகளை ஏற்படுத்திக்கொண்டிருப்பதாக அறிகிறோம். இந்தச் சட்டசபைகளின் யோக்யதை என்ன? சும்மா பேசித் தீர்ப்பதற்கே இவை காணப்பட்டிருக்கின்றன.

மாதிரிக்காகப் பிக்கானிர் சட்டசபையை எடுத்துக் கொள்ளுவோம். இச்சட்டசபையில் மொத்தம் 45 அங்கத்தினர்கள். இவர்களில் 27 பேர் நியமனம் செய்

யப்பட்டவர்கள்—உத்தியோகஸ்தர்கள் 19 பேர்; உத்தி யோகப் பற்றற்றவர்கள் 8 பேர். இந்த 27 அங்கத்தினர் போக மற்ற 18 அங்கத்தினர்களில் 12 பேர் நகரசபைப் பிரதிநிதிகள். 3 பேர் ஸர்தார்கள். 3 பேர் ஜமீன்தார்கள். ஆக மொத்தம் 45 பேரும் நியமன அங்கத்தினர்களே !

இச் சமஸ்தானத்தில் மொத்தம் 15 நகர சபைகள் இருக்கின்றன. இவற்றில் 10 நகரசபைகளில் உள்ள அங் கத்தினர்கள் எல்லாரும் நியமனம் செய்யப்பட்டவர்களே. மற்ற 5 நகர சபைகளில்கூட தேர்தல் அங்கத்தினர்களை விட நியமன அங்கத்தினர்களே பெரும்பாலோர். எனவே, நகரசபைப் பிரதிநிதிகளாகச் சட்டசபையில் அங்கம் வகிப் பவர்களைப் பொறுப்பு வாய்ந்த அங்கத்தினர் என்பதைவிட நியமன ஜோஹுகும்கள் என்பதே பொருத்தமாகும்.

ஸர்தார், ஜமீன்தார்கள் பிரதிநிதித்துவ யோக்கிய தையும் அந்த லக்ஷணத்தில்தான் இருக்கின்றது. இவ்விரு பிரிவினருக்கும் தனித்தனி இரண்டு தொகுதிகள் பிரிக்கப் பட்டிருக்கின்றன. ஆனால் தேர்தல் முறையே இல்லை. நிய மன முறையே கையாளப்படுகிறது. இந்தத் தொகுதி களில், தேர்தல் இன்றி நியமனம்பெறுவோர் தலையாட்டித் தம்பிரான்களாய் இல்லாமல் சுயமரியாதையுடன் நடக்க முடியுமா? இந்நிலைமையில் மக்களின் அபிப்பிராயம் தங்கு தடையின்றித் தோன்றுவதற்கு இடம் எங்கே? குடிகளின் கோரிக்கைகள் நிறைவேற வழி ஏது?

சட்டசபை கூடும் லக்ஷணத்தையும் கவனியுங்கள். பிக்கானிர் சட்டசபை 1929-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15, 16 தேதிகளில் ஒரு தடவை கூடியது!

அந்த இரண்டு நாளிலேயே வரவு செலவுத் திட்ட விவாதம், அதை நிறைவேற்றல், அங்கத்தினர்களின் கேள்விகளுக்குப் பதில், பல சட்டங்களையும் தீர்மானங்களையும் அங்கீகரித்தல்—இவ்வளவேன்?—ஒரு ஆண்டின் வேலைத்திட்டம் முழுதும் அப்படியேநிறைவேற்றப்பட்டது என்று சுருங்கக் கூறலாம். சட்டசபை வேலைகளை விரைவில் நிறைவேற்றுவதில் உலக ரிக்கார்டு பெற்றுவிட்டது! நிலத்திலும் வானிலும் அம்புபோல் பறந்து பிரயாணம் செய்வதில் உலக ரிக்கார்டு எங்களுக்கே என்று பிரிட்டிஷார் இறுமாப்பு அடைவதுண்டு. நமக்கும் உலகரிக்கார்டுகளின் பெருமை இல்லாமல் போகவில்லை. மற்போரில் உலகமெங்கும் வெற்றிக்கொடி நாட்டிய காமா நம்மவரே! ஹாக்கி விளையாட்டில் எல்லா நாடுகளையும் தோற்கடித்த வீரர் கோஷ்டி நம்முடையதே! இரண்டே இரண்டு நாளில் ஒரு ஆண்டின் வேலை முறைகளையெல்லாம் வெகு எளிதில் முடித்த சட்ட சபை உள்ள நாடும் நம்முடையதே!

இந்த இரண்டு நாளிலும் பிக்கானிர் சட்டசபை சாதித்த உருவான காரியம் என்ன?

சமஸ்தான வருஷ வருமானத்தில் சுமார் 100க்கு $3\frac{1}{2}$ விகிதத்தைக் குடிகள் நலங்கட்குரிய பிரிவுகளுக்கு வழங்கியது; மஹாராஜாவின் சொந்தச் செலவுகளுக்கு 22 விகிதம் வழங்கியது!—பிரஜைகளின் க்ஷேம லாபங்களில் எவ்வளவு சிரத்தை என்று பாருங்கள்!

இதைவிட விபரீதமானது நவநகர் சட்டசபை. 1919-ம் ஆண்டில் ஆள்வார் மஹாராஜா இந்தச் சமஸ்தான விருந்தினராக வந்தார். அச்சமயத்தில், அப்பொழுதிருந்த ஜாம் ஸாஹெப் ஆலோசனை சபை ஒன்றை ஏற்படுத்த வேண்டும்

என்று உத்தரவிட்டார். அச் சபையின் அங்கத்தினராகச் சில பெரிய மனிதர்களை நியமனம் செய்தார். உடனே அந்த மந்திராலோசனை சபை நடந்தது. ஜாம் ஸாஹெப் திறப்பு விழா நிகழ்த்திச் சொற்பொழிவாற்றினர். ஆள்வார் மஹாராஜா கூட அவ்விழாவில் கலந்து தமது வாக்குச் சாதுரியத்தை வெளிப்படுத்தினர். அவ்வளவுதான்! பிறகு அந்த ஆலோசனை சபை இருந்த விடம் தெரியவில்லை—மறு படியும் கூடவே இல்லை. அதைப்பற்றி நினைப்பாரும் இல்லை. எனினும் தமது சமஸ்தானத்தில் ஏதோ ஒரு சட்ட சபை இருப்பது போலவே ஜாம் ஸாஹெப் நடித்துக் கொண்டு வருகிறார்.

மற்றச் சமஸ்தானங்களில் கூட இதே வேஷந்தான். மைசூர், திருவாங்கூர், கொச்சி சமஸ்தானங்களைத் தவிர, மற்றும் இரண்டு மூன்று இடங்களில் பிரஜைகளின் அபிப் பிராயங்களைத் தெரிவித்துக் கொள்ளக்கூடிய சட்ட சபை கள் இருக்கின்றன. மற்றவை யெல்லாம் ஏமாற்று வித்தை களே!

ஆனல், இவைகளால் பயனே இல்லை என்று சொல்ல முடியாது. மஹாராஜாக்கள் உலக நிலைமையைப்பற்றியும், பிரிட்டிஷ் இந்தியாவின் அரசியல் விவகாரங்களைப் பற்றியும் கம்பீரமான உபந்நியாசங்கள் செய்வதற்கு—உபந்நியாசங் கள் மற்றவர்களால் தயாரிக்கப்பட்டவை என்று சொல்லு வது தவறு—இந்தச் சட்டசபை மேடைகள் வெகு உப யோகமாயிருக்கின்றன.

அநேக சமஸ்தானங்களில் சட்ட சபைகளே இல்லை யெனினும், சட்ட திட்டங்களுக்கு மாத்திரம் குறைவில்லை.

பேச்சுரிமைகளைப் பறிக்கும் சட்டங்கள், கூட்டங்களைத் தடை செய்யும் சட்டங்கள், சொத்துக்களைப் பறிமுதல் செய்யும் சட்டங்கள், குற்றச்சாட்டோ விசாரணையோ இன்றி மக்களைச் சிறைகளில் அடைக்கும் சட்டங்கள்-இப்படி எத்தனையோ சட்டங்கள் இருக்கின்றன. இவையெல்லாம் மிகைப்படுத்தப்பட்ட செய்திகள் அல்ல. இன்றைக்கும் நடைமுறையில் உள்ள உண்மைகள்.

சமஸ்தான உத்தியோகஸ்தர்கள்

ஸமஸ்தானாதிபதிக்கு அடுத்தபடி விளங்குபவர் திவான். அதிபதி எப்பேர்ப்பட்டவரா யிருந்தாலும் திவான் நல்லவராயிருந்தால் அவ்வளவு கொடுமைகள் இருக்காமாட்டா. ஆனால் நம்முடைய சமஸ்தானாதிபதிகளுக்கு—அது என்ன கர்மமோ—அவரைக் காட்டிலும் இரண்டடி அதிகம் பாயும் திவான்களே அமைந்துவிடுகிறார்கள்!

அமைந்து விடுகிறார்கள் என்பது தவறு. வேண்டும் என்றே அப்பேர்ப்பட்ட திவான்களைத் தேடிப்பிடித்து நியமித்துக்கொள்ளுகிறார்கள் மஹாராஜாக்கள். இல்லையேல், அவர்கள் மனம்போன போக்கில் திருவிளையாடல்களை நடத்த முடியுமா? இந்தத் திவான்களின் நியமனங்களைப் பற்றிச் சூட்கர் இவ்வாறு எழுதினார்: "திவான்களின் பொறுப்பு என்ன? அவர்களுடைய கல்வி அறிவு அநுபவங்கள் எத்தகையவை? நிர்வாகத் திறமை எப்படி? யோக்கியதை என்ன? என்பனபோன்றவைகளை முற்றிலும் விசாரித்து அறிந்துகொள்ளாமலே அவர்களுடைய நியமனங்கள் ஆகிவிடும். சிபார்சு ஒன்றே பிரதானமாகக் கருதப்படும். அரசியல் அநுபவம், நிர்வாகத் திறமை முதலியவை முக்கியம் என்பதைப்பற்றி அவ்வளவாகச் சிரத்தையோ கவலையோ செலுத்தப்படுவதில்லை."

இவ்விதம் நியமனமான திவான், இதற்கேற்றபடி தானே நடந்துகொள்ளுவார்? திவானின் நடவடிக்கைகளைப்பற்றியும் ரூட்கர் கூறியிருக்கிறார். அதாவது: "விளக்கு எரியும்போதே வீட்டை ஒழுங்குபடுத்திக் கொள்ளுவதில் திவான் கண்ணுங் கருத்துமாயிருப்பார். ....லீலாவிநோதங்கட்கும், படாடோபங்கட்கும் சமஸ்தானாதிபதி பணத்தை வாரி இறைக்கத் தாராளமாக இடங்கொடுப்பார். அவர் கூடாவொழுக்கங்களில் தலையிடாதவாறு தடுக்கத் திவான் அணுவளவும் முயற்சி செய்யமாட்டார்."

ஒருவேளை, மக்கள் நலங்களையே முதன்மையாகக் கருதும் ஒரு உத்தமர், தப்பித்தவறித் திவானாக வந்துவிட்டார் என்று வைத்துக்கொள்ளுவோம். அவரால் பத்து நாள் நிம்மதியாக இருந்து நிர்வகிக்க முடியாது. உடனே ராஜீனாமாக் கொடுத்துவிட்டு வெளியேறவேண்டியவராவார். இது வெறும் கற்பனை அன்று. கண்கண்ட உண்மை. இதற்குக் கீழ்வரும் நிகழ்ச்சிகளே தக்க சான்றுகள்.

ஸர் என். ஜி. சாந்த்வார்கார் என்பவர் நல்ல அறிஞர். கொஞ்சநாள் பம்பாய் ஹைக்கோர்ட் நீதிபதியாக வேலை செய்தவர். உபகாரச்சம்பளம் பெற்றவுடன் இந்தூர் திவானாக நியமிக்கப்பட்டார். ஒரு ஆண்டு நிறைவதற்குள் அவர் தமது பதவியைத் துறந்து வெளியேறிவிட்டார். இதற்கென்ன காரணம்? லீலாவிநோதர் துகோஜி ராவ் ஹோல்காரின் திருவிளையாடல்களைத் தவிர வேறு காரணம் ஒன்றுமில்லை.

ஸர் அலி இமாம், ராஜப்பிரதிநிதியின் நிர்வாக சபை அங்கத்தினராயிருந்து பெரும் புகழும் பெற்ற

வர். ஹைதராபாத் சமஸ்தான திவான் பதவி வகிக்க ஒப்புக்கொண்டார். ஆனால், அவர் தமது பதவியில் நீண்ட நாள் நிலைத்திருக்கவில்லை.

ஸர் ஆல் பியன் பானர்ஜி முதலில் மைசூர் திவானாகத் தொண்டாற்றினார். உபகாரச்சம்பளம் பெற்றார். பிறகு காஷ்மீர் திவான் பதவியை ஏற்றார். ஆனால் 18 மாதங்களுக்குள் விடைபெற்றார்.

இந்த நிகழ்ச்சிகளால் என்ன அறிகின்றோம்? அறிவாற்றலும், மக்கள் நலத்தில் கருத்தும் உள்ளவர்கள் திவான்களாக இருப்பது கஷ்டம் என்று அறிகின்றோம். இனி, அப்பதவி வகிக்கக் கூடியவர்கள் யார்? துதிபாடுவோர், சுயநலக்காரர், பாவ புண்ணியங்களை எண்ணிப்பாராதவர்........

உயர்பதவி வகிக்கும் திவான்களின் நிலைமையே இப்படியானால், மற்ற உத்தியோகஸ்தர்களைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ?

சில சமஸ்தானங்களில் யாரேனும் உத்தியோகம் வேண்டினாலும், இருக்கும் உத்தியோகத்தில் உயர்வு வேண்டினாலும் மஹாராஜாவுக்கோ, திவானுக்கோ மனைவிமாரைக் கூட்டிக்கொடுக்கவேண்டும் என்று கௌபா எழுதியிருக்கிறார். அவர் தக்க ஆதாரமின்றிச் சும்மா இப்படி எழுதிவிட்டார் என்று எண்ணாதீர்கள்! இதற்கு அத்தாட்சி வேண்டுமானால் "பிரின்ஸிலீ இந்தியா" பத்திரிகையில் (15-1-29) ஒரு சமஸ்தான உத்தியோகஸ்தர் தமது சொந்த அநுபவத்தை அறிவித்திருப்பதிலிருந்து உணர்ந்துகொள்ளலாம். அது வருமாறு:

"மஹாராஜாவுக்குப் பெண்களைக் கூட்டிக்கொடுப்பதிலேயே சமஸ்தான உத்தியோகஸ்தர்கள் எல்லாரும் ஈடு

பட்டிருப்பார்கள். நான் சில நாள் அவரிடம் காலக்ஷேபம் செய்தேன். சகா உத்தியோகஸ்தர்களைப் போலவே நானும் அந்த வேலையைச் செய்ய வேண்டிய நிலைமை நேர்ந்த போது அருவருத்து ராஜிநாமாக் கொடுக்கவேண்டியதாயிற்று...................மஹாராஜா சுயமாகவே திவான் பேருக்கு எழுதிய கடிதத்தை வெளியிடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதனால் நான் சொன்னது உண்மை என்று எளிதில் புலப்படும். அக்கடிதம் வருமாறு.

அரண்மனை

....

28—9—28

பிரியமுள்ள......................அவர்கட்கு,

தாங்கள் எழுதிய கடிதமும், விடுமுறை விண்ணப்பமும் கிடைத்தன. தங்கள் விருப்பப்படியே விடுமுறை அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், நீங்கள் கூடிய விரைவில் திரும்பி வரவேண்டும். உங்கள் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிற இருவரையும் அழைத்துக்கொண்டு வரவேண்டும். அவர்கள் மிகவும் அழகானவர்களாயிருக்கவேண்டும். மனதிற்குப் பிடித்தமானவர்களை அழைத்துக்கொண்டு வந்தால், தங்களை என் அன்பிற்கும் நம்பிக்கைக்கும் உரிய ஊழியர் என்று எண்ணுவேன்.

அன்புள்ள

(கையொப்பம்) ராஜாஸாஹேப்

மஹாராஜாக்களின் வாழ்க்கை நிலைமைகள் எவ்வளவு விபரீதமாகவும், மோசமாகவும் இருக்கின்றன என்று பார்த்தீர்களா? தமக்குப் பிடித்தமான பெண்களை அழைத்

னுக்கொண்டு வந்தால் தமது அன்பிற்கும், நம்பிக்கைக்கும் உரிய ஊழியர் ஆவாராம்! இல்லையேல் அப்படி ஆகமாட்டார் என்றுதானே அர்த்தம்? மஹாராஜாவின் நம்பிக்கைக்கும் அவநம்பிக்கைக்கும் ஒருவர் பாத்திரராவதற்குக் கூட்டிக்கொடுத்தல் சரியான அளவுகோல் ஆகிவிட்டது குறிப்பிடத்தக்கது. இதை நோக்கியே கௌபா, "அநேக சமஸ்தானங்களில் உத்தியோக உயர்வு பெற மஹாராஜாவுக்கு எவளையாவது கூட்டிக்கொடுத்தலே சரியான வழி. கலியாணமற்ற கன்னியாயிருந்தால் உத்தமம். கடைசியில் அழகுள்ளவள் யாராயிருந்தாலும் போதும்" என்று எழுதத் துணிந்தார்!

இந்த வியாபாரத்தில் சமஸ்தான உத்தியோகஸ்தர்கள் என்ன பாதகம் வேண்டுமானாலும் செய்யத் துணிந்து விடுவார்கள். யாரோ ஒரு சமஸ்தானுதிபதி, சாதாரணச் சிப்பாய் ஒருவனை ஸர்தார் பதவியில் ஒரேமூச்சில் தூக்கிவைத்து விட்டாராம். தட்டுக்கெட்டு மேலேறிய இந்த இழிமகனுன மூர்க்கன் செய்த அட்டூழியங்களால் பெண்கள் தங்கள் மானபிமானங்களைக் காப்பாற்றிக்கொள்ளுவதே அருமையாகிவிட்டதாம். ஒருநாள் அந்த மஹாராஜாவின் நோக்கம் ஒரு குடும்பப் பெண்மீது விழுந்தது. புதிய ஸர்தார் அவளை மஹாராஜாவிடம் ஒப்படைக்க முடிவு செய்தான். உடனே பின் தொடர்ந்தான். இருளில் அவளுடைய கணவனைக் கொன்றுன். அவளைக் கட்டித் தூக்கிக் காரில் போட்டான். மஹாராஜாவிடம் தனது வீரப்பிரதாபம் தோன்ற ஒப்படைத்தான். ஆனல் அந்த உத்தம மங்கை மஹாராஜாவின் விருப்பத்திற்கு இணங்க மறுத்தாள். உடனே பத்துச் சிப்பந்திகளை ஏவி அவளை மானபங்கம் செய்தார் மஹாராஜா! கடைசியில் அவளுடைய கழுத்தையே அறுத்துவிட்டார்

கள். இது தகாது—மஹாபாதகம் என்று எச்சரிக்கை செய்த மந்திரி, பதவியை இழந்தார்.

இப்படி இன்னும் எத்தனையோ அக்கிரமங்கள்! அவைகளையெல்லாம் எடுத்து விரிக்க வெறுப்பும் அருவருப்பும் தோன்றுகின்றன. அம்மம்ம! அவையெல்லாம் இங்கே குறிப்பிடத்தகாத மிருகச் செயல்கள்! பகுத்தறிவுள்ள மனிதர் செய்யும் காரியங்கள் அல்ல.

நியாய விசாரணை

எல்லாம் அக்கிரம மயமாக உள்ள சமஸ்தானங்களில் நீதியும் நியாயமும் ஒழுங்கான முறையில் நடைபெறும் என்று எப்படி எதிர்பார்க்கமுடியும்? இந்தூர் சமஸ்தான நியாய விசாரணை முறையை எடுத்துக் கொள்ளுவோம். சங்கர பிரஸாத் தூபே என்பவர் இந்தூரில் ஒரு வண்டித்தொழிற்சாலையின் உரிமையாளர். இவர் 16 ஆண்டுகள் அந்தத் தொழிலை லாபகரமாக நடத்தினார். இவருடைய தொழிற்சாலையில் சமஸ்தான வண்டிகளும் அநேகம் செய்யப்பட்டன. இப்படியிருக்கையில் ஒருநாள் (8—10—20) போலீஸ் சூப்பரின்டெண்டு சில போலீஸ் சேவகர்களுடன் தூபே வீட்டுக்குப்போனார். அவரைக் கண்டு "நான் மஹாராஜாவின் கட்டளைப்படி உங்களுடைய குடும்பச் சொத்துக்களையெல்லாம் ஜப்தி செய்திருக்கிறேன்; இன்னும் இரண்டுமணி நேரத்தில் சொத்துக்களைச் சுவாதீனம் செய்யவேண்டும்" என்று-எழுத்து மூலமான உத்தரவு எதுவுமின்றி-வாய் வார்த்தையாகச் சொன்னார். அரண்மனைக்கு எதிர் மனையா? பாவம் தூபே என்ன செய்வார்? அவருக்கு ஒன்றும் விளங்கவில்லை. பேசாமல் கப்சிப் என்று அடங்கிவிட்டார். ஒரு மாதத்திற்குப் பிறகு, "சங்கர பிரஸாத் தூபே சகோதரர்கள் இரண்டுபேர், சமஸ்தான விஷயத்தில் துரோகமாய் நடந்து கொண்டார்கள்; அவர்களை நல்வழிப்படுத்தச்

செய்த முயற்சிகள் எல்லாம் வீணாயின. அதனால் தூபே குடும்பச் சொத்துக்களை ஐப்தி செய்ய நேர்ந்தது'' என்று கெஜட்டில் அறிக்கை வெளியிடப்பட்டது. அவருடைய சகோதரர்கள் இருவரும் தமக்குத் துரோகம் செய்தார்கள் என்று நினைத்து மஹாராஜா, குடும்பச் சொத்து முழுவதை யும் ஐப்தி செய்தார்! குற்றச்சாட்டுமில்லை. விசாரணையு மில்லை. இதுபற்றித் தூபே குடும்பத்தார் இந்திய சர்க் காருக்கு முறையிட்டுக் கொண்டனர். அம்முறையீடு என்னாயிற்று? குப்பைக் கூடையை அடைந்தது!

இந்தச் சமஸ்தானத்தின் நீதிமுறையை விளக்க இன்னொரு உதாரணம். இந்தூர் சமஸ்தானத்திற்குப் பரம் பரையாக வந்துகொண்டிருக்கும் திவான்கள் சிலர் இருக் கிறார்கள். இந்தத் திவான்களில் ஒருவர் சுந்தரா பாய் என்னும் சிறுமியைக் கலியாணம் செய்துகொண்டார். அவருக்குச் சுவாசகாசப். இந்நோய் உள்ளவர்கள் கலி யாணம் செய்துகொள்ளல் கூடாதாம். எனவே மஹா ராஜா அவருடைய கலியாணத்தை ரத்து செய்தார். நல்லது; ரத்து செய்தவர் அத்துடன் சும்மா இருந் தாரா? இல்லை. மறுபடியும் உடனே அவருக்கு வேறொரு கலியாணம் செய்துவைத்தார்! 20 வயதுள்ள ஒரு வாலிபனையும் சுவீகாரம் எடுக்கச் செய்தார். இதைக் கண் டதும், பாவம், அந்தச் சுந்தராபாய் அலறினாள்! நீதி வழங்கவேண்டும் என்று இந்திய சர்க்காரிடம் முறையீடு செய்தாள். அவளுடைய முறையீடு வீணாயிற்று. ஏன் என்று கேட்பார் இல்லை. குடிமக்கள் அவளிடம் அநுதாபம் காட்டினார்கள். பத்திரிகைகள் அவளுடைய பரிதாபத்தைப்பற்றி எழுதின. என்ன பயன்? அவள் ராஜப்பிரதிநிதிக்குச் செய்துகொண்ட விண்ணப்பத்தில்

கண்ட வாக்கியங்கள் குறிப்பிடத்தக்கவை: "மஹாராஜா அவர்கள் எனக்குச் செய்த அநியாயத்தைப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் உள்ள வேறு யாரும் செய்யத் துணியார்கள். பிரிட்டிஷ் படைபலம் அல்லவா இம்மன்னரைச் சிம்மாசனத்தில் வைத்திருக்கிறது? இந்தப் பாதுகாப்பு இல்லையானால் இந்நூர் பிரஜைகள் ஒரு வாரத்தில் நியாய அநியாயங்களைத் தீர்த்துக் கட்டிவிடுவார்கள்."

பிக்கானிர் சமஸ்தான நீதி பரிபாலனம்: ஜயந்தி பிரஸாத் ஷர்மா தாஸைக் கைது விசாரணையின்றியே இரண்டாண்டுகள் சிறையில் வைத்தனர். மஹாராஜாவின் மெய்காப்பாளராகப் பணி செய்ய மறுத்தமைக்கு, நாராயணசிங்கை நாடு கடத்தினர். "அநுமதியின்றிக் கூட்டம் நடத்தினர்" என்று சதிக்குற்றம் சுமத்தி, கங்கா பிரஸாதைச் சமஸ்தானத்திலிருந்து பகிஷ்கரித்தனர். பிக்கானிர் ரயில்வே கணக்குத் தணிக்கைப் பிரிவில் வேலை செய்து கொண்டிருந்த ராதாகிருஷ்ண டோண்ணிவால் என்பவரை ஐந்து மணி நேரத்தில் சமஸ்தானத்தை விட்டு வெளியேற்றி விட்டனர். ஜம்னுலால் பஜாஜையும், அவருடைய சகாக்களையும் அகாரணமாய்ப் பிடித்துக்கொண்டு போய் சமஸ்தான எல்லைக்கு வெளியே விட்டனர். 1866-67-ம் ஆண்டில் குடியானவர்களிடம் விலைக்கு விற்ற நிலங்களில் பலவற்றைச் சமீபத்தில் பறிமுதல் செய்தனர். ஐரோப்பியப் பெரும்போரின்போது ராணுவ ஊழியர்கட்கு இனமாகக் கொடுத்த நிலங்களைப் பிறகு ஜப்தி செய்தனர். ரதன் பாசார்ஜி தேவாலயத்திற்குரிய கிராமங்களைப் பலாத்காரமாய்க் கைப்பற்றிக்கொண்டனர். இப்படி எத்தனையோ கொடுமைகள். அவை முழுதும் சமீபத்தில் அகில இந்திய சமஸ்தானப் பிரஜைகள் சங்கத்தார்

வெளியிட்ட 'பிக்கானிர் சமஸ்தான உள் தோற்றம்' என்னும் நூலில் குறிப்பிடப்பட் டிருக்கின்றன. மீண்டும் அவைகளை இங்கே எடுத்து அடுக்குவது அநாவசியம்.

ஜாம்நகர் சமஸ்தான நீதி: மானசிம்ம என்பவரைக் கைது செய்து, விசாரணையின்றியே ஐந்தாண்டுகள் சிறையில் வைத்தனர். லால்பூர் வாசியான மால்ஜீநாக்ஜீ என்பவரைக் கைது செய்து, குற்றச்சாட்டோ விசாரணையோ இன்றி மூன்றாண்டுகள் சிறையில் வைத்தனர். அவருக்கு உதவியாகச் சென்ற அவருடைய சகோதரரையும் சிறையில் தள்ளினர். அருண ஜாகீர்தாரின் ஊழியர்கள் 50 பேரை ஒரே காலத்தில் கைது செய்து, ஒரு ஆண்டு வரை சிறையில் வைத்துப் படாதபாடு படுத்தினர். தீப்பெட்டி, மண்ணெண்ணெய் முதலிய தினசரி வாழ்க்கைக்கு இன்றியமையாத வஸ்துக்களை விலம் விடக்கூடாது என்று கேட்டுக்கொண்ட லவண பிரஸாத் என்பவரைப் பிடித்து 45 நாள் சிறையிலிட்டனர். இந்த நாற்பத்தைந்து நாளைக்குப் பிறகும் நியாயம் என்று எண்ணாமல் "தயவு கருதி"யே மஹாராஜா அவரை விடுதலை செய்தார்.

ஆள்வார், பாடியாலா, காஷ்மீர், ராம்பூர்களின் நீதிபரிபாலனமும் இப்படியே தான்!

இதைவிட நியாய விசாரணையைப்பற்றி எழுதவேண்டியதும், எழுதத்தக்கதும் வேறில்லை. இனி, ஏதேனும் எடுத்துக் காட்டவேண்டுமானால், ஜூட்கர், சமஸ்தானங்களில் உள்ள போலீஸ் இலாகாவைப்பற்றி எழுதிய வாக்கியங்களையே எடுத்துக்காட்டவேண்டும். அவ்வாக்கியங்கள் வருமாறு:

"சராசரி 100-க்கு 50 குற்றங்களுக்கு எவ்விதமான ருஜூவும் கிடைக்காது. திருட்டுச் சொத்துக்களில் 100க்கு 30 விகிதங்கூடக் கண்டுபிடிக்கப்படுவதில்லை. கொலைக் குற்றங்களில் உண்மையான குற்றவாளி குறைந்தபக்ஷம் ஒருவனாவது தண்டிக்கப்படமாட்டான். பாவபுண்ணிய மறியாத அப்பாவிகள், பொய்ச் சாக்ஷிகளின் ஆதாரத்தின் மீது தண்டிக்கப்படுவார்கள்...............அநேக சமயங்களில் போலீஸாரே குற்றங்களைச் செய்ய முனைவார்கள். பேர் பெற்ற குற்றவாளிகளைத் திருட்டுத் தொழில்களைச் செய்யுமாறு ஏவுவார்கள். கிடைக்கும் திருட்டுச் சொத்தில் பங்கு போட்டுக்கொள்ளுவார்கள்........................கிராமங்களில் அழகுள்ள பெண்மணிகள் மானம் மரியாதையுடன் வாழ்வதே துர்லபம்." *

---

* சமஸ்தானங்களில் போலீஸ் இலாகா எப்படி இருக்கிறது என்று அறிந்துகொள்ள அடியில் வரும் கதை தகுந்த அத்தாட்சி. ரஜபுதனத்தைச் சேர்ந்த ஒரு சமஸ்தானத்தில் ராணியின் பூஜை விக்கிரகம் தெருவில் ஊர்வலமாகச் சென்றது. ஒரு தையற்காரன் பராமுகமாய் இருந்தான். எழுந்து நிற்கவில்லை. உடனே அவனை மஹாராணியின் சேவகர்கள் கைது செய்து அழைத்துக்கொண்டு போனார்கள். இரண்டு மூன்று நாளாகியும் அவனுடைய கதி என்னவாயிற்று என்று தெரியவில்லை. எனவே அவனுடைய உறவினர் போலீஸ் மேலதிகாரியிடம் முறையிட்டுக்கொண்டனர். அதற்கு அந்தப் போலீஸ் மேலதிகாரி கொடுத்த பதில் என்ன ! "மஹாராணியின் சேவகர்கள் என்னுடைய போலீஸாரையே கைது செய்வார்கள்; அந்த ஆசாமியைக் கைது செய்தது என்ன அவ்வளவு பிரமாதமா?" என்றார்.

வரிகள்

இந்தப் பகுதியைச் சூட்கர் எழுதிய வாக்கியங்களால் தொடங்குவது நலம்: "சமஸ்தான நிர்வாக அவசியத்தை ஒட்டி வரிகள் விதிக்கப்படுவதில்லை. சமஸ்தானம் செய்யும் சௌகரியங்களுக்காகச் செலுத்த வேண்டிய தொகைகள் என்றும் எண்ணுவதற்கில்லை. வரிகள் வாங்கும் விஷயத்தில் அவற்றிற்கான அவசியத்தையோ, நியாயத்தையோ யாரும் தெளிவுபடுத்த முன்வருவதில்லை. இவ்விதம் தெளிவுபடுத்த வேண்டியது அவசியம் என்றே கருதப்படுவதில்லை. சமஸ்தானாதிபதி சர்வாதிகாரி. மற்ற விஷயங்களைப்போலவே வரி விதிப்பதிலும் அவர் தம் மனம்போன போக்கிலேயே நடந்துகொள்ளுவார். எனவே தம் இஷ்டம்போல் வரி விதிக்கிறார். அதற்கான காரணங்களேனும் ஜனங்களுக்கு எட்டக்கூடியவையா? இல்லை. சில சமஸ்தானங்களின் வரிக்கொடுமை நினைக்கவும் முடியாமல் இருக்கின்றது. சமஸ்தானங்களின் வரிகளைச் சட்ட ரீதியான கொள்ளைகள் என்றே சொல்லவேண்டும்." உதாரணமாக நவநகர் சமஸ்தானத்தை எடுத்துக்கொள்ளுவோம். இந்தச் சமஸ்தானம் விதிக்கும் வரிகள் வருமாறு:

விவசாயிகள் செலுத்தவேண்டிய வரிகள்:

நிலவரி.

சொத்துரிமை வரி (நிலவரியில் ரூ. 1-க்கு 4 அணா)

பஞ்சவரி (கிலவரியில் ரூ. 1-க்கு 4. அணா வீதம்)
பஞ்ச இன்ஷூரன்ஸ் வரி
கால்நடை வரி
கால்நடை விற்பனை வரி
கால்நடைத் தீனி வரி
நெய் வரி
பருத்தி வரி
தானிய விற்பனை வரி
காய்கறி வரி
வெல்ல வரி
சர்க்கரை வரி
பெண்கலியாண வரி
கலியாண விருந்தினர் வரி
மறுகலியாண வரி
பழமர வரி
தபால் வரி

இப்படியாக விவசாயியின் வருமானத்தில் 100-க்கு 60 விகிதம் வரிகளே செலுத்தப்பட்டு விடும்.

நகரமக்கள் செலுத்தும் வரிகள்:

நகரத்திற்குள் வந்து இறக்குமதியாகும் எல்லாப் பொருள்களுக்கும் சுங்கம் உண்டு. மற்றவை:

வீட்டு வரி
வண்டி வரி
போர்க்கடன் வரி
கால்நடைத் தீனி வரி
நெய்யுற்பத்தி வரி
நெய் இறக்குமதி வரி

விவசாயிகளல்லாத கிராம வாசிகள் செலுத்த வேண்டிய வரிகள்:

	தலைக்கு	ரூ. அ. பை.
லேவாதேவிக்காரர்—சில்லறைக் கடைக்காரர் வகையரா	,,	4—0—0
நடவு ஆட்கள்-அறுவடை ஆட்கள்	,,	3—0—0
நூல்நூற்போர்—நெய்வோர்	,,	3—0—0
மேற்கண்ட தொழில்களில் சம்பந்தப்பட்டமற்றவர்கள்	,,	2—0—0
இடையர் வகையரா	,,	1—0—0
பிச்சைக்காரர் (பிராமணர், பக்கீர், ஸாதுக்கள்)	,,	1—0—0

பிற வரிகள்:

நெய் வரி
புல் வரி
பருத்தி வரி
உப்பு வரி
பஞ்ச வரி

இந்த வரிகள் ஒருபுறமிருக்க நவநகர் சமஸ்தானத்தில் ஒரு விசித்திரமான முறையும் இருக்கிறது. பிரிட்டிஷ் இந்தியாவில் கள், சாராயம், கஞ்சா, அபினி முதலிய லாகிரி வஸ்துக்களை இஷ்டம்போல் வியாபாரம் செய்வதற்கில்லை. சர்க்கார் விடும் ஏலத்தில் அதிகமாக எடுப்பவர்கட்கே அவற்றை விற்கும் உரிமை உண்டு. நவநகர் சமஸ்தானத்திலோ, புகையிலை, மண்ணெண்ணெய், பெட்ரோல், தீப்பெட்டி முதலியவைகளை ஏலத்தில் எடுத்தவர்களே விற்க வேண்டும்.

மேற்சொன்ன வஸ்துக்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 75,000 முதல் ரூ. 1,50,000 வரை ஏலத்தின் மூலம் கைப்பற்றப்படும். தினசரி வாழ்வுக்குரிய ஜீவாதாரமான வியாபாரங்களை இப்படித் தடை செய்யும் கொடுமை நாகரிக உலகில் வேறு எங்குமே காணமுடியாது.

சமஸ்தானம் மேற்கொண்டுள்ள இந்த விபரீத முறையால் மக்கள் அநுபவிக்கும் கஷ்ட நஷ்டங்கட்கும், தொல்லைகட்கும் ஒரு எல்லையே இல்லை. இதற்கு ஒரு எடுத்துக்காட்டாக "நவநகர் சமஸ்தான உள் தோற்றம்" என்னும் பிரசுரத்தினின்று புகையிலை ஏலம் பற்றிய பகுதி கீழே காட்டப்படுகிறது:—

"புகையிலை விற்பனையை ஏலத்திற்கு விட்டு, கட்டுத் திட்டப்படுத்தி அமலுக்குக் கொண்டு வருவது கஷ்டமான வேலை. ஆனால் அதை அமலுக்குக் கொண்டுவந்து தீர வேண்டும். அதற்காகச் சமஸ்தானம் தனித்தனி 179 சர்க்குலர்களை ஜாரி செய்ய வேண்டியிருந்தது. "சமஸ்தான உத்தியோகஸ்தர்கள் எல்லாரும்—நீதி இலாகா, போலீஸ் இலாகா, ரெவின்யூ இலாகா முதலிய எல்லாப் பிரிவினரும்—புகையிலை ஏலதாருக்கு அவருடைய வியாபார விஷயத்தில் உதவி புரியவேண்டும்" என்று சர்க்குலர்கள் பறந்தன.

"1923ஆம் வருஷம் மேயீ 1உ ஸ்டேட் கெஜட்டில் 300 பக்கங் கொண்ட கீழ்வரும் கருத்தடங்கிய அறிக்கை அச்சிடப்பட்டது:—

"புகையிலையை உபயோகிப்போர், லைசென்சுதாரிடம் வாங்கிய புகையிலையை மாத்திரமே உபயோகிப்பதாக ஷடி வியாபாரி திருப்தி அடையும் முறையில் ருஜூக்

கொடுக்கவேண்டும். இப்படிச் செய்யாவிட்டால் அவர்கள் வெளியிலிருந்து சட்ட விரோதமாய் வரும் புகையிலையை உபயோகிப்பதாகவே கருதப்படுவார்கள். அதற்காக 1921ஹு ஜுலைமீ 30உ 8-வது சர்க்குலர் 60-வது விதியின்படி தண்டிக்கப்படுவார்கள். புகையிலையை உபயோகிப்போர், தாங்கள் சமஸ்தானப் புகையிலையை மாத்திரமே உபயோகித்து வருவதாகவும், வெளிப் புகையிலையை உபயோகிக்கவில்லை என்பதாகவும் நிரூபணம் செய்யவேண்டும். இப்படிச் செய்யாதவர்கட்குத் தண்டனை விதிக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது."

(ஒப்பம்) ஜி. பி. தேஸாய்,

20, ஏப்ரல், 1923 ரெவினியூ காரியதரிசி.

"ஜாம் ஸாஹெப் திருவடிக் கமலங்கட்கு" என்னும் நூலிலிருந்து கீழ்வரும் விஷயம் எடுத்துக் காட்டப்படுகிறது:—

"பதுதாரியைச் சேர்ந்த மாம்லத்தார், வலதார் உறவினர் ஒருவரை அழைத்துக்கொண்டு விசாமன் என்னும் கிராமத்திற்குச் சென்றார். அவ்விருவரும் கிராமவாசிகள் எல்லாரையும் ஓரிடத்தில் கூடுமாறு ஏற்பாடு செய்தனர். புகையிலையைக்குறைவாக உபயோகிப்பதற்காக எச்சரிக்கை செய்தனர். வெளியிலிருந்து புகையிலை வாங்கி உபயோகிப்பதால் தான் அக்கிராமத்தில் அதன் விலை குறைய நேர்ந்தது என்று மாம்லத்தார் தீர்மானித்தார். அதற்காக அக்கிராம வாசிகள் எல்லாருக்கும் மொத்தமாக அபராதம் விதித்தார். பிறகு அவர் என்ன செய்தார்? ஒவ்வொரு கிராமவாசியும் குறைந்த பக்ஷம் ¼ வீசை புகையிலையை வாங்கவேண்

டும்; புகையிலை உபயோகிக்கும் வழக்கம் இல்லாதவர்கள் அதற்குரிய விலையையாவது கொடுத்துத் தீரவேண்டும் என்று கட்டளையிட்டார். இதற்கு இணங்கிய கிராமவாசிகளிடமிருந்து, அவர் தமது கட்டளைக்குரிய உடன்படிக்கைகளை எழுத்து மூலம் எழுதி வாங்கிக்கொண்டார்.

"வெளியிலிருந்து வருகிறவர்கள் புகையிலையையாவது, சுருட்டு வகையராக்களையாவது சமஸ்தானத்திற்குள் கொண்டு வருவார்கள் என்ற சந்தேகத்துடன் சமஸ்தான அதிகாரிகள் எல்லைப்புறத்தில் எல்லாரையும் சோதனை செய்வார்கள். இந்தச்சோதனையில் யாரிடமேனும் 25 சிகரெட்டுகளுக்கு மேல் இருப்பதாகத் தெரிந்தால், அவருக்கு அவற்றிற்காகச் செலுத்தவேண்டிய சுங்கத்திற்குமேல் 10 பங்கு அதிக அபராதம் விதிப்பார்கள்."

"இது மாத்திரமா? இன்னொரு விபரீதத்தைப் பாருங்கள். புகையிலை லைசென்சுதார் தமக்கு வரவேண்டிய நிலுவைகளை வசூலிக்க ரெவினியூ முறையைக் கையாளுமாறு அவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. ஜனங்கள் அவருக்குக் கொடுக்கவேண்டிய பாக்கிகளுக்காக அவர் கோர்ட்டுக்குப் போகவேண்டியதில்லை."

இவ்விதம் நவநகர் சமஸ்தானத்தில் புகையிலையை உபயோகிக்கவேண்டும் என்று ஜனங்களை நிர்ப்பந்தம் செய்கிறார்கள்.

புகையிலை வியாபாரத்தைப் போலவே பருத்தி அறைப்பதும் இச்சமஸ்தானத்தில் லைசென்சு முறையில் நடத்தவேண்டி யிருக்கிறது. இதைப்பற்றி மேற்சொன்ன பிரசுரத்தில் இவ்வாறு இருக்கிறது.

"ஒவ்வொரு பருத்தியந்திரச்சாலைமீதும் 1925ஆம் ஜூலை 26உ ஹர்ஜர் உத்தரவுப்படி 15ஆண்டுகள் வரை சேத் லால்ஜிக்கு லைசென்சு உரிமைஅளிக்கப்பட்டிருக்கிறது. அந்த உத்தரவில் கண்ட ஒரு பகுதி:

"சமஸ்தானத்தில் விளையும் பருத்தியை இங்கே உள்ள யந்திரஆலைகளிலேயே அரைக்கவேண்டும். சமஸ்தான எல்லைக்கு வெளியே கொண்டுபோகக்கூடாது...............இவ்விடத்திய யந்திரச்சாலைகளில் அரைக்காமல் யாரேனும் பருத்தியை வெளியே ஏற்றுமதி செய்தால், அவருக்கு மணங்கு 1க்கு ஐந்து ரூபாய் விதம் அபராதம் விதிக்கப்படும்.

இந்த நிபந்தனைகளால் கீழ்க்காணும் விபரீதங்கள் விளைகின்றன:

"சமஸ்தானத்தில் ஆடகோட், பத்லா என்னும் இரண்டு ஜில்லாக்களில் பருத்தி விளைகின்றது. இந்த ஜில்லாக்களுக்கும் ராஜ்கோட்டுக்கும் 16 மைல் தூரம். சமஸ்தானப் பருத்தி யந்திரச்சாலைகள் இருக்கும் நவநகர் 66 மைல் தூரம். ராஜ்கோட்டில் ஒரு பேல் பருத்தி அரைக்க $4\frac{1}{2}$ ரூபாய் முதல் $5\frac{1}{2}$ ரூபாய் வரை கூலி ஆகும். நவநகரில் 7 ரூபாய் விதம் கூலி வாங்கப்படும்.

"இதனால் எவ்வளவு கஷ்டநஷ்டங்கள் நேரும் என்பதைச் சமஸ்தானம் லக்ஷியம் செய்வதில்லை. இந்த இரண்டு ஜில்லாக்காரரும் 50 மைல் தூரம் பருத்தியைக் கொண்டுபோய் அரைக்கவேண்டியிருக்கிறது. இதனால் அதிகப்படி இரண்டு ரூபாய்—வண்டி வாடகை முதலிய நஷ்டங்களை அநுபவிக்கவேண்டியிருக்கிறது.

"மேலும் நவநகர் சமஸ்தானம் ஒரு பக்கம் சொந்தத்தில் உப்பு வியாபாரம் வேறு தொடங்கிவிட்டது. இதனால் மக்களின் ரத்த—மாமிசங்கள் கசக்கிப் பிழியப்படுகின்றன. இந்த வியாபாரத்தின் பொருட்டுச் சமஸ்தானம் செய்த உத்தரவு எவ்வளவு கடுமையாயிருக்கிறது என்று கவனியுங்கள்:

"சமஸ்தானப் பிரஜைகள் ஜனத்தொகைக்கு ஏற்றபடி உப்பு உபயோகிக்கவில்லை. எனவே கீழ்க்காணும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது:

"ஒவ்வொரு கிராமமும் நகரமும் கட்டாயமாய் உபயோகிக்கவேண்டிய உப்பு இவ்வளவு என்று சுங்க இலாகா அதிகாரிகள் நிர்ணயித்து ஜாப்தா தயார் செய்வார்கள். இந்த ஜாப்தாக்கள் மாம்லத்தார் மூலம் ரெவினியூ குமாஸ்தாக்களுக்கு அனுப்பப்படும். ஜாப்தாவில் கண்ட அளவுப்படி ஒவ்வொரு குடும்பமும் கட்டாயமாய் உப்பை வாங்கித் தீரவேண்டும்.

"ரெவினியூ குமஸ்தாக்கள், தங்கள் சர்க்கிள்களில் உள்ள கிராமங்களில் சுற்றுப் பிரயாணம் செய்யும்போது, ஒவ்வொரு குடும்பத்தாரும் ஜாப்தாவில் உள்ள அளவுப்படி உப்பை வாங்கி உபயோகிக்கிறார்களா, இல்லையா என்பதைத் தனிச் சிரத்தையுடன் கவனிக்கவேண்டும். எங்கெங்கு இல்லையோ அங்கெல்லாம் சரியாக உபயோகிக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும்........................இவ்விஷயத்தில் அவசியமானால் அவர்கள் போலீஸ் உதவியை நாடலாம்.

"கிராமங்களில் முகாம் செய்யும் போது தாலுகா மாம்லத்தார்கள், போலீஸ் இன்ஸ்பெக்டர்கள், போலீஸ்

சப் இன்ஸ்பெக்டர்கள்கூட இவ்விஷயத்தில் கவனம் செலுத்தவேண்டும்.

(ஒப்பம்) மஹர்வான்ஜி பெஸ்டன்ஜி

5—1—24 நவநகர் சமஸ்தான திவான்.

மேற்கண்ட உத்தரவு குறிப்பிடும் ஜாப்தாவில் உள்ள விஷயம் என்ன? சமஸ்தானப் பிரஜைகள் எல்லாரும் ஆண்டு 1-க்கு தலைக்கு $\frac{1}{2}$ மணங்கு உப்பைக் கட்டாயம் வாங்கித்தீரவேண்டும். ஒவ்வொருவருக்கும் $\frac{1}{2}$ மணங்கு உப்பு அவசியமா இல்லையா என்பதைப்பற்றிக் கேள்வி முறை இல்லை. குறிப்பிட்ட காலத்தில் தாலூகா ஆபீஸுக்குப் போய் அதற்குரிய விலையைச் செலுத்திவிட்டு வர வேண்டும். இதில் இன்னொரு விபரீதம்! சுங்க இலாகாதார் தயார் செய்த ஜாப்தாவில், இறந்துபோனவர்களின் பெயர்கள் கூட அப்படியே இருக்கும். எனினும் குடும்பத்தினர் இறந்தவருக்குங்கூட $\frac{1}{2}$ மணங்கு உப்பு வாங்கித் தீரவேண்டும். இல்லையேல் அதன் விலையையாவது கொடுத்துவிடவேண்டும். இதைவிடக் கொடுமை வேறு ஏதேனும் இருக்க முடியுமா?

நாகரிக உலகில், எங்கும் கண்டும் கேட்டும் இராத முறையில் லைசென்சு கட்டுத்திட்டத்தை அமல் செலுத்துவதில் தலைசிறந்து விளங்குவது கொண்டால் சமஸ்தானம். இவ்விஷயத்தில் நவநகர் சமஸ்தானத்தைக்கூடத் தோற்கடித்துவிடும். இந்தச் சமஸ்தானம் ஏலத்திற்கு விடும் வஸ்துகள் இவை: சர்க்கரை, வெல்லம், மரம், ஐஸ், மண்ணெண்ணெய், பெட்ரோல், ஸோப், கல், சுண்ணாம்பு, தோல், எண்ணெயாட்டும் செக்கு, எரு, காய்கறிக் கடைகள், வண்டிகள், புற்கட்டுகள், விறகுக்கட்டுகள், மோட்

டார் லாரி சர்விஸ், ஸினிமாக்கள், மேய்ச்சல்தரை, கள், சாராயம், அபினி, பங்கி—கஞ்சா முதலியன.

முடியுமானால் காற்றைக்கூட ஏலத்திற்கு விட்டு விடுவார் இந்தச் சமஸ்தானதிபதி! பாவம் அதற்கு வழியில்லாமல் போய்விட்டதே!

இனி, ஆள்வார் சமஸ்தான நிலைமையை எடுத்துக் கொள்ளுவோம். இந்தச் சமஸ்தானத்தின் ஜனத்தொகை, கீழ்க்கண்டவாறு குறைந்துகொண்டே வந்தது:

1901	8,28,489
1911	7,31,668
1921	7,01,154

இந்தியா முழுவதிலும் 1901—1921 ஆண்டுகளுக்கிடையில் ஜனத்தொகை அதிகமாயிற்றே ஒழியக் குறையவில்லை. இங்ஙிலையில் ஆள்வார் சமஸ்தானத்தில் மட்டும் ஜனத்தொகை குறைவதற்குக் காரணம் என்ன? பஞ்சமா? நோய் மிகுதியா? குடியேற்றமா? ஏதோ ஒன்று இதற்குக் காரணமாயிருக்கவேண்டும். காரணம் எதுவானாலும் சரி, ஆள்வார் சமஸ்தானம் செழுமையாயில்லை என்பது மாத்திரம் தெளிவு. எனினும் சமஸ்தான வருமானம் கீழ்க்கண்டவிதமாக வளர்ச்சி அடைந்தது குறிப்பிடத்தக்கது:

	பவுன்கள்
1911	2,00,000
1921	3,50,000
1927	4,00,000

கேவலம் 16 ஆண்டுகளில்—அதுவும் ஜனத்தொகை அகில இந்திய நிலைமைக்கு மாறாக லக்ஷத்திற்கு மேல்

குறைந்த பிறகு—சமஸ்தான வருமானம் இரட்டித்தது! அக்கிரமமாக அதிக வரிகள் விதிக்கப்பட்டன என்பதற்கு இதைவிட வேறு அத்தாட்சி என்ன வேண்டும்?

நவநகர் சமஸ்தானம் விதிக்கும் வரி விவரங்கள் மேலே எடுத்துக்காட்டப்பட்டன. அவையெல்லாம் சாதாரணமானவை என்றே விவகாரத்திற்கு வைத்துக்கொள்ளலாம். இவற்றைத் தவிர அசாதாரணமான-விசேஷ வரிகள் பல இருக்கின்றன. கவர்னர்கள், வைஸிராய், உயர் பதவி வகிக்கும் மற்ற அரசாங்க உத்தியோகஸ்தர்கள் முதலியவர்கள் சமஸ்தானத்திற்கு விஜயம் செய்யும்போது பலவித மான ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும். விருந்து, விநோதம், ஆடல், பாடல்களுக்கெல்லாம் செலவாகும் லக்ஷக் கணக்கான ரூபாய்களை குடிகளே கொடுக்கவேண்டும். சமஸ்தானாதிபதியின் விவாகச் செலவுகளைக்கூட ஜனங்களே கொடுக்கவேண்டும். சமஸ்தானாதிபதி ஒருவர் கலியாணத்திற்கு மாத்திரமன்று-அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த யாருக்குக் கலியாணம் நடந்தாலும் சரி--பிரஜைகளே அந்தச் செலவுகளைக் கொடுக்கவேண்டும். இப்படி இன்னும் எத்தனையோ வரிகள் இருக்கின்றன—வண்டி வண்டியாய்.

நைஜாம் சமஸ்தானத்தில் வரிக் கொடுமைகளால் மக்கள் படும் துயரங்கள் கொஞ்சம் இல்லை. இது பற்றி ஒரு பிரபல பத்திரிகை சமீபத்தில் வெளியிட்ட விவரங்களைப் பாருங்கள்: "நைஜாம் சமஸ்தானத்தில் வரி வசூல்கள் ஏராளம். ஏதாவது ஒரு நகரத்தில் சாக்குகளை வாங்கும் கிராமவாசி, கடைக்காரரிடம் அந்தச் சரக்குகளின் ஜாப்தாவை வாங்கிக்கொண்டு கணக்குப்பிள்ளையிடம் போக வேண்டும். அங்கே மாமூல் காணிக்கை 0-4-0 செலுத்த

வேண்டும். பிறகு கணக்குப்பிள்ளை அந்த ஜாப்தாவில் கையெழுத்துச் செய்வார். உடனே அதை எடுத்துக் கொண்டு சுங்கத் தலைமைக் காரியாலயத்திற்குப் போக வேண்டும். அங்கும் சுங்கப்பணம் கட்டி, அநுமதிச் சீட்டு வாங்கிக்கொண்டு ஊருக்குப் போகவேண்டும். 415 கிராமங்களுக்கு இந்த ஒரு தலைமைக் காரியாலயமே உண்டு. இந்த அலைச்சல்களுக்கு அஞ்சி, சுங்கச் சிப்பந்திகளுக்கு லஞ்சவாணம் கொடுத்துத் தப்பித்துக்கொண்டு போகிறார்கள் ஜனங்கள். மேலும், இச்சமஸ்தானத்தில் நாணய மாற்று முறையால் எத்தனையோ கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன."

நிலவரி வருமானமே அதிகம். இந்த நிலவரி சில சமயங்களில் பணமாகவும், சில சமயங்களில் தானியமாகவும் வாங்கப்படுவது உண்டு. நிலவரியைத் தானியமாக வசூல் செய்வதில் எத்தனையோ சங்கடங்கள் நேரும். நிலத்தின் தன்மை, விளைபொருளின் அளவு, இதில் சமஸ்தானத்திற்குரிய பங்கு முதலிய விஷயங்கள் நிர்ணயிக்கப்படவேண்டும். சமஸ்தான உத்தியோகஸ்தர் வந்து, நிலவரிக்குரிய தானியத்தை அளந்துகொண்டு போகிறவரை, அந்தத் தானியராசி களத்திலேயே இருக்கவேண்டும். இந்நிலையில் மழை பெய்து விட்டால் ஒரு வருஷம் பட்டபாடெல்லாம் வீணாகிவிடும். சில சமயங்களில் சுங்கக் கொடுமை சகிக்க முடியாததாயிருக்கும். மாட்டு வண்டிகளுக்கும், ஒட்டகங்களுக்கும் ஐந்து ரூபாய் முதல் பத்து ரூபாய் வரை சுங்கம் விதித்த சமஸ்தானத்தின் கொடுமையை என்னென்பது? கோவேறு கழுதைகளுக்கு ஒரு ரூபாய் முதல் ஐந்து ரூபாய்.

8

கால் நடையாகச் செல்லுவோருக்கு ஒரு ரூபாய் முதல் இரண்டு ரூபாய். இப்படியேதான் மற்றவைகட்கும்.

ஜாப்வா சமஸ்தானத்தில் பெரும்பாலான குடியானவர்கள் பில் வகுப்பைச் சேர்ந்தவர்கள். ஒரு வருஷம் சரியான மழையின்மையால் விளைவு இல்லை. எனவே அவர்களால் கிஸ்து செலுத்த முடியவில்லை. சமஸ்தானுதிபதியின் நெருக்கடியால் சிலர் பெற்ற குழந்தைகளையும் விற்றுக் கிஸ்து செலுத்தினர் என்று "பிரின்ஸிலீ இந்தியா" கூறுகிறது. கந்தாயப் பாக்கிக்காகச் சில குடியானவர்களிடம் கூலியில்லாத வெட்டிவேலை வாங்கப்பட்டது. வரி நெருக்கடியால் ஒரு குடியானவன் குழந்தை குட்டிகளுடன் கிணற்றில் விழுந்து உயிர்விட்டான். இத்தகைய தற்கொலைகளைப்பற்றி மனம்கொதிக்கும் கதைகள் பல உண்டு.

காட்டுமிராண்டித்தனமான ஒரு கோரக்கதையைக் கவனியுங்கள்: பஞ்சாபில் உள்ள லோஹரர் சமஸ்தான நவாப் ஒரு சமயம் கவனர்ஜெனரல் ஏஜண்டுக்கு வரவேற்பு அளித்தார். சமஸ்தானக் குடிகளில் பிரபலஸ்தர்களாக உள்ளவர்களை அந்த வரவேற்பு வைபவத்திற்கு அழைத்திருந்தார். அப்போது குடிகள் தங்கள் வரிக்கொடுமைகளைப் பற்றி முறையிட்டுக் கொண்டனர். நவாப் ஏஜண்டு முன்னிலையில் வேண்டிய உதவி புரிவதாக வாக்களித்தார். மிகவும் நெருக்கடியான நிலைமை. எனவே 1909-ம் ஆண்டின் செட்டில்மெண்ட் முறையை அமலுக்குக் கொண்டுவரவேண்டும் என்று பிரமுகர்கள் நவாப்பிடம் குறையிரந்து கேட்டனர். அவர் வாக்குறுதியைக் காப்பாற்றவில்லை. மேலும், உடனே ஒட்டக வரியை வசூலிக்கக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டார். உதவிக்காகப் பிரிட்டிஷ் துருப்புக்களை அனுப்பவேண்டும் என்று

சர்க்காருக்குத் தகவல் கொடுத்தார். இல்லாததும் பொல்லாததுமான பொய் வதந்திகளைக் கிளப்பிப் பலவிதமான அட்டூழியங்களை நடத்தினர். சில பிரமுகர்களை வரவழைத்துக் கைதுசெய்தார். நவாப்பே நேரில் வந்து நின்று கொண்டு தடியடி தர்பார் நடத்தினர். இந்த அடிகளைப் பொறுக்க மாட்டாமல் அநேக கிராமவாசிகள் பக்கத்திலிருந்த அடவிகளுக்குள் ஓடி ஒளிந்து கொண்டனர். பரிசோதனை என்ற பெயரால், நவாப்பின் ஆட்கள் கிராமங்களில் புகுந்து கொள்ளையடித்தார்கள். கொள்ளையடிக்கும் அளவில் அவர்கள் திருப்தி அடையவில்லை. வீடுகளைக் கொளுத்தினர். கிராமக் கோவில்களில் அசுத்தம் செய்தனர். கணவன்மார் அஞ்சி ஓடியொளிந்ததால் திக்குத் திராணியின்றி இருந்த மனைவிமாரைச் சிறைப்படுத்தி மானபங்கம் செய்தனர். இவ்வளவு பெரிய வெற்றி பெற்றமைக்காகச் சமஸ்தான வீரர்கள் ஆடியும் பாடியும் பெரிய திருவிழாக்கொண்டாட்டம் நடத்தினர்களாம்! இந்தப் படையெடுப்பில் துப்பாக்கிப் பிரயோகங்களும் நடந்தன. பலர் உயிர் துறந்தனர். அநேகர் காயம் பட்டனர். தாம் செய்ததெல்லாம் சரி என்று அந்த நவாப் வாதித்தார். தற்காப்பின்பொருட்டே அவ்வாறு செய்ய நேர்ந்ததாம். மூன்று பேர் காயம் பட்டனர் என்பது நவாப்பின் வாக்குமூலம். ஆனால், பத்துச் சவங்கள் பவானி ஆஸ்பத்திரிக்கு ஒட்டகங்களின்மீது கொண்டுவரப் பட்டதாக அதிகார தோரணையில் ருஜு உண்டு. பவானி ஆஸ்பத்திரிக்கு வந்த பத்துச் சவங்களேயன்றி மற்றும் எத்தனையோ பிணங்கள் ஸிங்கானி கிராமத்தில்கிடந்தனவாம்!

கராச்சியில் 1936-ம் ஆண்டில் நடந்த 5-வது அகில இந்திய சமஸ்தானப் பிரஜைகள் மகாநாட்டில் தலைமை

வகித்த டாக்டர் பி. பட்டாபி சீதாராமையா இந்தக் கோர வரலாற்றை வெகு விரிவாகவும் உருக்கமாகவும் எடுத்துக் காட்டியிருக்கிறார். மேலும் அவர் ஸிஹார் சமஸ்தான வரிக்கொடுமைகளை வருணித்தது கல் நெஞ்சத்தையும் கரைத்துவிடும். அங்குள்ள ஏழைக் குடியானவர்களிடம் சகிக்க முடியாத வரிப்பளுவைச் சுமத்தி வசூலிப்பதில் சமஸ்தானாதிபதி கீழ்வரும் ராக்ஷஸச் செயல்களில் தலையிடுவது வழக்கம்:

1. கொலைகள்.
2. துப்பாக்கிப் பிரயோகம்.
3. தடியடிப் பிரயோகம்.
4. பள்ளிக்கூடங்களை இடித்தல், மூடுதல்.
5. வீடுகளில் புகுந்து கொள்ளையடித்தல், சொத்துக்களை அழித்தல்.
6. செலுத்த வேண்டியதை விட அதிகமான இன்று—தீர்வைகளை வசூலித்தல்.
7. அபராதங்கள், ராணுவச்செலவு என்ற பெயரால் பணம் வசூலித்தல்.
8. பெண்களை மானபங்கம் செய்தல், அவர்களுடைய நகைகளை அபகரித்தல்.
9. ஜாட் வகுப்பினருக்கு உதவி செய்பவர்களை நாடுகடத்தல். (ஜாட் வகுப்பினரே அச்சமஸ்தானத்தில் பெரும்பான்மையானவர்கள். நல்ல உழைப்பாளிகள்; கஷ்டத்திற்கு உட்படுகிறவர்களும் இவர்களே)
10. ஜாட் வகுப்பினரைத் துன்புறுத்தும் ரஜபுத்திரர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்தல்.

அந்த ஜாதியார் குதிரை, ஒட்டகங்களில் சவாரி செய்யக்கூடாது என்றும், அவர்கள் கடவுள் வழிபாட்டுக்கு வரக்கூடாது என்றும் தடை செய்தல்.

11. ஜாட் ஜாதியார் அனுப்பும் முறையீடுகளை அங்கீகரிக்கக் கூடாது என்று போலீஸாருக்கும் கோர்ட்டாருக்கும் உத்தரவு செய்தல்.

இந்த அநியாய அக்கிரமக் கொடுமைகளைப் பற்றி டாக்டர் பி. பட்டாபி சீதாராமய்ய வெளியிட்ட அபிப்பிராயமாவது:

“இவ்விருபதாம் நூற்றாண்டில், நாகரிக உலகில் இவ்வளவு கொடுமைகளை வேறு எங்கும் காணமுடியாது.”

இந்த அக்கிரமக் கொடுமைகளின் ஜாப்தாவில் மற்றும் சிலவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம். ரஜபுதனத்தில் உள்ள சாங்கதர சமஸ்தானத்தில் நிலவரி பாக்கிக்காகக் கலியாணமாகாத கன்னிகளையும் ஜப்தி செய்யலாம்! இங்கே உள்ள சமஸ்தானங்களில் கிஸ்து செலுத்தாதவர்களைத் (செலுத்த முடியாமற் போனவர்களை) தண்டிப்பதற்கு ஆணி அடித்த செருப்புகளை உபயோகிப்பார்கள்.

இப்படியாகத் துன்புறுத்தி வசூல் செய்யும் வரிப்பணங்களைக்கொண்டு குடிகளுக்குச் செய்யும் நலங்கள் எவை? ஒன்றுமில்லை. சில ரஜபுதன சமஸ்தானங்களில் குடி தண்ணீர் வசதிக்கும் வழி இல்லையாம்! அவ்விடங்களில் உள்ள பெண்கள் வெய்யிற் காலங்களில் தலைமீது குடங்களை வைத்துக்கொண்டு நான்கைந்து மைல்கள் போகவேண்டுமாம்! வரிப்பணமெல்லாம் மஹாராஜாக்களின் சொந்தச் செலவுக்கே சரியாவதில்லை. இனி மக்கள் நலங்களைப் பற்றிப் பேச இடமேது?

வசூலாகும் பணமெல்லாம் மக்களின் நலங்கட்கில்லை; மஹாராஜாக்களின் உல்லாஸப் பிரயாணங்கட்கும், லீலா விநோதங்கட்குமே செலவாகும். இவ்வுண்மை கீழேவரும் விவரங்களால் தெளிவாகும்.

சமஸ்தானம்	சராசரி மொத்த வரி தலைக்கு	சமஸ்தானாதிபதி சொந்த செலவு 100 க்கு	கல்விச் செலவு தலைக்கு	வைத்திய உதவிச் செலவு தலைக்கு	கல்வி கற்றவர் 100-க்கு
	ரூ. அ. பை.		அணா.	அணா.	
காஷ்மீரம்	6—0—0	20	6	3	2
பிக்கானிர்	16—8—0	20	5	4	3
இந்தூர்	13—8—0	17	7	2	3
ஆள்வார்	11—4—0	50	3	1	2
பாடியாலா	11—4—0	25	3	2	2
நவநகர்	22—8—0	45	6	4	3
கபுர்தாலா	11—4—0	25	7	3	3
கச்	22—8—0	25	2	1	1

சூட்கரின் வாக்கியங்களால் தொடங்கப்பட்ட இப் பகுதியை கௌபா வாக்கியங்களால் முடிப்போம்: "இரண்டு விதமான கொள்கைகளை ஒட்டி வரிகள் விதிக்கப்படும்.

சமஸ்தானாதிபதிக்கு எவ்வளவு பணம் தேவை? ஜனங்கள் எவ்வளவு கொடுப்பார்கள்?—இவ்விரண்டில் இரண்டாவது கொள்கை அவ்வளவாக முதன்மை பெறுவதில்லை............ சில வரிகள் பணமாகவும், மற்றும் சில தானியமாகவும் வசூலிக்கப்படும். வருவாயில் பெரும்பகுதி நிலவரியால் கிடைக்கும். நிலவரியைத் தவிர, தொழில் வரி, கால் நடை வரி, ஏற்றுமதி—இறக்குமதி வரி முதலாக மற்றும் பல உண்டு. சில சமஸ்தானங்களில் பிறப்பும் இறப்புங்கூட வருவாய்க்கான சாதனங்களாக இருக்கின்றன.

"இந்தச் சமஸ்தானக் கலியாண மகிழ்ச்சியில் மக்களுக்கும் பங்குண்டு. எவ்வகையில்? அவருடைய குடும்பத்தில் யாருக்கேனும் கலியாணம் நடக்கும் போதெல்லாம் பொக்கிஷம் நிறைக்கவேண்டிய பொறுப்பு மக்களைச்சார்ந்தது! இதுதான் கலியாண மகிழ்ச்சிப் பங்கீடு! குடியானவர்களுடைய உழைப்பின் பயனில் பாதிக்குக் குறைவாகச்சமஸ்தானங்கள் ஏற்றுக்கொள்ளுவதே இல்லை. எஞ்சிய பாதியிலேதான் குடியானவர்கள் சாகுபடி, உண்டி, உடை, நலம் புலம், லஞ்சலாவணம் முதலிய செலவுகளைச் செய்துகொள்ளவேண்டும். ராஜாவுக்குப் போகும் பாதித் தொகை எப்படிப்போகிறது? டில்லி நரேந்திர மண்டலி, குளிர் மலைகளில் உல்லாஸ பங்களாக்கள், பிரஞ்சு லீலாவிநோதங்கள், அரசியல் ஏஜண்டு வேட்டைத் திருவிளையாடல், இத்தாலிப் பயணங்கள், லண்டன் விருந்துகள், ஸ்பெயின் போகமாதர்கள் முதலிய இனங்களில் செலவாகும்."

பேகாரி வழக்கம்

“சில சமஸ்தானங்களில் பேகாரி என்ற வழக்கம் ஒன்று உண்டு. இது ஏறக்குறைய அடிமை முறையைப்போன்றிருக்கிறது. பண்டைக்காலந்தொட்டு—முக்கியமாய்த்தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கு-இது கட்டாய விதியாயிருக்கிறது. இவர்களோடு நிற்கவில்லை. ஜனத்தொகையில் 100க்கு 80 அல்லது 90 விகிதம் உள்ள விவசாயிகள் எல்லாரும் இதற்கு உட்பட வேண்டியவர்களாயுமிருக்கின்றனர். அவர்கள் படும் பாட்டுக்குத்தகுந்தகூலி கிடைக்குமா? இல்லை. பெயரளவில் உள்ள கூலியே மிகக்குறைவு. அதுவும் இவர்கட்குக் கொடுக்கப்படுவதில்லை. பாடியாலா சமஸ்தானத்தில் மஹாராஜா வேட்டைக்குப் போகும்போது மக்களிடம் இந்தக் கட்டாய வேலை வாங்கப்படுவது வழக்கம். கால்வாய்களைஒழுங்குபடுத்தல், சமஸ்தானத் தோட்டங்களைச்சீர்திருத்தல் முதலான வேலைகளைக்கூட இப்படியே இலவசமாகச் செய்யச் சொல்லுவார்கள். சமஸ்தான உபயோகத்தின் பொருட்டு ஒட்டகங்களை இலவசமாக வாங்கிக்கொள்ளுவார்கள். குடியானவர்களின் வண்டி மாடுகளையும் ஓட்டிக் கொண்டு போய்விடுவார்கள். ஜனங்கள் பால், தயிர், நெய் வகையராக்களை விலையின்றி இனமாகக் கொடுக்க வேண்டும். சமஸ்தான உத்தியோகஸ்தர், பெரிய அதிகாரி, படை வீரர் முதலியோர் புறப்படும்போது இவை நிகழும். நிர்ப்பந்தித்து வேலை வாங்கும் முறையை அடியோடு ஒழிக்கவேண்டும் என்று எடுத்துக்காட்ட மஹா

ராஜாக்கள சர்வதேச சங்க மஹாநாடுகளுக்குப் பிரதிநிதிகளாய்ப் போவார்கள். பேசுவார்கள். ஆனால் அந்தப் பிரதிநிதிகளே தங்கள் சொந்தச் சமஸ்தானங்களில் கட்டாய வேலை வாங்குகிறார்கள்.”

மேற்கண்ட வாக்கியங்கள் பொறுப்பற்ற அநாமதேயம் சொன்னதில்லை—தாக்கர் பாபு வெளியிட்டவை. வண்ணான், அம்பட்டன், குயவன், கொல்லன், தச்சன், தையற்காரன் முதலிய எல்லாரும் சமஸ்தானத்திற்கும், சமஸ்தான உத்தியோகஸ்தர்கட்கும் கைம்மாறு கருதாமல் ஊழியம் புரிந்து தீரவேண்டும். பெண்கள் — யுவதிகள், கிழவிகள், சுமங்கலிகள், விதவைகள்—எல்லாரும் இட்ட வேலையைச் செய்தே தீரவேண்டும்.

எல்லா மக்களும் எல்லாச் சமயங்களிலும் வேலை செய்தாகவேண்டும். மூச்சு விட்டால் கொரடா வளாசல் அல்லது சிறைவாசம் தவறாது. வயோதிகத் தளர்ச்சியால் வேலை செய்ய முடியவில்லை என்று முறையிட்டுக் கொண்ட அறுபது வயதுக்கிழவி ஒருத்தியைப் பகிரங்கமாய் வீதியில் நிறுத்தித் தடியால் அடித்ததைத் தாம் கண்டதாகச் சூட்கர் எழுதியிருக்கிறார்.

மஹாராஜா வேட்டையாடச் செல்லும்போது ஜனங்கள் வெய்யிலிலும், மழையிலும் ‘காடுமிரட்டல்’ முதலிய காரியங்களைக் கட்டாயமாய்ச்செய்யவேண்டும். பெரிய சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் சமஸ்தானத்திற்கு வரும்போது, ரயில்வே மார்க்கத்தின் இரு புறங்களிலும் ஜனங்கள் வேகும் வெய்யிலிலும், நடுக்கும் குளிரிலும் காவல் காக்க வேண்டும்.

புதுக்கோட்டை சமஸ்தானக் கட்டாய வேலை முறையைப்பற்றி 1922ம் ஆண்டு வெளியான ரெகுலேஷன் கீழே காட்டப் படுகிறது. இதிலிருந்து இம்முறை எவ்வளவு தொல்லைகளைக் கொடுக்கும் என்பது தெளிவாகும்.

1. அம்பட்டர்கள் வழக்கப்படி கீழே காணும் வேலைகளைச் செய்யவேண்டும்:

(a) சமஸ்தானக் காரியாலயங்களில் விளக்குகளை ஏற்றல்

(b) கச்சேரிக் கட்டடங்கட்கு வெள்ளையடித்தல், தரை மெழுகுதல்

2. வாணியர் கச்சேரிக் காரியாலயங்கட்கு வேண்டிய கயிறு களைத் தயார் செய்து கொடுக்கவேண்டும். இதற்குக் கைம் மாறு வயிற்றுக்குச் சோறு போடுதல்.

7. மரமேறிகள் விறகு கொண்டுவந்து கொடுக்கவேண்டும்; கயிறு திரிக்க வேண்டும். சோறு போடப்படும்.

8. வெற்றிலை வியாபாரிகள் திரைகள், தட்டிகள் வழங்கவேண் டும். கைம்மாறு ஒன்றுமில்லை.

9. கசாப்புக் கடைக்காரர் கோவிலுக்கு வேண்டிய நகரா முத லியவைகட்குத் தோல்கள் இனாமாக வழங்கவேண்டும்.

10. பில் வகுப்பினர் செய்தி சொல்லுவோராக ஊழியம் செய்யவேண்டும். சோறு போடப்படும்.

12. குடியானவர்கள் சமஸ்தான காரியாலயச் சமையல்அறை கட்கு வறட்டி வழங்கவேண்டும். விலை கிடையாது.

16. சத்திரங்களிலேனும், பொது இடங்களிலேனும் இரவுக் காலங்களில் தங்குவோர் மாமூல்படி சுங்கம் கொடுக்க வேண்டும்.

21. சமஸ்தானத்திற்குரிய ஊழியம் புரிவோருக்குச் சாப்பாடு போடப்படும். சமஸ்தான உத்தியோகஸ்தர்களுக்கு ஊழி

யம் புரிந்தால் கூலி கொடுக்கப்படும். இந்த ஊழியங்களைப் பரம்பரையாகச் செய்கிறவர்களே செய்து வரவேண்டும்! ஊழியம் புரிய மறுத்தால் கடும் தண்டனை விதிக்கப்படும்.

சமஸ்தானக் குடிமக்கள் கட்டாய ஊழியத்தால் அவதிப்படும் கொடுமைகளைக் கேள்வியுற்ற தீனபந்து ஆண்ட்ரூஸ், உண்மை நிலைமைகளை நேரில் அறிய ரஜபுதன சமஸ்தானங்களுக்குப் போக முயன்றார். ஆனால் சமஸ்தானாதிபதிகள் உள்ளே வரக்கூடாது என்று தடை செய்துவிட்டனர். குட்டு வெளிப்பட்டுவிடும் என்ற பயம் போலும்!

பேகாரிமுறை, ஏறக்குறைய அடிமை முறையை ஒத்தது என்பது தாக்கர் பாபு அபிப்பிராயம். ஆனால் பக்கா அடிமை முறையும் சமஸ்தானங்களில் இல்லாமல் போகவில்லை. 1939-ம் ஆண்டில் வெளியான "டைம்ஸ் ஆப் இந்தியா" ஆண்டு மலரில் கண்ட சில உண்மைகளைப் பாருங்கள்.

"1921-ம் ஆண்டு ஜனகணிதிப்படி ரஜபுதன—மத்திய இந்தியச் சமஸ்தானங்களில் 1,60,755 பேர் அடிமைகள் இருந்தனர். இவர்கள் தரோகா, ஹூஜாரி, சேலா, கோலா முதலிய பெயர்களால் அழைக்கப்படுவார்கள். ஹிந்து—முஸ்லிம் என்ற வேற்றுமையின்றி, சமஸ்தானாதிபதிகள் எல்லாருடைய ஆதிக்கத்திலும் இவ்வடிமைகள் இருக்கிறார்கள். பிறந்தது முதல் இறக்கும்வரை இவர்கள் சமஸ்தானாதிபதிகளுக்கு ஊழியம் புரியவேண்டியவர்களே! ஏதோ வாழ்க்கையில் சொற்ப செளகரியங்களைச் செய்துகொள்ளுவதற்கேனும் இவர்கட்குப் பணம் சம்பாதிக்க வழியில்லை. இவர்களுடைய கலியாணங்களையும் கலியாண ரத்துகளையும் நிர்ணயிக்கும் பொறுப்பும் சமஸ்தானமே மேற்கொண்டிருக்கிறது. இவர்கள் வேறு

சமஸ்தானங்களுக்கு ஓடிப்போனாலும்கூடப் பலவந்தமாய்ப் பிடித்துக்கொண்டு வந்துவிடலாம்."

இப்படியே மற்றச் சமஸ்தானங்களிலும் சட்டங்கள் இருக்கின்றன. கோடா சமஸ்தானத்தில் அடிமைக்குலத்தில் பிறந்தவர் யாருக்கும் சமஸ்தான உத்தியோகத்தில் நுழைய வழியில்லை. உத்தியோகம் என்றால் பெரிய பெரிய பதவிகள் என்று எண்ணிவிடாதீர்கள். போலீஸ்காரனாகவோ, ராணுவச் சிப்பாயாகவோகூட வரமுடியாது. 1920ஆம் செப்டம்பர் 20உ கோடா சமஸ்தானாதிபதி ஒரு விபரீத உத்தரவு பிறப்பித்தார். அடிமைக் குலத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் உத்தியோகங்களில் இருந்தனர். அவர்கள் எல்லாரையும், அவ்வுத்தரவின் மூலம், ஒரே அடியாய் வேலைகளினின்று நீக்கிவிட்டார்.

பிக்கானிர் சமஸ்தானத்தில் 1921ஆம் ஜன கணிதிப்படி சகார், தரோகா வமிசங்களைச் சேர்ந்த அடிமைகள் 10,884 பேர் இருந்தனர். இந்தச் சமஸ்தானாதிபதி சர்வதேச சங்கப் பிரதிநிதி. வர்ஸேல்ஸ் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட கருணைவள்ளல்!

இந்த அடிமைகள் அநுபவிக்கும் கஷ்ட நஷ்டங்களைப் பற்றி ராமநாராயண சௌதரி கீழ்வருமாறு வருணித்தார்:

"வெகுமதியாகவும், கன்னிகாதானமாகவும் ஆண், பெண், குழந்தைகள் அடங்கலும் கைம்மாறப்படுகின்றனர். அவர்களிடம் இழிவாகவும் கொடுமையாகவும் வேலைகள் வாங்கப்படுகின்றன. உண்டு மிஞ்சிய எச்சிலையும், கட்டிக் கழித்த கந்தைகளையும் அவர்கட்குக் கொடுக்கிறார்கள். ....அவர்களுடைய கலியாணங்களும், கலியாணரத்துகளும் சமஸ்தானாதிபதிகளின் சௌகரியங்களை ஒட்

டியே நிர்ணயிக்கப்படுகின்றன. இந்தத் துர்ப்பாக்கியர்களைத் தண்டிப்பதும், அவர்களை மானபங்கம் செய்வதும் சர்வசாதாரணமாகும். எங்கேனும் தப்பித் தலைமறைத்துக் கொள்ளலாம் என்றால் அதுவும் எளிதில் முடியக்கூடிய காரியம் அன்று. இந்தப் பேகாரி அடிமைத்தனம் அநாகரிகமானது; காட்டுமிராண்டித்தனமானது; இதை ஒழித்தாகவேண்டும். ஆனால் நாகரிக பிரிட்டிஷ் அரசாங்கம் இதைப்பற்றிக் கொஞ்சங்கூடக் கவனிப்பதில்லை. எந்தச் சுதேச சமஸ்தானத்திலாவது வெள்ளையருக்கு இத்தகைய அவமானம் நேர்ந்தால் பிரிட்டிஷ் சர்க்கார் இப்படி வாயை மூடிக்கொண்டிருக்குமா? பிரிட்டிஷார் நோக்கத்தில் கறுப்புக்கும் வெள்ளைக்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வேற்றுமை உண்டு. என்ன செய்வது!

க ல் வி

கல்வி விஷயத்தில் மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டால் பிரிட்டிஷ் இந்தியா மிகவும் பிற்போக்கான நிலைமையில் இருக்கிறது. இனி, சுதேச சமஸ்தானங்களைப்பற்றிக் கேட்கவும் வேண்டுமோ?

இந்தியா முழுவதிலும் (1921-ம் ஆண்டு ஜன கணிதியின்படி) எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் தொகை 100-க்கு 8 பேர் மாத்திரமே. சுதேச சமஸ்தானங்களில் 100-க்கு 4 பேர்! காரணம்? கல்வி வசதிக் குறைவு என்பதைத் தவிர வேறு என்ன கூறுவது? இதுபற்றிச் சூட்கர் என்ன சொல்லுகிறார் என்று பாருங்கள்: "சமஸ்தானங்களில் கல்வி வசதி சூனியம். கல்வித்திட்டமும் மிகவும் குறுகியது. வேண்டுமென்றே இப்படிச் செய்யப்பட்டிருக்கிறது எனலாம். மொத்தம் 563 சமஸ்தானங்களில் இருபது சமஸ்தானங்கள் மாத்திரமே ஏதோ குறிப்பிடத்தக்க அளவு கல்வி வசதிக்கு ஏற்பாடு செய்திருக்கின்றன." 563 எங்கே? 20 எங்கே? கடலில் பெருங்காயம் கரைத்த கதைதான்.

பாடியாலா மஹாராஜா நரேந்திர மண்டலியின் தலைவர். இவர் இந்தியாவின் எதிர்கால அரசியல் முறையைப்பற்றி அடிக்கடி ஏதோ அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டே இருப்பார். இந்த மஹாநுபாவரின் சமஸ்தானத்தில் கல்வி நிலைமை எப்படி என்று பாருங்கள். இந்தச் சமஸ்தானத்தில் சராசரி 15 கிராமங்களுக்கு ஒரு

பாடசாலையே இருக்கிறது. மொத்த ஜனத்தொகையில் 100-க்கு ஒருவன் மாத்திரமே கல்விகற்று வருகிறான்! நரேந்திர மண்டலியின் தலைவர் சமஸ்தானத்திலேயே கல்வி வளர்ச்சி எவ்வளவு அழகு என்று பார்த்தீர்களா?

ராமநாராயண சௌதரி "மாடர்ன் ரிவியூ" மாசிகையில் வெளியிட்ட தமது கட்டுரையில் எடுத்துக்காட்டிய புள்ளி விவரங்கள் இவை:

சமஸ்தானம்	ஒவ்வொரு பாடசாலை		
	எத்தனை பேருக்கு	எத்தனை சதுர மைலுக்கு	எத்தனை கிராமங்கட்கு
ஆல்வார்	7,011	31	17
ஜோத்பூர்	12,166	230	27
பிக்கானீர்	10,307	364	33

சமஸ்தானம்	சமஸ்தானாதிபதி சொந்தச் செலவு 100-க்கு	கல்வி இலாகாச் செலவு 100-க்கு
	விகிதம்	விகிதம்
பிக்கானீர்	11	1½
ஜோத்பூர்	16	3
ஆல்வார்	50	1

மேற்காட்டிய விவரங்களைக் கூர்ந்து கவனிப்பவர்கட்கு வியாக்கியானமோ விரிவுரையோ வேண்டாம். கைப் புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா?

கல்வி வசதி இவ்வளவு கீழ் நிலையிலிருந்தாலும் ஜம்பப் பேச்சுக்களுக்கு மாத்திரம் குறைவில்லை. காலஞ் சென்ற நவநகர் ஜாம் ஸாஹெப் ஒரு சமயம் புரொபசர் ரெயிலியுடன் சம்பாஷித்துக்கொண்டிருந்தபோது "எமது சமஸ்தானத்தில் பள்ளிக்கூடமில்லாத கிராமமே இல்லை" என்றார். இச்செய்தியை அறிந்த "மான்செஸ்டர் கார்டியன்" பத்திரிகை "ரான்ஜி"யைப் பாராட்டி வாழ்த்தியது. உண்மை என்ன? நவநகர் சமஸ்தானத்தில் உள்ள 687 கிராமங்களில் கேவலம் 184 கிராமங்களில் மாத்திரமே பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. இவைகளிலும் பல பெயரளவில் மாத்திரமே இருக்கின்றன.

சமஸ்தானங்களில் உள்ள கல்வி வசதிகளைப்பற்றிச் ரூட்கர் வெகு அழகாக எழுதியிருக்கிறார்:

"மஹாராஜாக்கள் கல்வி இலாகாவை வெளிப்பகட்டின் பொருட்டுக் கழுத்தில் தொங்கப்போட்டுக்கொள்ளும் பெரும் பளுவாகவே மதிக்கிறார்கள். கல்வி என்றால் அவர்கட்கு அணுவளவும் சிரத்தை கிடையாது. ஏன்? இக் கல்வி அவர்களுடைய கொடுமைகளை எதிர்க்கும் கிளர்ச்சிக் காரர்களை உற்பத்தி செய்துவிடுமே!

"சரி, கல்விச் செலவு எவ்வளவு? 100-க்கு 2 விகிதமாவது செலவு செய்கிறார்களா? இல்லை.

"அவர்கட்கு எத்தனையோ மோட்டார்கள் வேண்டும். எத்தனையோ அரண்மனைகள் வேண்டும். சமஸ்தானத்

தலைமை நகரில் மாத்திரமன்றி, ஸிம்லா முதலிய குளிர்ச்சி யான இடங்களில்கூட பெரிய மாளிகைகள் வேண்டும்.

"சில நாளைக்குமுன் ஆள்வார் மஹாராஜா அபூமலைமீது ஒரு பெரிய மாளிகை கட்டினார். இதற்கு 3,50,000 பவுன் செலவு செய்தார். இம்மாளிகை-ஒரு அரசியல் ஏஜண்டு வருணித்ததுபோல்—அராபிக் கதைகளில் வரும் தேஜோமய மான எழில் மாளிகைகளை நினைவூட்டிக்கொண்டிருக்கிறது. வைஸிராய், கவர்னர், அரசியல் ஏஜண்டு முதலிய பிரமுகர் கள் யாரேனும் சமஸ்தானத்தைக் காணவந்தால் புதிதாக வெள்ளையடிக்கப்பட்டதும், புத்தம் புதிய அலங்காரங் களுடன் விளங்குவதுமான ஒரு பள்ளிக்கூடம் காட்டப் படும். மற்றும் எத்தனையோ பள்ளிக்கூடங்கள் காகிதத் தில் ஒரு நிமிஷத்தில் சிருஷ்டிக்கப்பட்டுவிடும். வந்த விருந் தாளி, மஹாராஜா மக்கள் முன்னேற்றத்திற்காக 'அரும் பாடு' படுவதைப்பற்றி வானளாவப் புகழ்ந்து பாராட்டு வார். சமஸ்தானத்தால் வெகு சிறப்பாக உபசரிக்கப்படும் பத்திரிகைப் பிரதிநிதிகள் இந்தப் பாராட்டுச் செய்திகளைத் தந்திகள் மூலம் பத்துத்திக்கிலும் பறக்கச் செய்துவிடுவார் கள்! மறுநாளே பத்திரிகைகளில் கொட்டையெழுத்துத் தலைப்புக்களில் "இன்ன மஹாராஜா கல்விக்காக இவ்வளவு நன்கொடை வழங்கினார்", "இன்ன சமஸ்தானத்தில் கல்வி வளர்ச்சி" என்று வெளியாகிவிடும். இந்தக் கரியகொட்டை யெழுத்துத் தலைப்புகள் உண்மையை மறைத்துக் களங் கப்படுத்திக்கொண்டிருக்கின்றன என்ற ரகசியம் யாருக்குத் தெரியும்? நிலைமையெல்லாம் நன்கு தெரிந்த ஒருவர் குற்ற சுற்றங்களை எடுத்துக்கூறத்தொடங்கினால், 'அவன் அயோக்

கியன்—போக்கிரி' என்ற ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாக வேண்டும். 'அவனைப் பிடித்துச் சிறையில் போடவேண்டும்; தேசப்பிரஷ்டம் செய்யவேண்டும்' என்று சினந்து கூறு வார்கள்.

"சுதேச சமஸ்தானங்களில் குற்றநற்ற விமர்சனங் களுக்கு இடமே இல்லை. இப்படிச் செய்தல் ராஜத்துரோ கக் குற்றமாகக் கருதப்படும். பிரிட்டிஷ் இந்தியாவிலும் இதைப் பெரிய குற்றமாகப் பாவித்து ஐந்தாண்டுகள்வரை சிறைத் தண்டனை விதிக்கலாம். கல்வி விஷயத்தில் சுதேச சமஸ்தானங்கள் எல்லாம் சஹாரா பாலைவனத்தை ஒக் கும் எனலாம். ஆனால் இந்தப் பாலைவனத்தில் சில நீர் நிலைகளும் இல்லாமல் போகவில்லை. அவை: மைசூர், திரு வாங்கூர், கொச்சி முதலியன."

வைத்திய உதவி

சமஸ்தானங்களில் வைத்திய உதவி எப்படி இருக்கும் என்று கேட்கவேண்டியதே இல்லை. கல்வி உதவி எப்படியோ அப்படியேதான் வைத்திய உதவியும் இருக்கும் என்று எளிதில் ஊகித்துக்கொள்ளலாம். எனினும், அந்த லக்ஷணத்தையும் சுருக்கமாக எடுத்துக்காட்டுவது மிகையாகாது.

முதலில் ராமநாராயண சௌதரி "மாடர்ன் ரிவியூ"வில் குறிப்பிட்ட புள்ளி விவரங்களைக் கவனியுங்கள்:

சமஸ்தானம்	ஒரு வைத்தியசாலை		
	எத்தனை பேருக்கு?	எத்தனை சதுர மைலுக்கு?	எத்தனை கிராமங்கட்கு?
ஆள்வார்	70,115	314	117
ஜோத்பூர்	75,000	1,400	81
பிக்கானிர்	47,120	1,665	154

சமஸ்தானம்	சமஸ்தானதிபதியின் சொந்தச் செலவு 100-க்கு	வைத்திய உதவிக்குரிய செலவு 100-க்கு
ஆள்வார்	50	·3
ஜோத்பூர்	16	2·25
பிக்கானிர்	11	1·4

ராஜபுதன சமஸ்தானங்களைப் போலவேதான் ஏறக் குறைய மற்றச் சமஸ்தானங்களும் இருக்கின்றன. சமஸ் தானாதிபதியின் சொந்தச் செலவில் பத்தில் ஒரு பங்கே னும் மக்களுக்கு மருத்துவ உதவி அளிக்கவும், அவர் களை மரணத்தினின்று காக்கவும் ஒதுக்கிவைக்கப்படுவ தில்லை. வரவு செலவுத் திட்டத்தில் வைத்திய உதவிக் கென ஒதுக்கும் சொற்பத் தொகையேனும் மக்களுக் காகச் செலவு செய்யப்படுமா? அதுவும் இல்லை.

27-8-33-ல் வெளியான "பிரின்ஸிலீ இந்தியா" பத் திரிகை ஜாப்வா சமஸ்தானத்தைப்பற்றிக் கூறியதாவது:

"சமஸ்தான வைத்தியசாலைகளில் மருந்துகளுக்கா கும் செலவைக் குறைத்துவிட்டனர். நோயாளர் மருந்து வேண்டும் என்று கூச்சல் கிளப்பினர். அவர்கட்கு வரு ணத்தண்ணீர் ஊற்றிக்கொடுத்தார்கள். முன்னர் ஜாப்வா சமஸ்தானம் இரண்டாயிரம் ரூபாய் விலையுள்ள மருந்து களை வரவழைத்தது. இப்பொழுது ரூ. 1750 பெறுமான மருந்துகளையே வரவழைக்கின்றது. இவற்றுள் சிறந்த மருந்துகளையெல்லாம் மஹாராஜாவே எடுத்துக்கொள்ளு வார். நோயாளர் தொகை பெருகுகின்றது. மருந்து களோ குறைகின்றன."

மேலும், 20-8-33-ல் வெளியான ஷை பத்திரிகை குஷல்கர் சமஸ்தானத்தைப் பற்றிக் கூறியதாவது:

"சமஸ்தானத்தில் ஒரு வைத்தியசாலை மாத்திரமே இருக்கின்றது. அதுவும் பெயரளவில்தான்! ஆண்டு 1-க்கு ஆயிரத்திருநூறு அல்லது ஆயிரத்தைந்நூறு ரூபாய்க்கு மருந்துகள் வரவழைக்கப்படுகின்றன. நோயாளிகளுக்கே இம்மருந்துகள் போதா. இங்கிலையில் சிறந்த மருந்துகளை— மொத்தத்தில் பாதி விலையுள்ளவற்றை—சமஸ்தானாதிபதி

யும், அவருடைய குடும்பத்தாரும் உபயோகித்துக் கொள்ளுகிறார்கள். இனி, எஞ்சியுள்ள மருந்துகளைக் கொண்டே முப்பத்தையாயிரம் மக்கள் திருப்தி அடையவேண்டும். வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டரையும், கம்பவுண்டர்களையும் வருமாறு நினைத்தபோதெல்லாம் மஹாராஜாவோ, அவருடைய குடும்பத்தாரோ அழைப்பு அனுப்பிக்கொண்டே இருப்பார்கள். இதனால் மக்கள் நாளெல்லாம் காத்திருந்தும் சிகிச்சை பெறாமலே வீடுகளை நோக்கிப் போகவேண்டியிருக்கிறது."

இதைவிடக் கொடுமைகள் மற்றும் சில சமஸ்தானங்களில் நடக்கின்றன. சமஸ்தானாதிபதியின் வளர்ப்பு நாய்களுக்காகும் வைத்தியச் செலவு முழுவதையும் மிருக வைத்திய இலாகாக் கணக்கில் எழுதுவார்கள். இன்னும் சில சமஸ்தானங்களில் மஹாராஜாக்களின் வளர்ப்பு நாய்களின் பொருட்டே மிருக வைத்திய இலாகாக்கள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. என்ன அநியாயம்!

பல சமஸ்தானங்களில் வைத்தியசாலைகள் இல்லை. எனினும், கள், சாராயம், கஞ்சா, அபினி முதலிய லாகிரி வஸ்துக்கள் விற்கும் கடைகட்குக் குறைவே இல்லை—ஏராளமாக இருக்கின்றன. இதற்கு உதாரணம் நவநகர் சமஸ்தானமே. இதில் வைத்தியசாலைகள் 16 மாத்திரமே! சாராயக்கடைகள் 29. அபினிக்கடைகள் 18.

கிராமங்களுக்குச் சமீபத்தில் வைத்திய உதவி சுத்தமாய் இல்லை. நோயாளிகள்—மிகவும் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கும் நோயாளிகள்—உயிர்போகும் நிலைமையில் உள்ள நோயாளிகள்—நல்ல பாதைகள் இன்மையால் காட்டுப்பாதைகளில் மாட்டுவண்டிகளில் ஏறி ஆஸ்பத்திரிகளுக்குப் போகவேண்டும். இந்தக் கஷ்டத்தை உத்

தேசித்து 100-க்கு 90 பேர் போகாமலே இருந்துவிடுவார்கள். முரட்டு வைத்தியர்கள் நோயாளிகளை ஏமாற்றிப் பணத்தைக் கொள்ளையடிப்பார்கள். சில இடங்களில் ஆஸ்பத்திரிகள் பக்கத்திலிருந்தாலும் டாக்டர்களின் தரிசனம் கிடைப்பது அபூர்வம்! சமஸ்தானதிபதியின் குடும்ப ஊழியத்திலேயே அந்த டாக்டர் மூழ்கிக்கிடப்பார். பெண்கள்—குழந்தைகள் சம்ரக்ஷணலயங்கள் 100-க்கு 5 சமஸ்தானங்களில்கூடச் சரியாக இல்லை. பயிற்சி பெற்ற தாதிமாரைக் காண்பது அருமை. இதனால் பிள்ளைப்பேறுகளில் பெருவாரியான பெண்கள் இறந்துவிடுவதும், கருவிலேயே குழந்தைகள் இறந்து பிறப்பதும் சகஜமாயிருக்கின்றன. எப்படியோ அந்தக் கண்டங்களினின்று தப்பிப்பிழைத்த பெண்கள் உடல்நலங்குன்றியவர்களாய் அல்லல் பட்டுக்கொண்டிருக்கின்றனர். உல்லாஸ லீலாவிநோதங்களில் மூழ்கிக்கிடக்கும் சமஸ்தானதிபதிகளின் காதுகளில் ஏழைக்குடிகளின் குறைகளும் முறைகளும் ஏறுமா?

கிராமவாசிகள்—ஜனத்தொகையில் முக்கால் பங்கினரான கிராமவாசிகள்—சமஸ்தான வருமானத்தில் 100-க்கு 80 விகிதம் கொட்டிக்கொடுக்கும் கிராமவாசிகள்—எள்ளளவேனும் வைத்திய உதவி பெற முடியாதவர்களாயிருக்கிறார்கள். எனினும், ஆஸ்பத்திரிகள், பெண்—குழந்தைகள் சம்ரக்ஷணலயங்கள் முதலியவற்றின் திறப்பு விழாக்களும், ஆண்டு விழாக்களும், நடைபெற்றுக்கொண்டிருப்பதாகவே நாம் கேள்விப்பட்டுக்கொண்டிருக்கின்றோம். ஆனால் சட்டசபைகளைப்போலவே இவற்றின் லக்ஷணமும் கேவலம் காகித அளவிலேதான்!

பேச்சுரிமையும் எழுத்துரிமையும்

ஸ்ரீ தேச சமஸ்தானங்களில் ஆம் என்றால் ஆறுமாதம் உம் என்றால் ஒரு வருஷம் சிறைத் தண்டனைகள் விதிக்கும் கண்மூடி தர்பார் தாண்டவ மாடிக் கொண்டிருக்கிறது. இவ் வுண்மைகளை மைசூர், திருவனந்தபுரம், ஹைதராபாத், ராஜ்கோட், ஜெய்ப்பூர், லிம்டி முதலிய சமஸ்தானங்களின் அடக்குமுறைகள் தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டிவிட்டன. மக்களின் குறைகளை வெளியிடும் பத்திரிகைகள் தலையெடுக்க முடியாதவகையில் அடக்கிவைக்கப்படுகின்றன. திருவனந்தபுரத்தில் ஐம்பத்தாறு ஆண்டுகளாக நடைபெற்றுவந்த ஒரு பிரபல பத்திரிகையுடன் மற்றப் பத்திரிகைகளும் அடக்குமுறைப் பாணத்திற்குக் குறியாகிவிட்டன. ஹைதராபாத் நிலைமையும் அப்படியே! ஹைதராபாத் சமஸ்தானத்தில் பத்திரிகைத் தடைமுறையைப் பற்றி ஒரு கதை உண்டு. அதாவது: அங்கே மொத்தம் நூறு பத்திரிகைகளின்மீது எப்பொழுதும் தடைஇருப்பது வழக்கமாம். நூற்றொன்றாவது பத்திரிகையைப் பகிஷ்கரிக்கும் போது அந்த வரிசையில் முதல் பத்திரிகையின் தடை நீக்கப்பட்டு விடுமாம்! இவ்விதம் எப்பொழுதும் நூற்றுக்குக் குறைவு நேராமல் சமஸ்தானம் பார்த்துக் கொள்ளுமாம். இந்தக் கதை உண்மையோ பொய்யோ தெரியவில்லை. ஆனால், மேற்படி சமஸ்தானத்தில் பேச்சுரிமையும் எழுத்துரிமையும் ஆபத்தான நிலைமையில் இருப்பது வெட்ட

வெளிச்சம். மற்ற நாடுகளில் இயற்றப்படும் அவசரக்கால அடக்கு முறைச் சட்டங்கள் எல்லாம் ஹைதராபாத் முதலிய சமஸ்தானங்களில் சாசுவதச் சட்டங்களாக நிலைபெற்றிருக்கின்றன. கல்வி, சமயம் பற்றிய கூட்டங்களைக் கூடத் தடை செய்தமைக்கு எத்தனையோ உதாரணங்களை எடுத்துக் காட்டலாம். வாசகசாலை ஆண்டு விழாக்கள், வர்த்தக சபைக் கூட்டங்கள், சமூகச் சீர்திருத்த மஹாநாடுகள் முதலியவற்றை நடத்தவும் சமஸ்தானம் அநுமதி தரவில்லை.

மற்றச் சமஸ்தானங்களின் நிலைமையும் இப்படியேதான் இருக்கின்றது. எங்கும் மக்களுக்குப் பேச்சுரிமையும் எழுத்துரிமையும் இல்லை. ஆள்வார் சமஸ்தானத்தில் அரசியல் பிரசங்கம் செய்தால் ஐந்தாண்டுகள் வரை கடுங்காவலும், இரண்டாயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கலாம். சமஸ்தானத்தை விட்டு வெளியேற்றும் தண்டனையும் உண்டு. ஏறக்குறைய ஜோத்பூர், ஜாம்நகர், பிக்கானிர் முதலிய சமஸ்தானங்களும் இம்முறைகளையே கையாண்டு வருகின்றன.

பேச்சுரிமையும், எழுத்துரிமையும் சூனியமாயிருப்பதால் சமஸ்தான மக்கள், தங்கள் கஷ்ட நஷ்டங்களை உலகத்தாருக்கு எடுத்துக்காட்ட முடியாதவர்களா யிருக்கிறார்கள். பிரிட்டிஷ் இந்தியாவில் கூட்டங்களை நடத்த முடியாதா என்று கேட்கலாம். ஒருவாறு அப்படியேதான் சமஸ்தானப் பிரஜைகளின் கூட்டங்கள் நடத்தப்பட்டுவருகின்றன. எனினும் இங்கும் போதிய பாதுகாப்பு இல்லை. ஐந்தாண்டுகள் வரை தண்டனை விதிக்கச் சமஸ்தானாதிபதிகளின் பாதுகாப்புச் சட்டம் (**Princes' Protec-**

tion Act) இங்கும் தயாராகக் காத்துக் கொண்டிருக்கிறது. பிரிட்டிஷ் இந்தியாவிலும் சமஸ்தானாதிபதிகளின் ஆணை அமல் செலுத்திக் கொண்டிருக்கும்போது சமஸ்தானங்களிலே உள்ள நிலைமைகளைப்பற்றிக் கேட்கவும் வேண்டுமோ ?

கொண்டால் சமஸ்தானத்தில் "திகத்தியவாட்" என்ற ஒரே ஒரு வாரப் பத்திரிகை இருந்தது. அரசியலில் தலையிட்டது என்ற காரணத்தால் 1924-ம் ஆண்டில் சமஸ்தானம் அதை அடக்கிவிட்டது. அவ்வளவுதான்! அன்று முதல் இன்று வரை அச் சமஸ்தானத்தில் மாதிரிக்கேனும் ஒரு பத்திரிகை தலைகாட்ட வில்லை. பிக்கானிரிலும் இப்படியே! அங்கே "புஷ்கரேந்து" என்ற பெயரால் ஒரு மாத சஞ்சிகை இருந்தது. அதன் ஆசிரியர் சமஸ்தானத்தின் கடின விதிகளைச் சமாளிக்கமாட்டாமல் அதைக் கட்டி வைத்து விட்டார். நவநகர் சமஸ்தான யோக்கியதையைக் கவனியுங்கள். இங்கே "ஸோஷல் ஸர்வண்ட்" என்ற பெயரால் ஒரு மாத வெளியீடு உண்டு. அப் பத்திரிகையை வெளியிடு முன் அதன் ஆசிரியர் கீழ்க்காணும் நிபந்தனையில் கையெழுத்திட வேண்டியதாயிற்று. "இதன் ஆசிரியர் அரசியல் விவகாரங்களில் தலையிடக்கூடாது. மக்களிடையே துவேஷம் உண்டாக்கும் விஷயங்களை வெளியிடக் கூடாது. இதற்கு மாறாக நடந்தால் மஹாராஜாவுக்கு ஐந்நூறு ரூபாய் அபராதம் செலுத்த வேண்டும்." இந்த நிபந்தனை மீறப்பட்டதா, இல்லையா என்று நிர்ணயிப்பது நீதிமன்றம் என்று எண்ணி விடாதீர்கள்! மஹாராஜாவின் அரசியல் காரியதரிசிதான் இந்தத் தீர்ப்பு அளிக்க வேண்டியவர். அவருடைய தீர்ப்புக்கு மேல் அப்பீலே கிடையாது. இவ்வளவு கடிய நிபந்தனைகட்கு உட்பட்டு எப்படிப் பத்திரிகை

களை நடத்த முடியும்? "ராமராஜ்யம்" என்று வருணிக்கப் படும், மைசூரில்கூடப் பத்திரிகைத் தடைகள் பிறந்து கொண்டே இருக்கின்றன. சமஸ்தானங்களில்தான் பத்திரி கைகட்கு இவ்வளவு நெருக்கடிகள் இருக்கின்றன; பிரிட் டிஷ் இந்தியாவிலிருந்து சமஸ்தானங்களுக்குள் போகும் பத்திரிகைகளின் கதி என்ன என்று கேட்கலாம். அவற் றின் கதியும் அதோ கதிதான். எந்தப் பத்திரிகையேனும் சமஸ்தான நிர்வாகத்தைக் கொஞ்சம் விமர்சனம் செய்யத் தொடங்கினல் உடனே அது தடை செய்யப்பட்டுவிடும். எத்தனையோ பத்திரிகைகட்கு இக்கதி நேரிட்டிருக்கிறது. ஒரு சமயம், ஜெயப்பூர் சமஸ்தானம் "லீடர்" "பம்பாய் கிரானிகில்" "பிரதாப்" "கர்மவீர்" "மாதுரி" "சரசுவதி" ஆகிய பத்திரிகைகளை ஏககாலத்தில் தடைசெய்து விட்டது. கொண்டால் சமஸ்தானத்தில் இன்றைக்கும் 15 பத்திரிகை கள் மீது தடை உண்டு.

தீர்ப்பு

குற்றம் செய்பவர்களைக் கோர்ட்டுக்கு இழுப்பது வழக்கம். ஆனால் மஹாராஜாக்களை—அவர்கள் எவ்வளவு பெரிய குற்றஞ் செய்தாலும்—கோர்ட்டுக்கு இழுக்க வழியில்லை. ஏன்? "அரசன் சட்டத்திற்கு மேற்பட்டவன்" **(The King is above Law)** அல்லவா? அரசன் கோர்ட்டுச் சட்டத்திற்கு அப்பாற்பட்டவன் என்றே வைத்துக்கொள்ளுவோம். ஆனால் பொதுஜன அபிப்பிராயமாகிய கோர்ட்டுத் தீர்ப்புகளினின்று தப்பித்துக்கொள்ள எந்த அரசனாலும் முடியாது. இப்பொழுது நாம் சமஸ்தானாதிபதிகளைப் பொதுஜன அபிப்பிராயமாகிய கோர்ட்டில் கொண்டுவந்து நிறுத்துவோம். சில நீதிபதிகள் அளித்த தீர்ப்புக்களைக் கவனிப்போம். மிஸ். மேயோவின் சாக்கடைப் புத்தகத்திற்கு "ஸாவெல் ஜிமாண்ட்" என்னும் புனைபெயர்பூண்டு, சரியான பதில் கொடுத்த அமெரிக்கர் முதல் நீதிபதி:

"ஏதோ சில சமஸ்தானங்களில் மாத்திரமே நிர்வாகம் கொஞ்சம் ஒழுங்காக நடக்கிறது எனலாம். மற்றவற்றில் எல்லாம் எதேச்சாதிகாரமே.

"பல மஹாராஜாக்கள் காலத்திற்கேற்ற மாறுதல்களை ஒப்புக்கொள்ளுகிறார்கள் இல்லை. அவர்கள் யானைகளையும், சிங்கங்களையும் வேட்டை யாடுவார்கள்; ஆடம்பர வைபவங்களுடன் வாழ்க்கை நடத்துவார்கள்; கண்ணுக்கினிய

காட்சிகட்கு ஏற்பாடு செய்வார்கள் ; போகமாதர்களுடன் காமக் களியாடல்களில் மூழ்கிக் கிடப்பார்கள்; ஜரிகைப் பீதாம்பரங்களைத் தரிப்பார்கள்; ஸலாங்களாலும், வாய் திரும்பாத விருதுகளாலும் மனம் பூரிப்பார்கள்."

'நிர்வாணப் பக்கிர்' என்னும் நூலாசிரியரும் பார்லிமெண்ட் அங்கத்தினருமான ராபர்ட் பெர்னீஸ் இரண்டாவது நீதிபதி :

"சமஸ்தானாதிபதிகளில் அநேகம்பேர் வருமானத்தில் பெரும் பகுதியைச் சுயநலத்தின் பொருட்டே செலவு செய்வர். இங்கிலாந்து இன்றைக்கும் ஜனநாயக தர்மத்தையும், சுதந்தர வேட்கையையும் கைவிடவில்லை. இத்தகைய நாட்டின் விருப்பமான கொள்கைகள் எல்லாவற்றிற்கும் நேர்மாறாக நடக்கின்றனர் மஹாராஜாக்கள். அவர்களிடம் குடிகளைக் கசக்கிப்பிழிவதும், அகாரணமாய் நிர்ப்பந்திப்பதுமான எதேச்சாதிகாரங்கள் இருக்கின்றன."

மேற்கண்ட அறிஞரே கராச்சியினின்று இங்கிலாந்திலிருந்த ஒரு நண்பருக்கு எழுதிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்:

"இங்கிலாந்தில் சமஸ்தானாதிபதிகளின் விசேஷ விருந்துகளில் கலந்து மகிழ்வோர், அவர்களைப்பற்றிய விவரங்களை அறிந்துகொள்ளுவது அவசியம். ....சமஸ்தானாதிபதி லண்டனில் 1500 பவுன்கள் செலவு செய்து ஒரு விருந்து நடத்தினார். இந்த விருந்துச் செலவுக்குப் பணம் எங்கிருந்து வந்தது என்று சொல்லட்டுமா? அவருடைய சமஸ்தானக் குடியானவர்களின் ரத்த-மாமிசங்களைப் பிழிந்து எடுத்ததால் வந்தது அந்தப் பணம்! ஆடையாபரண அலங்காரப் பிரியர்களான அவர்களுடைய

மோட்டார்கார்களுக்கும், வைஸிராயின் பொருட்டு அவர்கள் ஏற்பாடு செய்யும் வேட்டை விநோதங்களுக்கும், ஐரோப்பிய நாடுகளின் தலைநகரங்களில் அவர்கள் நடத்தும் பெரிய பெரிய விருந்துகளுக்கும் செலவாகும் பெருந்தொகைகள், சமஸ்தானங்களில் பெண்டு பிள்ளைகளுக்கு வயிறு நிறையச் சோறுகூடப் போடமுடியாத ஏழைமக்களிடம் வசூல் செய்யப்படுகின்றன !

"இவர்களில் சிலர், ஐரோப்பாவில் பல நூற்றாண்டுகளுக்கு முன் அரசாண்ட எதேச்சாதிகாரிகளை மறக்கச் செய்வார்கள்."

மாஜி இந்தியச் சட்டசபை அங்கத்தினர் சி. எஸ். ரங்கையர் மூன்றாவது நீதியதி:

"தனிப்பட்ட ஒரு நபரின் ஆட்சி—அவர் மிகவும் திறமை வாய்ந்தவரா யிருந்தாலும்—நன்றாக இருக்காது. அந்த ஒரு நபரும் காமுகராகவோ, குடிகாரராகவோ, வேடிக்கை விநோதராகவோ இருந்துவிட்டால் சொல்லவும் வேண்டுமோ ? சமஸ்தான மக்களிடம் வாக்குரிமை (Vote) எடுத்தால், அவர்கள் சமஸ்தானங்களைப் பிரிட்டிஷ் இந்தியாவுடன் சேர்த்தல் மகிழ்ச்சிக்குரியதாகும் என்றே தெரிவிப்பார்கள். பிரிட்டிஷ் சர்க்கார் தயவு காட்டுவதாலேதான் இன்று சமஸ்தானங்கள் என்பவை இருக்கின்றன.

"இந்திய சமஸ்தானங்களில் உள்ள எதேச்சாதிகாரம், மோசம், கொடுமை, அட்டூழியங்களில் நூற்றில் ஒரு பங்கேனும் பிரிட்டிஷ் இந்தியாவில் இருந்தால், பிரிட்டிஷ் ராஜ்யம் நெடுநாளைக்குமுன்பே அழிந்துபோயிருக்கும் !"

"ஆரிய" என்னும் நூலாசிரியர் கிராஹம் எஸ். ஹட்சின்ஸன் நான்காவது நீதிபதி :

"சமஸ்தானப் பிரஜைகள், மஹாராஜாக்களின் எதேச்சாதிகாரச் செயல்களாலும், பொறுக்க முடியாத வரிப்பளுவாலும் மிகுந்த கஷ்ட நஷ்டங்களை அநுபவித்து வருகிறார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. இத்தகைய நிலைமைகளை எந்த அரசாங்கமும்—அது தன் கடமையையும் பொறுப்பையும் உணர்ந்திருந்தால்—ஒரு நிமிஷமாவது சகித்துக் கொண்டிருக்காது.

"சமஷ்டி விஷயத்தில் சமஸ்தானாதிபதிகளின் ஆதரவைப்பெறுவதற்காக, அவர்களுடைய எல்லையற்ற எதேச்சாதிகாரத்தையும் கொடுமைகளையும் பார்த்துக்கொண்டிருப்பதானால், அந்த ஆதரவையே நாடாமல் இருப்பது நலம். இந்திய அரசாங்கம் உறுதியாய் நிலைத்திருப்பதற்காக, இச்சமஸ்தானாபதிக ளிருக்கவேண்டுமானால், அந்த ஆசையை விட்டுவிடவேண்டியதே புத்திசாலித்தனம்.

"ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்பதுபோல் ஒரே ஒரு சமஸ்தானத்தின் நிலைமையை மாத்திரம் இங்கே சுட்டிக்காட்ட உத்தேசம். இந்தச் சமஸ்தானத்தின் சென்ற ஆண்டின் நிர்வாக அறிக்கை (இது 1930—31--ஆண்டுக்குரியது) அவ்வாண்டில் ரூ. 49 லக்ஷம் ஆதாயம் கிடைத்ததாகத் தெரிவிக்கிறது. இத் தொகையில் சமஸ்தான நிர்வாகத்திற்காகச் செலவானது ஏறக்குறைய 11,25,000 ரூபாய்கள். இந்தச் செலவு கல்வி இலாகாவுக்கும், வைத்திய இலாகாவுக்கும் ஒதுக்கப்பட்டதற்கு மேல் மும்மடங்கு அதிகம். சமஸ்தானாபதியின் சுக போக வாழ்வுக்கு ஆகும் செலவுகளைச் சமஸ்தானக் கணக்

கில் சேர்ப்பதில்லை. பலவிதமான பிரிவுகளுக்குரிய கணக்குகளில் நுழைக்கப்படுவது சம்பிரதாயம். இந்தச் சம்பிரதாயம் சமஸ்தானுபதி தமக்கு வேண்டியவர்களுக்குக் கொழுத்த சம்பளங்களில் பெரிய பெரிய உத்தியோகங்களைக் கொடுப்பதற்கும், அவர்கட்குப் பங்களாக்கள், கார்கள் வழங்குவதற்கும் பெரிதும் உதவியாயிருக்கும். இச்சமயம் அப்படி எதுவும் நடக்கவில்லை எனினும், வருமானத்தில் சமஸ்தானச் செலவு நான்கில் ஒரு பங்கு என்னும் உண்மையை நிர்வாக அறிக்கையே வெளிப்படுத்துகிறது. இப்படியிருக்க, வரவு செலவுத் திட்டத்தில், வருமானத்தில் பெரும்பகுதி மக்கள் நலங்கட்கே ஒதுக்கி வைக்கப்பட்டது என்று ஷை நிர்வாக அறிக்கை கூறுவது ஆச்சரியம். சமஸ்தானத்தில் உள்ள சிறுவர்—சிறுமியர்களில் நான்கில் ஒருபகுதியினருக்கே ஏதோ ஒருவகையான கல்விவசதி இருக்கிறது. சிக்கனம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டதால் சமஸ்தானுதிபதி ஓய்வு பெற்றுள்ள உத்தியோகஸ்தர்களின் உபகாரச் சம்பளங்களில் கைவைத்து விட்டாராம். அதுவும் காணுமையால் சாதாரண அந்தஸ்துடைய உத்தியோகஸ்தர் தலைகளில் கைவைத்துவிட்டாராம். ஒரு வேடிக்கை. இந்த வருஷத்திலேயே அவர் தம்முடைய பந்தயக் குதிரைப் பிரிவில் இரண்டு ஐரோப்பிய 'ஜாக்கி'களை நியமித்தார். இவர்களில் ஒவ்வொருவனுக்கும் சம்பளம் எவ்வளவு? சமஸ்தானத் தலைநகரில் உள்ள கலாசாலைத் தலைமையாசிரியரின் சம்பளத்தைவிட மும்மடங்கு அதிகம்!

"சமஸ்தானுதிபதிகள் தனிப்பட்ட முறையில் செய்யும் ஊதாரிச் செலவுகளை யெல்லாம் இந்திய அரசாங்கம் கண்டும் காணுததுபோல் நடித்துக்கொண்டு வருகிறது.

இதற்கு எத்தனையோ உதாரணங்களைக் காட்டலாம். இது மாத்திரமா ? சில சமயங்களில் இந்திய அரசாங்கத்தார் சமஸ்தானபதிகளின் ஆதரவைப்பெறத் தட்டிக் கொடுப்பதும் உண்டு!"

கர்னல் பவல் ஐந்தாவது நீதிபதி :

" ஆசியாவின் எதேச்சாதிகார அரசாங்கங்களின் நிஜ சொரூபத்தைப் பார்க்க வேண்டுமானால், இக் காலத்தில், இந்திய சமஸ்தானங்களிலே காணலாம். தேஜோமயமாக விளங்கும் மஹாராஜாக்கள், பொன் கொழிக்கும் செல்வச்சிறப்பு, கனவிலும் கவலை காணாத வைபவங்கள், போக போக்கிய விலாஸங்கள், மனம்போன போக்கில் செய்யும் செலவுகள், விசித்திரமான சம்பிரதாயங்கள், பொருளற்ற பழக்க வழக்கங்கள், மலைபோன்று விளங்கும் பிரமாண்ட மாளிகைகள், அந்தப்புர யுவதிகள் பெருக்கம், காமக்கிழத்திகளின் கோலாகலம், ஆண்களின் இச்சைகளை நிறைவேற்றுவதற்கே பெண்கள் சிருஷ்டி என்னும் மூட நம்பிக்கைகள், பிரஜைகளிடம் அலக்ஷிய புத்தி, பயங்கர தண்டனைகள், பொன்னும் நவரத்தினங்களும் செறிந்து கிடக்கும் பொக்கிஷங்கள், கவசம் பூண்ட குதிரைவீரர்கள், ஊழியம் புரியும் ஆண்—பெண் பரிவாரங்கள், காட்சிக்கினிய கிர்கிலைகள், புரோகித கோஷ்டிகள், விக்கிரக திணுசுகள், மதயானைக் கூட்டங்கள்—எல்லாம் இன்றைக்கும் சமஸ்தானங்களில் பிரத்தியக்ஷமாய்க் காணலாம்"

இத்தனை நீதிபதிகள் தீர்ப்புக்கூறிய பிறகு இனிமேல் தனியே குறிப்பிட வேண்டிய விஷயம் வேறு என்ன இருக்கிறது ?

இறுவாய்

ஸ்ரீ தேச சமஸ்தானங்களின் அடாவடி அட்டூழியங்கள் எத்தகையவை என்று ஒருவாறு உணர்ந்தோம். நல்வழிப்படுத்தும் கடமை பூண்ட பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அவைகளைப்பற்றிச் சிரத்தை காட்டுவதே இல்லை; பாராமுகமாகவே இருந்து வருகின்றனர். எங்கேனும் மிகுந்த நெருக்கடியான நிலைமை ஏற்பட்டு, இனி வேறு வழியில்லை என்று தெரிந்தால் மாத்திரமே கவனம் செலுத்த முற்படுகின்றனர். அதனால் மக்களுக்கு அணுவளவேனும் பயன் விளைவதில்லை. இதைப்பற்றிச் ரூட்கர் என்ன எழுதினார் என்று பாருங்கள்:

"கடைசியில் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் தலையிட்டு விசாரிக்க நேர்ந்தால், சமஸ்தானாதிபதி அவ்விசாரணைக்குட்படாமல் நழுவிக்கொள்ள முயல்வார்; உடனே பட்டந் துறக்க முற்படுவார். அவருக்கு அதுதான் சிறந்தவழி. தம்மீது சுமத்தப்படும் குற்றங்களை மறுக்க முடியாத நிலையில், குற்றவாளி என்று பெயரெடுப்பது இழிவு. அதனால் பல சங்கடங்களும் நேரும். பதவியைத் தியாகம் செய்தால் வேறு எத்தகைய குறைவும் இல்லை. மேலும், நிர்வாகப் பளுவைத் தாங்காமலே செலவுக்கு வேண்டிய பணம் எடுத்துக்கொள்ளலாம். மஹாராஜாக்களின் அக்கிரம-அட்டூழியங்கட்குக் கைம்மாறு கொழுத்த பணவேட்டை! பதவி

துறந்து பாரிஸ் முதலான நகரங்களில் உல்லாஸ வாழ்க்கை நடத்தலாம். ஏன் என்று கேட்பார் இல்லை. தமது ராஜரிக அந்தஸ்தைக் காப்பாற்றிவிட்டதற்காகப் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரை ஆயுள் முழுதும் போற்றிப் புகழ்ந்து வாழ்த்திக்கொண்டிருப்பார்.''

ரூட்கரின் வாக்கியங்களில் உள்ள ஒவ்வொரு எழுத்தும் உண்மை. இதற்கு உதாரணம் வேறு யாருடைய கதையையும் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியதில்லை. இந்தூர் மஹாராஜா துகோஜி ராவ் ஹோல்கார் வரலாறு ஒன்றே போதும். பாவ்லாக் கொலை வழக்கில் அவருக்கு ஏதேனும் சம்பந்தம் உண்டா இல்லையா என்று விசாரிக்கப் பிரிட்டிஷ் அரசாங்கம் விசாரணைக் கமிட்டியை நியமிக்க எண்ணியது. உடனே அவர் என்ன செய்தார்? அதை ஒப்புக்கொள்ளத் துணிவின்றிப் பட்டம் துறந்துவிட்டார். இவ்விதம் செய்ததால் அவருக்கு ஏதேனும் நஷ்டம் ஏற்பட்டதா? இல்லை. அவர் அன்று முதல் ஆண்டுதோறும் லக்ஷக்கணக்கான ரூபாய்களைப் பெற்றுக்கொண்டு உலகம் சுற்றினார். காதல் வேட்டையாடினார்.

இதனால் என்ன விளங்குகின்றது? பிரிட்டிஷ் அரசாங்கம் சமஸ்தானாதிபதிகளிடம் அதிகச் சலுகை காட்டி வருகிறது என்று விளங்கவில்லையா? சமஸ்தான விவகாரங்களில் தலையிடவும், மக்கள் விரும்பும் நலங்களைச் செய்ய வேண்டும் என்று மஹாராஜாக்களை வற்புறுத்தவும் பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்கு உரிமை இல்லையா? அதிகாரம் இல்லையா? எல்லாம் உண்டு. இதற்கு லிட்டன், ஸாலிஸ்பரி, கர்ஸன் பிரபுக்கள் வெவ்வேறு சமயங்களில் வெளியிட்ட பிரகடனங்களே போதிய அத்தாக்ஷி. நிற்க.

பிரிட்டிஷ் அரசாங்கத்தார் பல்வேறு சமஸ்தானங்களுடன் அவ்வக்காலத்தில் செய்து கொண்ட உடன்படிக்கைகள் எவையேனும் எதிலும் தலையிட முடியாதவாறு குறுக்கே நிற்கின்றனவா ? அப்படி இருப்பதாகவும் தெரியவில்லை. இந்தியா முழுவதும் முன்னேற்றம் அடைவதற்கு நாங்களே பொறுப்பாளிகள் என்று பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அடிக்கடி பறைசாற்றிக்கொண்டு வருகின்றனர். அப்படியானால் ஏழு கோடி சமஸ்தானக் குடிமக்களின் பரிதாப நிலைமைகளைக் கவனியாமல் இருப்பது தர்மமாகுமா ? நியாயமாகுமா ?

சுதேச சமஸ்தானங்களில் நடக்கும் நிர்வாக ஊழல்களை ஒழிக்கவேண்டிய பொறுப்புப் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரைச் சார்ந்தது என்பது தெளிவு. ஆனால், அவர்கள் ஏன் அவைகளை ஒழிக்க முற்படவில்லை ? ஹெரால்டு லாஸ்கி சொன்னதுபோல் "இந்திய சமஸ்தானாதிபதிகள் பிரிட்டிஷ் அரசாங்க பக்தர்களாய்--ஆதரிப்பாளர்களாய் இருப்பதே" இதற்குக் காரணமா ? அப்படியானால் இதைவிடக் கொடுமையும் துரோகமும் வேறு இல்லை என்றே சொல்ல வேண்டும்.

பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்குச் சமஸ்தானப்பிரஜைகளிடம் அலக்ஷிய புத்தி அதிகம்; அவர்களுடைய க்ஷேமலாபங்களில் அணுவளவும் அக்கரை இல்லை; இதை நிரூபிக்க எவ்வளவோ உதாரணங்கள் உண்டு. விரிவஞ்சி ஒரே ஒரு உதாரணம் மாத்திரம் இங்கே எடுத்துக் காட்டலாம். வட்டமேஜை மஹாநாட்டுப் பிரதிநிதிகளை நிர்ணயிக்கும் விஷயத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் என்ன செய்தது? இந்தியாவின் எதிர்கால அரசியலை நிர்ணயிப்பதற்கென்று ஒன்

தில்லை—மூன்று வட்டமேஜை மஹாநாடுகள் கூட்டப்பட்டன. இந்த மூன்று மஹாநாடுகளிலும், பெயருக்கேனும் சமஸ்தானப் பிரஜைகளின் பிரதிநிதி ஒருவரை நியமிக்கவேண்டுமே! இல்லை. ஆனால், சமஸ்தானாதிபதிகளுக்கு மாத்திரம் அழைப்புக்குமேல் அழைப்புக்கள் பறந்தன. சமஸ்தானப் பிரஜைகளைப் புறக்கணிப்பதும், சமஸ்தானாதிபதிகளைத் தலைமேல் தூக்கிவைப்பதும் பிரிட்டிஷாரின் நாட்பட்ட ராஜ தந்திரம். சமஸ்தானப் பிரஜைகள் பிரிட்டிஷ் இந்தியாவிலேனும் தங்கள் குறைகளையும், முறைகளையும் வெளியிட்டுக் கிளர்ச்சி செய்ய இடமுண்டா? அதுவுமில்லை. இங்கே சமஸ்தானாதிபதிகளின் பாதுகாப்புச் சட்டம் காத்துக்கொண்டிருக்கிறது. இது என்ன நீதி?

இன்னும் எவ்வளவு காலம் சமஸ்தானப் பிரஜைகள் நரகவேதனைகளை அநுபவித்துக் கொண்டே அடங்கி ஒடுங்கிக் கிடப்பார்கள்? அந்தக்காலம் மலையேறிவிட்டது. எவ்வளவு கட்டுத்திட்டங்களிருந்தாலும் அவர்களிடையே இன்று அரசியல் விழிப்பு ஏற்பட்டுவிட்டது. சுதந்தர வேட்கை மிகுந்துவிட்டது. ஒற்றுமை உணர்ச்சி மேலோங்கி வருகிறது. இந்நிலையில் பிரிட்டிஷ் அரசாங்கம் அவர்களை அலக்ஷியம் செய்வது அறிவுடைமை ஆகுமா? சமஸ்தானப் பிரஜைகள் இன்று ஜீவாதாரமான சொற்ப உரிமைகளையே கேட்கிறார்கள். பொறுப்பாட்சி முறை வேண்டும் என்கிறார்கள். அவர்கள் கேட்கும் இந்தக் கோரிக்கையை நிறைவேற்றினால் அதிருப்தியும், அமைதிக் குறைவும், கிளர்ச்சிவேகமும் அடங்கிவிடக்கூடும். இன்றேல் நகத்தால் கிள்ளவேண்டியதைக் கோடரிகொண்டு வெட்டவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும்.

எப்பொழுதும் பிரிட்டிஷ் ராஜதந்திரத்திற்குத் தீர்க்காலோசனை குறைவு. பட்டே அறியும் முட்டாள்தனம் அதைவிட்டு நீங்கவில்லை. சமஸ்தானங்களைச் சேராத இந்திய மக்கள் பல ஆண்டுகள்வரை என்ன கேட்டனர்? குடியேற்ற நாட்டந்தஸ்து வேண்டும் என்றே கேட்டுக் கொண்டு வந்தனர். பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அந்தக் கோரிக்கையை நிராகரித்தனர். பின்னர் என்ன நிகழ்ந்தது? பிரிட்டிஷ் ஏகாதிபத்திய முறையின் சம்பந்தமே வேண்டாம்; பூரண சுயராஜ்யமே வேண்டும் என்ற கிளர்ச்சி நாடெங்கும் காட்டுத் தீப்போல் பரவிவிட்டது. எனவே சமஸ்தானாதிபதிகளும் காலப்போக்கை ஒட்டி நடந்துகொள்ளவேண்டியதுதான் புத்திசாலித்தனம். சமதர்மம் —பொதுவுடைமை வாதங்கள் ஆக்கம் பெற்று வரும் காலம் இது. இந்நிலையில் மக்கள் விருப்பங்கட்கு மாறாக—ஏதேச்சாதிகாரத் திமிருடன் நிர்வாகம் நடத்துவது அறிவுடைமை ஆகாது.

சமஸ்தானப் பிரஜைகளாயினும் சரி, பிரிட்டிஷ் இந்தியப் பிரஜைகளாயினும் சரி, இன்று எல்லாரும் வேண்டுவது ஒன்றே. அது சுயராஜ்யம்—ஜனநாயக ஆட்சி. ஒன்றே முறை. அது சத்திய அஹிம்ஸா முறை—சாந்த முறை. ஒன்றே பரீக்ஷை. அது அக்கினி பரீக்ஷை. இவ்வுண்மைகளைப் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரும், சுதேச சமஸ்தானாதிபதிகளும் நெஞ்சில் நிறுத்திக்கொள்ளவேண்டும்.

அநுபந்தம்

[ஜான் கன்தர் பேர்பெற்ற அரசியல் அறிஞர். ஆங்கில நூலாசிரியர். இவர் எழுதிய "ஐரோப்பாவின் உட்புறம்" என்னும் நூல் லக்ஷக்கணக்கான பிரதிகள் வெளிவந்தன. அப்படியே "இந்தியாவின் உட்புறம்" என்னும் நூலையும் எழுதியிருக்கிறார். சுதேச சமஸ்தானாதிபதிகளைப்பற்றி அவர் கண்டறிந்த சில உண்மைகள் கீழே அநுபந்தமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.]

மைசூர் மிருகக்காட்சிச்சாலையில் உள்ள வட்டத் தலைப்பாகைச் சேவகர்கள், ஓசைப்படாமல் மெதுவாக அடியெடுத்து வைக்கும் ஜந்துவைக் காட்டுகிறார்கள். அந்த ஜந்து அபூர்வமானது. அதை நாம் எங்கும் பார்த்திருக்கமாட்டோம். ஆனால் ஷை காட்சிச்சாலையில் மட்டும் அந்த விந்தை ஜந்துவை எல்லாரும் பார்க்கலாம்.

இந்தியாவில் உள்ள மிருகக்காட்சிச்சாலைகளில் அடிக்கடி புலிகளுக்கும் சிங்கங்களுக்கும் சம்பந்தம் ஏற்படுத்துவது உண்டு. இதன் பயனாக அவைகளுக்குச் சந்தானமும் ஏற்பட்டு வருகிறது. ஆண் புலிக்கும் பெண் சிங்கத்திற்கும் ஏற்படும் சம்பந்தத்தால் உண்டாகும் சந்ததிக்குப் "புலிச்சிங்கம்" என்றும், ஆண் சிங்கத்திற்கும் பெண் புலிக்கும் ஏற்படும் சம்பந்தத்தால் உண்டாகும் சந்ததிக்குச் "சிங்கப்புலி" என்றும் சொல்லுகிறார்கள். இவை மிகவும்

விசித்திரமான ஜந்துக்கள். ஆனால், நீண்ட நாள் வாழ்வதில்லை.

இக்காலத்தில் இந்தியாவில் எங்கே பார்த்தாலும் இம் மாதிரியான பரிசோதனைகளே "மனித அரசியல் மிருகக் காட்சிச்சாலை"களில் ஆரம்பமாகியிருப்பதாகத் தெரிகிறது. இந்த ஆச்சரியமான சந்தான உற்பத்திபற்றிய ஆராய்ச்சிகள் வைஸிராய்—கவர்னர்களின் மாளிகைகளிலும், மஹாராஜாக்களின் அரண்மனைகளிலும், காங்கிரஸ் ஊழியர்களின் வீடுகளிலும் நடந்து கொண்டிருக்கின்றன. இந்தியாவிலுள்ள பிரிட்டிஷார்-கூண்டுகளின் திறவுகோல்களை வைத்திருக்கும் அதிகாரிகள்—சிங்கமும் புலியும் ஒன்றாகச் சேர்ந்து குடித்தனம் நடத்தவேண்டும் என்று முயற்சி செய்துகொண்டு வருகிறார்கள். இதை வெளிப்படையாக—வேறுவிதமாகச் சொல்லவேண்டுமானால் சுதேச சமஸ்தானங்களையும், நேரடியான பிரிட்டிஷ் அதிகாரம் உள்ள 11 மாகாணங்களையும் ஒன்றாக முடிபோடுவதற்குப் பாடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்றே சொல்லவேண்டும்.

இந்த ஏற்பாட்டுக்குச் சமஷ்டி (பெடரேஷன்) என்று பெயர். நான் இரண்டு மாதகாலம் இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்தேன். உண்மை நிலைமையை உணர்ந்தேன். எதையும் மிகைப்படுத்தியோ குறைத்தோ சொல்லும் உத்தேசம் எனக்கில்லை. இந்தியாவின் அரசியல் உலகத்திலுள்ள சிக்கலான பிரச்சினைகளில் இது ஒன்று எனலாம். உலக மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பகுதியினரின் ஜீவாதாரப் பிரச்சினையாகும் இது. 35 கோடி மக்களின் வாழ்க்கை இதன்மீதே நிர்மாணிக்கப்படுகிறது.

அநேகமாய் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் எதிர்கால நிலைமையும் இதைப் பொறுத்தே இருக்கும் என்றும் சொல்லலாம். இந்தியா, பிரிட்டிஷ் இந்தியா—சுதேச சமஸ்தானங்கள் என்று இரண்டு விதமாகப் பிரிந்திருக்கிறது. பிரிட்டிஷ் இந்தியா 10,95,000 சதுர மைல்கள். சுதேச சமஸ்தானங்களின் மொத்த விஸ்தீரணம் 7,12,000 சதுர மைல்கள்.

இந்தியாவில் மொத்தம் 563 சமஸ்தானங்கள் இருக்கின்றன. பிரிட்டிஷ் சட்டம் அவ்விடங்களில் செல்லாது. சமஸ்தானங்களுக்குச் சொந்தமான அரசாங்கங்கள், பிரதம மந்திரிகள், நீதி மன்றங்கள், போலீஸ்—ராணுவப் படைகள் இருக்கின்றன. சில விடங்களில் கடல் சுங்கம், சொந்த ரயில்வே, சொந்த நாணயம், சொந்தத்தபால் முத்திரை முதலியனவும் இருக்கின்றன. இந்த மஹாராஜாக்களின் சமஸ்தானங்களில் முக்கிய பிரச்னை அநேகமாய் அவர்களுடைய எதேச்சாதிகாரம்பற்றியே இருக்கும். இந்தியாவில் 8,00,00,000 ஜனங்களின் வாழ்க்கைமீது சமஸ்தானாதிபதிகளின் அதிகாரம் நடக்கிறது. எத்தனை தடைகளும் நிர்ப்பந்தங்களும் இருந்தாலும், பிரிட்டிஷ் இந்தியாவில் ஜனநாயக தர்மம் கொஞ்சம் கொஞ்சமாய் மேலோங்கி வருகிறது. ஆனால், சுதேச சமஸ்தானங்களில் நிலவும் எதேச்சாதிகாரம் குறைவதோ அழிவதோ இன்றி அப்படியே இருக்கிறது. எல்லா அதிகாரங்களையும் சமஸ்தானாதிபதிகளே வைத்துக்கொண்டிருக்கின்றனர். இந்தியாவில் ஐந்தில் மூன்று பங்கினர், பலவிதமான கஷ்ட நஷ்டங்கள்-இடையூறுகளுக்கு மத்தியில் அரசியல் துறையில் முன்னேறிச் செல்ல அடியெடுத்து வைத்துக்கொண்டிருக்

கின்றனர். மற்ற இரண்டு பங்கினர் எவ்வித மாறுதலு மின்றி அப்படியே இருக்கின்றனர். இது பெரிய ஆச் சரியமான நிலைமை என்றே சொல்லவேண்டும்.

சுதேச சமஸ்தானங்கள் பலவற்றில் நீதிபெறுவதற் காகக் கோர்ட்டுகளுக்குப் போவது, தம் கக்ஷியை எடுத் துச் சொல்லுவது முதலிய காரியங்களுக்கு இடமே இல்லை. 40 சமஸ்தானங்களில் மாத்திரமே சர்க்கார் நிர்வாகப் பிரி வும், நீதிப் பிரிவும் தனித்தனியாக இருக்கின்றன. சில சமஸ்தானங்களில் வெளியிலிருந்து வரும் பத்திரிகைகளு க்கு அநுமதி கிடையாது. அநேக சமஸ்தானங்களில் பிரஜைகளின் வாழ்வும் தாழ்வும் மகாராஜாக்களின் கைகளிலேயே இருக்கின்றன. சில சமஸ்தானங்களில் பிர ஜைகளை அடிமைகளைப்போல் விற்கவும் வாங்கவும் சமஸ் தானதிபதிகளுக்கு அதிகாரம் உண்டு. அதுவும் டம்பாச் சாரிகளான ராஜாக்களிடமே அந்த அதிகாரம் இருக் கிறது. மகாராஜாக்கள் தம்மிஷ்டம்போல் செலவு செய்ய லாம். கேள்வி முறை கிடையாது. ஏதோ சில சமஸ்தானங் களில் மாத்திரம் பிரிட்டிஷ் இந்தியாவில் உள்ள முறைப் படி ஆட்சி நடக்கிறது எனலாம்.

இக்கால உலகத்தில் விசித்திர மனிதர்களில் ஒருவராக விளங்குபவர் * ஆள்வார் மகாராஜா. இவர் சுபாவத்தில் கொஞ்சம் சாது. மற்ற விஷயங்களில் அசாதாரண அபிப் பிராயம் உள்ளவர். இவருடைய உத்தேசங்கள் நல்லவை தான்; ஆனல் அவைகளை நிறைவேற்றி வைக்கும் முறை கள் மாத்திரம் மிகவும் கொடுமையானவை. தவறான வழி

---

* இவர் காலஞ்சென்றார்.

யில் செல்லுதல், விபரீதமான கர்வம், மனக்கடுமை முத லிய குணங்கள் அவரிடம் அதிகம். தம்மை யாரும் தொடக் கூடாது என்ற குறுகிய எண்ணம் அவருக்கு உண்டு. ஒரு விருந்தில் உட்கார்ந்திருந்தபோது பக்கத்திலிருந்த வெள்ளை மாது ஒருத்தி அவருடைய விரலிலிருந்த மோதிரத்தைப் பார்த்துக்கேட்டாள். மகாராஜா அதைக் கழற்றிக் கொடுத் தார். அப்பெண் அதைப் பார்த்துவிட்டுத் திருப்பிக் கொடுத் தாள். அதை அவர் வாங்கி வேலைக்காரனைக் கூப்பிட்டு, அவனிடம் கொடுத்து அலம்பச் சொன்னார்.

ஆள்வார் மகாராஜா ஒரு சமயம் ஐரோப்பாவில் சுற் றுப் பிரயாணம் செய்துகொண்டிருந்தார். சமஸ்தானத்தில் தம்முடைய குரு இறந்துவிட்டதாகச் செய்தி கிடைத்தது. அவரை மயானத்திற்குக் கொண்டுபோகுமுன் ஒரு முறை பார்க்கவேண்டும் என்று நினைத்தார். உடனே தாம் வரும் வரை பிணத்தை "ஸ்பிரிட்டி"ல் போட்டு வைக்கவேண்டும் என்று சமஸ்தான அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டார். இதற்காக அவர் எவ்வளவோ பெருமை பேசிக்கொண்டார். பிறகு தாம் வரவேண்டிய ரயில்வண்டி —தமக்காக ஸ்பெஷலாக ஏற்பாடு செய்யப்பட்ட வண்டி—தவறிவிட்ட தால் வர முடியவில்லை என்று பம்பாயிலிருந்த நண்பர் ஒரு வருக்குத் தந்தி அடித்தார். இது உண்மை அன்று. சாதா ரண ரயில் வண்டி தவறிவிடுவது சகஜம். தமக்காகவே ஏற் பாடு செய்த ஸ்பெஷல் வண்டி எப்படித் தவறும்? உண்மை வேறு. இவர் இரண்டொருதடவை ரயில்வேக்காரர் களிடம் பண விஷயத்தில் வாக்குத் தவறிவிட்டார். அதனால் கம்பெனியாரின் நம்பிக்கையை இழந்தார். எனவே ஸ்பெ ஷல் வண்டி ஏற்பாடு நடைபெறவில்லை. சமஸ்தான வரு

மானத்தில் பெரும் பகுதியை இவரே செலவு செய்து கொண்டிருந்தார்.

டில்லிக்கும், ஜெய்ப்பூருக்கும் ஒருபெரிய ரஸ்தா போடவேண்டும் என்று இந்திய அரசாங்கம் தீர்மானித்தது. அம்முயற்சியிலும் இறங்கியது. இது ஆள்வார் மகாராஜாவுக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. அந்த ரஸ்தா ஆள்வார் சமஸ்தானத்தின் வழியாகப் போகவேண்டும். எனவே எவ்வளவு தடைகளை உண்டாக்கவேண்டுமோ அவ்வளவையும் செய்தார். கடைசியில் ரஸ்தா போடப் பட்டு விட்டது. மகாராஜா என்ன செய்தார்? இரவில் ஆட்களை ஏவி ரஸ்தாவை அழித்து விட்டார். அதாவது கற்களையும் பாறைகளையும் போட்டு அடைத்துவிட்டாராம்.

வேட்டையாடுவதில் அவருக்கு அதிக ஆசை. குறி பார்த்து அடித்தாரானால் அந்த மிருகம் இறந்துவிட்டதென்றே தீர்மானித்து விடலாம். இவருடைய வேட்டை என்றால் சமஸ்தானப் பிரஜைகளுக்கு—முக்கியமாய்ப் பெண்களுக்கு— கொஞ்சங்கூடப் பிடிக்காது. புலி வேட்டைக்குப்போய் அலேவார். புலியிருக்குமிடம் அறிந்து சிறிது தூரத்தில் நிற்பார். புலிக்கு கவர்ச்சி உண்டாகப் பால்மணம் மாறாத பச்சைக் குழந்தையை இரையாகக் காட்டச் செய்வார். இது அவருடைய வழக்கம். பெற்றோரும், மற்றோரும் தலையிலும்மார்பிலும் அடித்துக்கொள்ளுவார்கள். மகாராஜா மாத்திரம்சாந்தமாய் 'ஒன்றும்பயமில்லை' என்று சமாதானம் சொல்லுவார்! அந்தப் புலி குழந்தைமீது பாய வரும்போது மகாராஜா அதைச் சுட்டுக் கொல்லுவார். இது அவருக்கு விநோதப் பொழுதுபோக்கு! சிற்சில சமயங்களில் அதிக உற்சாகமாய் வேட்டையாட நினைப்பார். காடுகளையும், காடு

கள் சூழ்ந்த கிராமங்களையும் தீயிட்டுக் கொளுத்தச் சொல்லுவார். பாவம், அந்தக் கிராம ஜனங்கள் வயிறெரிந்து தங் குவதற்குக் குடிசையின்றி இங்கும் அங்கும் ஓடி அலைவார்கள்.

ஆள்வார் மகாராஜா எப்பொழுதும் பிரிட்டிஷ் சர்க்காருடன் சச்சரவிட்டுக்கொண்டே இருந்தார். என்றும் பழிதீர்க்கவேண்டும் என்ற தோரணையிலேயே நடந்து கொள்ளுவது சரியன்றென ஒரு பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர் அவருக்கு ஆலோசனை கூறினார். சம்பாஷணைக் கிடையே அந்த உத்தியோகஸ்தர் பழி என்ற வார்த்தையை அடிக்கடி உபயோகித்துக் கொண்டிருந்தார்.

சிலநாளைக்குப் பின் அதே உத்தியோகஸ்தர் ஆள்வாரைப் பார்க்கவந்தார். மகாராஜா அவரைக் கண்டதும் பரபரப்புக்காட்டினார். உடனே "நீர் என்னசொல்லவந்தீர் என்பது எனக்குத் தெரியும்" என்று சொல்லிக்கொண்டே மேஜைக்கருகில் சென்று, காகிதத்தின்மீது 'பழி' என்று எழுதி அந்த உத்தியோகஸ்தருக்குக் காட்டினார். அவர் ஒன்றும் பேசவில்லை. அந்த உத்தியோகஸ்தர் போலோ ஆட்டத்தில் விருப்பம் உள்ளவர். அவருடன் மகாராஜா போலோ விளையாடினார். மகாராஜா உபயோகித்த குதிரை அவ்வளவு அநுகூலமாயில்லை. எனவே அதன் மீது மண்ணெண்ணெய் ஊற்றிக் கொளுத்திவிட உத்தரவிட்டார்!

கடைசியில் பிரிட்டிஷ் அரசாங்கம் ஆள்வார் மகாராஜாவைச் சிம்மாசனத்தினின்று இறக்கியது. இதற்குக் காரணங்கள் பல. அவற்றுள் ஜனங்கள் புரட்சி செய்தது முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது.

மகாராஜாக்கள் எல்லாருமே இப்படித்தான் என்று பொதுவாகக் குறிப்பிடுவதற்கில்லை. மகாராஜாக்களில் மிகவும் பொறுப்பு வாய்ந்தவர்களும் உண்டு. அவர்களில் கிழவரான * பரோடா மகாராஜாவும் ஒருவர். ஆனால் மத்திய இந்தியாவில் உள்ள சமஸ்தானாதிபதிகளில் காட்டு மனிதர்களைவிட மோசமானவர்களும் இருக்கிறார்கள். லக்ஷக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள வைரங்களை அணிந்து கொள்ளும் மகாராஜாக்களும் இருக்கிறார்கள். ஏதோ சில நூறுகள் வருமானமுள்ள ராஜாக்களும் இருக்கிறார்கள்

சமஸ்தானாதிபதிகளின் பெயர்களைப் பார்த்தால் மிகவும் தமாஷாக இருக்கும். சிலருடைய பெயர்கள் வாயில் நுழையா. சிலருடைய பெயர்களுக்கு 108 ஸ்ரீகள் போட வேண்டிய அவசியமும் உண்டு.

ஜெயப்பூர் மகாராஜா பேர் பெற்ற போலோ ஆட்டக்காரர். இவருடைய பெயருக்கு முன் ஸவா...........என்று இருக்கவேண்டும். ஸவா என்றால் கால் என்று அர்த்தம். அதாவது ஒரு மகாராஜா இல்லை $1\frac{1}{4}$ மகாராஜா என்று அர்த்தம்.

அவுந்து மகாராஜா சூரிய நமஸ்காரங்களைப் பற்றி ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறார். மற்றொரு மகாராஜாவுக்கு வயது 35. இதற்குள் 500 புலிகளைக் கொன்றதாகக் கூறிக்கொள்ளுகிறார். சில மகாராஜாக்கள் தங்கள் சமஸ்தானங்களில் மதுவிலக்குச் செய்திருக்கிறார்கள். சில மகாராஜாக்கள் சீமைச் சாராயப்புட்டிகளைக் காலி செய்து கொண்டே இருக்கிறார்கள்.

---

* இவர் சமீபத்தில் காலஞ்சென்றார்.

கூச்பிஹார் மகாராஜா அந்நியநாடுகளில் கல்வி பயின்றவர். தரங்கதரா மகாராஜா ஐந்து தடவை கலி யாணம் செய்துகொண்டார். இன்னொரு மகாராஜாவுக்கு 100 பேர் பிள்ளைகுட்டிகள்.

பரோடா மகாராஜா, ஹைதராபாத் நைஜாம் போன்ற சில சமஸ்தானாதிபதிகளுக்குச் சொந்த ரயில்வேக்கள் இருக்கின்றன. ஜெய்ப்பூர், உதயப்பூர், கச், ஹைதராபாத் சமஸ்தானங்களுக்குச் சொந்த நாணயங்கள் இருக்கின் றன. ஹைதராபாத், பாடியாலா, ஜிந்த், குவாலியர் முத லிய சமஸ்தானங்களுக்குச் சொந்த தபால் தலைகள் இருக் கின்றன. மற்றும் சில ராஜாக்கள் இருக்கிறார்கள்—அவர் கள் ஒரு தடவையாவது ரயில் வண்டிகளையோ, ட்ராம் வண்டிகளையோ பார்த்திருக்கமாட்டார்கள். போதுமான அளவு செலவுக்குப் பணம் கையில் இல்லாத ராஜாக்களும் சிலர் இருக்கிறார்கள்.

பல மஹாராஜாக்களுக்குக் குதிரைப் பந்தயங்களில் அதிகமோகம். ஒருபாடகியான மும்தாஜ் என்ற பெண்ணுக் காக இந்தூர் மகாராஜா நாட்டைத்துறந்தார். கொண்டால் சமஸ்தானாதிபதி எடின்பரோ சர்வகலாசாலையில் எம். டி. பரீக்ஷை தேர்ந்து, ஆயுர்வேத வைத்திய சம்பந்தமான ஆராய்ச்சி நூல்களை எழுதினார்.

இந்திய சுதேச சமஸ்தானங்களில் ஹைதராபாத் மிகவும் பெரியது. ஆஸ்திரியா, ஹங்கேரி ஆகிய இரு நாடுகளின் ஜனத்தொகை எவ்வளவோ, அவ்வளவிருக் கிறது ஹைதராபாத் ஜனத்தொகை. மிகச் சிறிய சமஸ் தானங்களும் உண்டு. பாங்கா சமஸ்தான ஜனத்தொகை 1316. இதன் விஸ்தீரணம் 5 சதுர மைல்களே. இன்

ளொரு சமஸ்தானம் இருக்கிறது. இதன் பெயர் பல்பாரி. விஸ்தீரணம் 1·65 சதுர மைல். இதன் வருஷ வருமானம் 80 ரூபாய். செலவும் 80 ரூபாய்களே.

இந்திய சமஸ்தானாதிபதிகளுக்குச் சென்ற பதினைந்து ஆண்டுகளாக ட்ரேட் யூனியன் போன்ற ஒரு சங்கம் இருக்கிறது. இதற்கு நரேந்திர மண்டலி என்று பெயர். பதினொன்று அல்லது அதற்கு அதிகமான குண்டு மரியாதைகளைப் பெறுகிறவர்கள் எல்லாரும் இதில் அங்கத்தினர்கள். அவர்களுக்கு வாக்குரிமை இருக்கிறது. இந்த மண்டலி இதுவரை சாதித்த காரியம் எதுவும் இல்லை. இதைச் சேர்ந்த அங்கத்தினர்களுக்குள் ஒருவருக்கொருவர் பொறாமை அதிகம். இந்த மண்டலிக்குச் சட்டம் செய்யும் அதிகாரம் இல்லை. மைசூர், ஹைதராபாத் சமஸ்தானங்கள் இதில் என்றைக்காவது ஒரு நாள் கலந்து கொள்ளும்.

மஹாராஜாக்கள், தங்கள் வைர ஹாரங்களையும், விலை ஏறப்பெற்ற மற்ற ஆபரணங்களையும், அந்தப்புரங்களையும், 2, 3 நூற்றாண்டுகளாக வரும் பரம்பரைப் பழக்க வழக்க சம்பிரதாயங்களையும் பகிரங்கப்படுத்திக்கொள்ளுவதில் அதிக ஆசையுடையவர்களாயிருக்கிறார்கள். இவர்கள் பெரிய கௌரவமாக நினைப்பது பீரங்கி மரியாதை. எத்தனை குண்டுகள் நமக்காகப் போடப்படுகின்றன என்பதில் மிகுந்த சிரத்தையும் உணர்ச்சியும் காட்டுவார்கள். பீரங்கி குண்டுகளில் ஒன்று குறைந்தாலும் தங்கள் வாழ்வே போய்விட்டதாக வருந்துவார்கள்.

இந்தப் பீரங்கி குண்டுகளின் தொகை அந்த அந்த ராஜாக்களின் அதிகாரம், ராஜ்யத்தின் விஸ்தீரணம் முத

வியவற்றின் அறிகுறியாகும். பீரங்கி வெடிகளின் ரூபத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் தங்களுக்கு வந்தனம் செலுத்துவதாக மகாராஜாக்கள் நினைத்துக்கொள்ளுகிறார்கள்! டில்லியில் நரேந்திர மண்டலி கூடும்போது ராஜாக்கள் வருவார்கள். அவர்கள் டில்லி ரயில்வே பிளாட்பாரத்தில் கால் வைக்கும்போது அவரவர்களுக்குரிய மரியாதை குண்டுகளின் முழக்கம் கேட்கும். அது அவர்களுக்கு மிகவும் குதூகலமான திருநாள். அந்தப் பீரங்கிகளின் முழக்கம் கேட்டு ராஜாக்களின் உள்ளம் மகிழ்ச்சி பொங்கும்.

இதில் இன்னொரு சம்பிரதாயம் உண்டு. ஞாயிற்றுக் கிழமை மரியாதை குண்டு போடக்கூடாது. ஏதேனும் காரியமாய் குண்டு மரியாதை ராஜாக்கள் ஞாயிற்றுக் கிழமையில் டில்லிக்கு வர நேர்ந்தால், அன்றைக்கு ஊருக்குள் பிரவேசிக்கமாட்டார்கள். ரயில்வே பிளாட்பாரத்திலேயே தங்கி, மறுநாள், குண்டுமரியாதை பெற்றுக் கொண்ட பிறகே ஊருக்குள் வருவார்கள்.

“விநோதன்” பிரஸ் சென்னை.

அம்பீஸ் கபே


உயர்ந்த சாப்பாடு : ஒப்பற்ற சிற்றுண்டிகள்

சென்னையிலும், வேலூரிலும் அறுசுவை உண்டியும் ஆனந்தமான சிற்றுண்டிகளும் அளிப்பதில் பெரும் புகழும்பெற்றது

அம்பீஸ் கபே

1923-ல் ஸ்தாபிதமானது. டெலிபோன் நெ. 2453.

[புரோப்ரைடர் கே. எஸ். அம்பி ஐயர்]



டீ-டின்னர்பார்ட்டிகள், தோட்டவிருந்து முதலிய வைபவங்களுக்கு எங்கள் ஏற்பாடுகள் தனிச்சிறப்பு வாய்ந்தவை

குறிப்பு:—சிற்றுண்டி கூபன் டிக்கட்டுகள் கிடைக்கும்.

தலைமை ஆபீஸ்:
அம்பிகா பில்டிங்
10. பாரக்ஸ் மைதானரோடு,
வேலூர்

கிளை:
6 & 8–9 பிராட்வே,
சென்னை.